Acc. 16223.

# தமிழ்ப் பூங்கோவில்



MANUSCRIPTS LIB
RECEIVE
JAN
MADRAS

மகள் காரியாலயம் சென்னை 4.

# தமிழ்ப் பூங்கோவில்

ஆசிரியர் :

**வித்துவான் இ. மு. ஆறுமுகச் செட்டியார்**

தலைமைத் தமிழாசிரியர்,

சர். தியாகராயர் கல்லூரிப்பள்ளி,

வண்ணாரப்பேட்டை, சென்னை.

**கலைமகள் காரியாலயம்**

மயிலாப்பூர் : : சென்னை-4.

உரிமை பதிவு] [ரூ. 1-15

முதற் பதிப்பு—நவம்பர், 1959.
மறு பதிப்பு—ஜூன், 1960.
மறு பதிப்பு—ஜூன், 1962.

Approved by the Text Book Committee
for class use-Vide Fort St. George Gazette
page 19, dated 18-5-1960.

Paper Used :
D/Cr. 24 Lbs. White Printing

---

தார்வின் பிரிண்டிங் ஒர்க்ஸ், எழும்பூர், சென்னை-8.

# முன்னுரை

தமிழ் புலவரைப் பரவுவதே தமிழைப் பரவுவ தாகும். தமிழுக்கு அழகிய கோவிலாக உள்ளது இப்புத்தகம் என்ருல் தமிழ்ப் புலவர் சிலரின் வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது இது என்பதே குறித்த பொருளாகும். இந்தப் புத்தகத்தில் சில தமிழ்ப் புலவர்களைப் பற்றிய வரலாறுகள் காணப் படுகின்றன. புலவர்களைப் பற்றி அல்லாமல் அவர்களோடு தொடர்பு கொண்டவர்களின் வரலாறுகளையும் அவர்கள் இருந்த காலத்து நிலையினையும் நாம் இந்தப் புத்தகத்தின் மூலம் உணர்ந்துகொள்ளுகிரும்.

புலவரைத் தேவராக்கி, வள்ளல்களைக் கொடை வீரராக்கித் தெள்ளத் தெளிந்த தேன் மதுரத் தமிழில் சிறுசிறு வாக்கியங்களில் படிப்போர்க்கு இன்பத்தையும் தமிழிலக்கியத்தை மேலும் மேலும் பயில வேண்டும் என்ற ஆர்வத்தையும் அளிக்குமாறு ஆசிரியர் இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கும் எழுத்தோவியங்கள் பாராட்டுக்குரியன.

பதிப்பாளர்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | புலவர் பெருமை | ... | 1 |
| 1. | காஞ்சிக் கனி | ... | 3 |
| 2. | வளமான வாழ்வு | ... | 19 |
| 3. | மதுர கவி | ... | 30 |
| 4. | முட்டைக்குத் தோற்ற புலவர் | ... | 38 |
| 5. | கவியரசரான புவியர்சர் | ... | 61 |
| 6. | தெய்வப் பரிசு பெற்றவர் | ... | 71 |
| 7. | எட்டயபுரத்து முத்து | ... | 96 |
| 8 | கற்புக் கதிர் | ... | 102 |
| 9. | ஆந்திரத்தில் அருந்தமிழ் | ... | 108 |

# புலவர் பெருமை

நீண்ட நாட்களுக்கு முன் மக்கள் விலங்குகளைப் போல உண்டனர்; உறங்கினர். அவர்களது இயல்பு சிறிது சிறிதாகப் பண்பட்டது. அதன் பின் அவர்கள் மக்களாக வாழத் தொடங்கினர். அதற்குக் காரணம் புலவர்கள். அவர்கள் தோன்ருதிருப்பின் மக்கள் மாக்களாகவே வாழ்ந்திருப்பர்.

புலவர்கள் இன்னிசை பாடி இன்பம் தந்தனர்; அறம் உரைத்து நல்வாழ்வு தந்தனர். அவற்ருல் இன்பப் பொய்கையும் அறிவுக் கதிரும் ஒழுக்க வழியும் உண்டாயின. புலவர்கள் சொல்லளவில் நிற்காமல் செய்கை அளவில் நின்றனர். அவர்கள் தாங்கள் அடைந்த பொருளை வேண்டியோர்க்குக் கொடுத்துவிட்டு, ஒருவேளை உணவு இன்றியும் சில பல நாட்களைக் கழித்தனர். அவர்கள் தெய்வ சக்தியையும் மக்கள் பண்பையும் பெற்றிருந்தனர். புலமை வாய்ந்த அவர்களுடைய பொன்னுடல்கள் மறைந்தும் புகழ் வளர்கின்றது.

அத்தகைய சான்ருேர்களுடைய வரலாறுகள் முழுவதையும் அறிய முடியவில்லை. பல ஆண்டு களுக்குப் பின் அவர்கள் வரலாறுகள் எழுதப் பட்டன. அவற்றில் புலவர்களின் மனைவி, மக்கள், தொழில் முதலியவற்றைக் குறிப்பிடவும் இல்லை. புலவர்களைப்பற்றிய சில குறிப்புக்களே எழுதப்

பட்டன. பெரிது பெரிது உலகம் பெரிது. உலகம் அரசர்க்கு அடக்கம். அரசர் புலவர்க்கு அடக்கம். அது சென்ற காலத்தின் சிறப்பு.

புலவர்களிடத்தில் கணக்கற்ற நற்பண்புகள் வளர்ந்தன. அவற்றுள் சிறந்த பண்பு நன்றி மறவாமை. அதனுல்தான் பிறர் கொடுத்த ஒரு வேளைக் கூழுக்கும் ஒரு முழத் துணிக்கும் புலவர்கள் அவர்களைப் பாடினர். நன்றியைச் சுமந்து சில புலவர்கள் தம் பொன்னுயிரையும் நன்றி செய்தவர்க்குக் கொடுத்தனர். மற்றும் சில புலவர்கள் வேறு பல வழிகளால் உலகுக்கு வேண்டியவற்றைச் செய்தனர். அவற்றைப் பின்வரும் வரலாறுகளிலே காண்போம்.

# 1. காஞ்சிக்களி

கல்விப்பேறு

**தொ**ண்டை நாட்டுத் தோகையின் முகம் காஞ்சீ புரம். வரதராசப் பெருமாள் கோயிலும் ஏகாம்ப ரேசுரர் கோயிலும் அவளுடைய கண்கள். முற் காலத்தில் பல்லவர்க்குத் தலைநகராக இருந்த பழம் பெருமையும் இக்காலத்தில் நெசவுத் தொழிலுக்குப் புத்துயிரளிக்கும் புதுப் பெருமையும் அதற்குண்டு.

அத்தகைய காஞ்சீபுரத்தில் குமாரசுவாமிகள் என்ற ஒப்பற்ற வீரசைவர் ஒருவர் விளங்கினர். அக் காலம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு. அவர் வேளா ளர்க்குத் தீட்சா குரு. சிவப்பிரகாசர், வேலையர், கருணைப்பிரகாசர் என்ற செந்தமிழ் மணிகள் அவ ரிடத்தில் தோன்றின. 'மூன்று செந்தமிழ்க் குழந்தை களை ஒரு தாய் வயிற்றில் காணவேண்டும்' என்று தமிழணங்கு எண்ணினள் போலும்! அப்பிள்ளை களுக்கு அவரது தந்தையாரே இலக்கிய இலக் கணங்களைக் கற்பித்தார். சமயக் கல்வியும் அவர் கட்குப் போதிக்கப்பட்டது. அவரது தந்தையாரே அவர்கட்குச் சமய தீட்சையும் செய்தார். பிள்ளைகள் சிறுவராய் இருந்த போதே அவரது தந்தை வீட்டு லகை அடைந்தார். கலங்கரை விளக்கம் இழந்த மாலுமிகள் போல் சிறுவர் கலங்கினர். அவர்களது

கல்விக் கப்பல் கரைகாணுது தவித்தது. சிறுவர் மூவரும் திகைத்து நின்றனர். தந்தையின் பிரிவால் மிகவும் வருந்தினர். அவர் தந்தை மட்டும் அல்லர்; நல்லாசிரியரும் அவரே. ஞான குருநாதரும் அவரே. அத்தகைய பெரியோர் பிரிவு பெருந் துன்பந்தான் செய்யும்.

சிவப்பிரகாசர் இலக்கிய இலக்கணப் புலமை பெற்றுப் பாடும் வன்மை பெற்றிருந்தும் மேலும் படிக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்க்கு உண்டாயிற்று. "யாரிடம் செல்வது? எதனைப் படிப்பது?" என்று ஆழ்ந்து நினைத்தார் அவர்.

அக்காலத்தில் நெல்வேலி சூழ்ந்த திருநெல்வேலியில் வெள்ளியம்பலத் தம்பிராஞர் புகழ் பெற்றிருந்தார். அவர் தருமபுர ஆதீனம் நாலாவது பட்டத்தில் வீற்றிருந்த மாசிலாமணி தேசிகரிடம் சிவ தீட்சை பெற்றவர்; காசிக்குச் சென்று குமர குருபர அடிகளிடத்தில் கற்றவர்; கற்றவர்க்குக் கரும்பாம் ஏழு நூல்களை இயற்றி உலகுக்கு அளித்தவர்.

அந்த வெள்ளியம்பலத் தம்பிரானிடம் சிவப்பிரகாசர் படிக்க விரும்பினர். தாம் மட்டும் படிக்க அவரது உள்ளம் விரும்பவில்லை. அதனுல் அவர் தமது தம்பியாகிய வேலையர், கருணைப்பிரகாசர் இருவரையும் தம்மோடு அழைத்துச் சென்ருர். அக்காலத்தில் காஞ்சீபுரத்திலிருந்து திருநெல்வேலிக்குக் கால்நடையாகச் செல்வதென்ருல் எவ்வளவு துன்பம்! கருமத்தில் கருத்தாக இருப்போர் பசிநோக்கார்; தூங்கார்; சோம்பி இரார்.

அவர்கள் காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டுப் பல நாள் நடந்து துறைமங்கலத்தை அடைந்தனர். விழுப்புரத்திலிருந்து உளுந்தூர்ப்பேட்டைவழியாகத் திருச்சிராப்பள்ளிக்கு ஒரு சாலை செல்கிறது. அச் சாலையில் பெரும்பரலூர் என்ற ஓர் ஊருண்டு. அதற்கு ஆறு கல் தொலைவில் துறைமங்லம் இருக்கிறது. துறை மங்கலத்திற்கும் அதனைச் சார்ந்த பல ஊர் களுக்கும் அதிபர் இலிங்கா ரெட்டியார். அவர் கி. பி. 1610 முதல் 1648 வரை வாழ்ந்தவர். அவருக் குப் பின் அவரது குமாரர் அண்ணாமலை ரெட்டியார் பட்டத்திற்கு வந்தார். வெள்ளாற்றுக்கு வடகரை யிலுள்ள முப்பது வட்டங்களுக்கு அவர் தலைவரா னார். அவர் ஒழுக்கம் குன்றா உயர்ந்தவர்; அடியா ரிடத்தில் அன்புள்ளவர்; பாவலரைப் போற்றும் பண்புள்ளவர்; கல்வி கேள்விகளில் மிகுந்தவர்; வீரசைவ சமயத்தினர்.

அவ்வூரில் சிலநாள் தங்கிய சிவப்பிரகாசரது சிறப்பைப்பற்றிக் கேள்வியுற்றார் அண்ணாமலைரெட்டி யார். அவரை வரவழைக்க அவரது உள்ளம் அவாவிற்று. "பெரியோரை வரவழைப்பது முறை யன்று. நானே சென்று அவரைக் காண்பதுதான் முறை" என்று சென்றார் அண்ணாமலை ரெட்டியார். அப்பொழுது நித்திய கருமானுட்டானங்களைச் செய்து கொண்டிருந்தார் சிவப்பிரகாசர்.

அவரது பெயருக்கேற்ப அவரது முகத்தில் சிவப்பிரகாசம் (மங்களப் பேரொளி) விளங்கிற்று. அதனோடு தெய்வக் கலையும் கலந்திருந்தது. வளரும் இளமையின் எழிலும் மேனியில் பாய்ந்திருந்தது. அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் அண்ணாமலை

ரெட்டியார் அவற்றைப் பருகிக் களைப்பாறினார். அவர் சிவப்பிரகாசரை வணங்கித் தம் ஊரிலேயே இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

“நானும் என் தம்பியரும் வெள்ளியம்பலத் தம்பிரானிடம் கல்வி கற்கப் போகின்றோம். வரும் போது நான் இந்த ஊரில் தங்குவேன்” என்றார் சிவப்பிரகாசர். “மிகுதியாகக் கற்றவர் மேலும் கற்க விரும்பினரே! கல்வி தெவிட்டாத தேன்பாலன்றோ!” என்று ரெட்டியார் எண்ணினார்.

“நீங்கள் திரும்பும்போது கட்டாயம் இங்கு வரக் கோருகின்றேன்” என்று அவர்க்குப் பொருள் கொடுத்து வணங்கினார் அண்ணாமலை ரெட்டியார். சிவப்பிரகாசர் அதற்கு உடன்பட்டார். அவரும் அவரது தம்பியரும், பாம்பு கிடந்தது போன்ற ஒற்றையடிப் பாதைகளையும் ஓணான் முதுகு போன்ற வரப்பு வழிகளையும் ஒட்டகத்தின் முதுகு போன்ற காட்டு வழிகளையும் நிழல், இருள்போல் சூழ்ந்த சாலை வழிகளையும் கடந்து சென்று திருநெல்வேலியை அடைந்தனர். அந்நகரைக் கண்டதும் அவர்களுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. ‘வெள்ளியம்பலத் தம்பிரானாரைக் காணப் போகிறோம்’ என்ற எண்ணந்தான் அதற்குக் காரணம்.

சிவப்பிரகாசர் வெள்ளியம்பலத் தம்பிரானாரைக் கண்டு, வணங்கி, எழுந்து, “உயிரும் உடலுமாயுள்ள செந்தமிழ் எழுத்தே, அவ்வெழுத்துக்கள் சேர்ந்த சொல்லே, அச்சொல்லின் பொருளே, பொருள் பொதிந்த யாப்பே (பாட்டே), அதற்கு ஒளி செய்யும் அணியே, தங்கள் அடியார் திருக்

கூட்டத்தில் எங்களேயும் சேர்த்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிருேம்" என்ருர்.

வெள்ளியம்பலத் தம்பிராஞரின் உள்ளத் தாமரை மலர்ந்தது. அதில் இன்பத்தேன் சொட்டியது. அவர், சிவப்பிரகாசரைப் பார்த்து, "உமது தோத்திரத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களேயும் அமைத்துச் சொல்லியிருப்பது உங்கள் புலமையைக் காட்டுகின்றது" என்ருர்.

"அந்த ஐந்து இலக்கணங்களேயும் அரிய இலக்கியங்களேயும் கற்கவே நாங்கள் உங்களே யடைந்தோம்" என்று தமது வரலாற்றைக் கூறிஞர் சிவப்பிரகாசர்.

வெள்ளியம்பல வாணர் திகைத்து, "நீங்களா என்னிடம் கற்கப் போகின்றீர்! நீங்கள் கலேச் செல்வராக அன்ருே இருக்கின்றீர்?" என்ருர்.

"கல்வி கரையிலது என்பது தாங்கள் அறிந்த உண்மையன்ருே?" என்ருர் சிவப்பிரகாசர். 'கு' என்று தொடங்கிக் 'கு' என்று முடியும்படி சிவப்பிரகாசரைப் பாடும்படி தம்பிராஞர் கூறிஞர். அவ்வாறே சிவப்பிரகாசர் உயர்ந்த பாடலொன்று பாடிஞர். தம்பிராஞர் மிகமகிழ்ந்து அவருக்கு இலக்கிய இலக்கணச் செல்வங்களே வாரிக்கொடுத்தார். சிவப்பிரகாசர் அவற்றைச் செவிக்கையால் பெற்றுச் சிந்தனேப் பெட்டியில் வைத்தார்.

அவர் இன்பக்கலே கற்ற காலத்தில் ஒருவர் ஒரு பண முடிப்பொன்று கொண்டுவந்து சிவப்பிரகாசரிடம் கொடுக்க நீட்டிஞர். "இதனேக் கொடுத்தவர் யார்?" என்ருர் சிவப்பிரகாசர்.

"கொடுத்தவர் தமது பெயரைச் சொல்ல வேண்டாம் என்ருர்."

"வேண்டாம் என்றவர் செல்வம் எனக்கு வேண்டாம்."

"தாம் செய்யும் அறம் பிறர்க்குத் தெரியக் கூடாது என்பது கொடுத்தவரது கொள்கை."

"தெரியாதவரிடத்தில் பொருள் பெறக்கூடாது என்பது எனது கொள்கை."

"அதனைச் சொன்னல் அண்ணுமலை ரெட்டியார் சினங் கொள்வார்."

சிவப்பிரகாசர் புன்னகை பூத்து, "அந்தப் பெருந் தகையாளரின் கொள்கை போற்றத் தக்கது. அவர் போன்ற பேரருளாளர்கட்காகத்தான் வெயில் காய்கிறது; மழை பெய்கிறது; மண் விளைகிறது" என்று புகழ்ந்து அப்பொருளைப் பெற்றுக்கொண்டார்.

குரு காணிக்கை

ஒருநாள் வெள்ளியம்பலத் தம்பிரானுர், சிவப்பிரகாசரை நோக்கி, "நீர் கல்வியில் பெரும்புலமை பெற்றுவிட்டீர். தமிழணங்கிற்குப் பாமாலை கட்ட உமக்கு விடை கொடுக்கின்றேன். விருப்பமாயின் உமது ஊருக்குச் செல்க" என்ருர்.

சிவப்பிரகாசருக்கு ஆசிரியரை விட்டுப் பிரிய மனமில்லை. ஆயினும், 'ஆசிரியரது கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்' என்று அவர் தம் ஊருக்குச் செல்ல உடன்பட்டார். தமிழ்ச் செல்வர் அண்ணுமலை ரெட்டியார் கொடுத்த பொருள் சிவப்பிரகாச

ரிடம் இருந்தது. அதனைக் காணிக்கையாகப்பெற்றுக் கொள்ளும்படி அவர் தம்பிரானாரை வேண்டினார். "இது உமது தகுதிக்கேற்ற காணிக்கை யன்று" என்று தம்பிரான் அவர்கள் கூறினார். அது எது என்று அறிய ஆவலோடுநோக்கினார் சிவப்பிரகாசர்.

"திருச்செந்தூரில் ஒரு போலிப் புலவன் உளன். அவன் எம்மைச் சிறுமையாகப் பேசித் திரிகின்றான். அவனை வாதத்தில் வென்று அடக்குவதே நீர் எமக்குத் தரும் காணிக்கை" என்றார் தம்பிரான் அவர்கள். அது சிவப்பிரகாசருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. "உங்கள் திருவருள் வில்லால் சொல்லம்பு ஏவி அவனை வென்று அடக்கி வருவேன்; விடை தாருங்கள்" என்று சிவப்பிரகாசர் வணங்கினார். வெள்ளியம்பல வாணர் விடை கொடுத்தார். சிவப்பிரகாசர் மகிழ்ந்தார். கட்டாகக் கரும்பு கிடைக்குமாயின் அதனை முறிக்கத்தானே முயலும் யானைக் கன்று?

சிவப்பிரகாசர் திருச்செந்தூரை யடைந்தார். அங்குள்ள முருகன் கோயில் மிக மகிமையுள்ளது. அந்தக் கோயிலுக்குச் சிவப்பிரகாசர் சென்று உள்ளம் உருக, உடல் குழைய, விழிநீர் ஊற்றெனப் பெருக அப்பெருமானைப் பாடி வணங்கினார். காந்தத்தின்கண் ஊசி சேர்வதுபோல், அவரது மனம் முருகனைச் சேர்ந்தது. பின் அவர் திருவீதி வலம் சென்றார். அதனை கேள்வியுற்றான் அப்போலிப் புலவன். தெய்வ ஒளியும் செந்தமிழ்க் குளிர்ச்சியும் கலந்த சிவப்பிரகாசரின் திருமுகத்தைக் கண்டான் அவன். அந்த முகம் அவனுக்கு நெருப்பெனத் தோன்றியது.

போலிப்புலவன் புலவரை பார்த்து, "நீர் யார்?" என்முன்.

"நான் வெள்ளியம்பலத் தம்பிரான் அவர்களின் திருவடிப் புழுதி."

"அந்தப் புழுதி என் புலமைக் காற்றில் பறந் தோடும்."

"திருவடிக் கீழுள்ள புழுதி, போலிப் புலமைக் காற்றில் எப்படிப் பறக்கும்?"

அச்சொல் போலிப்புலவனைத் திணறவைத்தது. அவன் அதனை வெளிக் காட்டாமல், "முப்பது செய் யுள் நிரோட்டக யமக அந்தாதி இருவரும் பாடு வோம். (மேலுதடும் கீழுதடும் படாமல் பாடுவது நிரோட்டகம்.) முன்னர் யார் பாடுகின்றனரோ அவரே வென்றவராவர். தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாவர்" என்று போலிப் புலவன் ஆரவாரித் தான். சிவப்பிரகாசரும் அதற்கு உடன்பட்டார். இருவரும் போட்டி போட்டுப் பாடத்தொடங்கினர். மலையருவி, மலர்களை எறிவதுபோல் சிவப்பிரகாசர் முப்பது செந்தமிழ் மலர்களை வாரி எறிந்தார். செந் தாமரை மலர்களின் கூட்டத்தைக் கண்டு நெருப் பென நீர்வாழ் பறவை அஞ்சுவதுபோல், போலிப் புலவன் அஞ்சிக் கம்பம்போல் ஆனுன். அவனது உடல் வியர்த்தது. அவனுக்குச் சிறிது நேரம் ஒன்றுந் தோன்றவில்லை. அவனது இரங்கத்தக்க நிலையைக் கண்டு சிவப்பிரகாசருக்கும் ஒன்றும் தோன்றவில்லை.

"செந்தமிழ்க் குன்றே, வணக்கம், நான் கற்றது கடுகளவு. செருக்குற்றது மிளகளவு. அதனல் துன்

புற்றது ஏலக்காய் அளவு. என்னை மன்னியுங்கள். நான் உங்கட்கு அடிமை" என்று சிவப்பிரகாசரிடம் தலைகவிழ்ந்து கூறினன் போலிப்புலவன்.

"நீங்கள் எனக்கு அடிமை யல்லர். என்னுயிர் நல்லாசிரியராம் வெள்ளியம்பலத் தம்பிரானுர்க்கு நீங்கள் அடிமை. வாருங்கள், அவரிடம் செல்லலாம்" என்ருர் சிவப்பிரகாசர். போலிப்புலவன் ஒன்றுஞ் சொல்லாமல் அவர் பின் சென்ருன். அவனது உள்ளம் அதற்கு உடன்படவில்லை. உடல் சென்றது. அவன் விதியை நினைந்தான், மதியை நொந்தான். எங்கே போகிருேம் என்றுகூட அவனுக்குத் தோன்றவில்லை. துன்பம் மேலோங்கி இருந்தது. அவ்வாறே சென்று வெள்ளியம்பலத் தம்பிரானைக் கண்டான்.

அவரது சைவத் திருக்கோலமும் செந்தமிழ்ப் பொலிவும் அப்போலிப் புலவனது உள்ளத்தில் அன்பை உருவாக்கின. உடனே அவன் அவரது திருவடியில் விழுந்து, "பொன்னின் பொலிவே! புலமையின் ஊற்றே, ஞான விளக்கே, நல்லோர் உறவே, உங்கள் பெருமையை அறியாதிருந்தேன். மன்னிக்க வேண்டும். உங்கள் மாணவராம் சிவப் பிரகாசர் பெரும்புலமை உடையவரென்ருல் உங்கள் புலமையை அளவிட யாரால் முடியும்? நான் கவி பாடுவதில் சிவப்பிரகாசரிடம் தோற்றேன்; உங் களுக்கு அடிமையானேன்" என்று துன்பந்துளிக்கச் சொல் தடுமாறக் கூறினுன்.

"சென்றதை மறந்துவிடுங்கள். மறந்தால்தான் மகிழ்ச்சி மலரும்" என்று தேற்றினுர் தம்பிரான் அவர்கள்.

புலமை பாராட்டல்

சில நாள் சிவப்பிரகாசர் அங்கிருந்து தம்பிரானிடம் விடை பெற்றுத் தம்மூர் திரும்பினார். அவர் சென்ற வழியில் பூவிரிபொழில் சூழ் காவிரிக்கரையிலுள்ள திருக்காட்டுப்பள்ளியை யடைந்தார். அவ்வூரில் சிலநாள் இருந்தார். 'உப்போ ஓஓ——உப்பு. உப்போ ஓஓ——உப்பு' என்று ஒப்பிலா ஒரு குரல் சிவப்பிரகாசரது திருச்செவியில் தேனென இனித்தது. அக்குரலில் இனிமையும் திருத்தமும் கலந்திருந்தன. திரும்பிப் பார்த்தார் சிவப்பிரகாசர். கண்ணேறு வருமெனக் கருதி அவளுடைய முத்துப் பற்களைப் பவள உதடுகள் மறைத்திருந்தன. கூந்தல் கனத்தையும் உப்பின் சுமையும் தாங்காமல் அவளது கொடி இடை துவண்டது. அவளுண்ட தமிழ் அமுது அவளது முகத்தில் பொலிந்தது.

"அந்தோ ! இவளது புலமையை இவ்வுலகம் அறியவில்லையே; இவள் தெருத் தெருவாய் உப்பு விற்றல்லவா உடல் வளர்க்க நேரிட்டது? சுவையை மறைத்து முட்களைக் காட்டும் பலாப்பழம் போன்றவள் இவள் ! கோடையில் வாடிய நீரில்லா நெற்பயிர் இவள் ! கதிர் முற்றிய நெற்பயிர் போல் இவள் வணக்கமுடையவளாய் வாழ்கின்றாள். இவளது புலமையை உலகறியத் தூற்றவேண்டும்" என்று சிவப்பிரகாசர் எண்ணி அவளை அருள் நோக்கால் நோக்கி,

" நிறைய வுளதோ வெளிதோ கொளுவோம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா—னுறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு"

(பிறையை முடியிலணிந்த சிவபெருமான் எழுந்தருளிய திருக்காட்டுப்பள்ளியில் திரிகின்ற பாவாய், நீ இங்கு இரு. எமக்கு உப்பை அள்ளிக் காட்டு. உன்னிடத்தில் நிரம்ப உப்பு இருக்கின்றதோ? அது வெண்மையாயுளதோ? நாங்கள் வாங்கிக்கொள்வோம்.)

இவ்வாறு விளியும் விஞக்களும் பொதிந்த பாடலைப் பாடினர். அவளது உடலில் வியர்வை வடிந்து உப்புப் பூத்திருந்ததுபோல் உள்ளத்தில் உவகை பூத்தது. அப்பூ ஒரு செய்யுளாக வெளிவந்தது.

"தென்னேங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னேங்குஞ் சேவடியைப் போற்றினேம்—அன்னேன்
திருக்கூட்ட மத்தணைக்குந் தெண்டனிட்டோந் தீராக்
கருக்கூட்டம் போக்கினேங் காண"

என்று கூறிச் சிவப்பிரகாசச் செம்மலின் திருவடியில் விழுந்தாள். அவளது பாடும் புலமையையும் பக்தியின் பெருக்கையும் கண்டவர் திகைத்து நின்றனர். "இவளது அடக்கமும் புலமையும் இவளது உடற் சிறையில் எப்படி அடங்கிக் கிடக்கின்றனவோ?" என்றார் ஒருவர்.

"அடியார் பக்தியும் அருந்தமிழ்ப் புலமையும் அளவற்ற அடக்கமும் உடைய இவள் தன்னை விளம்பரப் படுத்திக்கொள்ள வில்லையே!" என்றார் மற்றொருவர்.

"வாடா மல்லிகைப் பூக்கடைக்குத்தானே விளம்பரம்? குண்டுமல்லிகைப் பூக்கடைக்கு ஏன் விளம்பரம்?" என்றார் வேறொருவர்.

அவ்வுரையாடல் சிவப்பிரகாசரின் முகத்தில் புன்னகையை உண்டாக்கிற்று. சிவப்பிரகாசர்,

செந்தமிழ் பாடியவளிடத்து இரக்கங்கொண்டு அவளுக்கு ஞானோபதேசம் செய்தார்.

தம்பியரின் திருமணம்

சிவப்பிரகாசர் திருக்காட்டுப்பள்ளியை விட்டு இடையிலுள்ள தெய்வத் திருக்கோயில்களை வணங்கித் துறையூரை யடைந்தார். அச்செய்தி அண்ணாமலை ரெட்டியாருக்கு அளவிலா மகிழ்ச்சியை உண்டாக்கிற்று, ரெட்டியார் சென்று அவரை வரவேற்று மகிழ்ந்தார்.

"நீங்கள், 'நான் வெள்ளியம்பலத் தம்பிரானிடம் கல்வி கற்றபின் இங்கே தங்கிவிடுகிறேன்' என்று கூறினீர்கள். அவ்வாறே நீங்கள் இவ்வூரிலேயே இருக்கக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வூர்ப் பகுதியிலுள்ளோர் செந்தமிழ்ப் பாலும் திருவருள் தேனும் பருக வேண்டும். அதனைச் செய்ய உங்களால்தான் முடியும்" என்றார், அண்ணாமலை ரெட்டியார்.

சிவப்பிரகாசர் அதற்கு உடன்பட்டார். அண்ணாமலை ரெட்டியார் அவருக்காக ஒரு திருமடம் கட்டினார். அதில் இளந்தென்றல் தவழ்ந்தது; சூரியனொளி புகுந்தது. அம்மடத்தைச் சுற்றிலும் அழகிய சோலை; இடையிலே இனிய நீர்க் கிணறு. அதில் குறவையும் வராலும் குதித்து விளையாடின. சிவப்பிரகாசரின் வருணனைக்கு அச்சோலை துணை செய்யும் என்பது அண்ணாமலை ரெட்டியாரின் கருத்து.

அவர் ஒருநாள் சிவப்பிரகாசரை அன்பால் நோக்கி, "உங்கள் உடல் மணப்பருவத்தை அடைந்துவிட்டது, உங்களுக்குத் திருமணஞ் செய்ய எனக்குப் பல நாள் ஆவல். எத்தனை

நாளைக்கு அதனை உள்ளச் சிறையில் அடைத்து வைப்பது ?'' என்றார்.

"நிட்டையிலே இருந்து மனத்துறவடைந்த பெரியோர்களுக்குப் பரமன் தாளையடைந்தது முதல் முத்தி பெறுமளவும் பேரின்பம் உண்டாகும். சிறு வர்க்கு மணம் பேசித் தாலி கட்டுவது முதல் நடுக் கட்டையிலே வேகுமட்டும் கவலைதானே ?'' என்ற கருத்தமைந்த செய்யுளால் தம் கருத்தைக் கூறினார்.

அதனைக் கேட்ட ரெட்டியார் ஒன்றும் சொல்லா திருந்தார். அவரது உள்ளம் வருந்தியது. அதனைச் சிவப்பிரகாசர் அறிந்து, 'திருமணத்திற்கு நான் உரி யவனல்லன். எனது தம்பியரே அதற்குரியவர். உங்களுக்கு விருப்பமாயின் அவர்களுக்குத் திரு மணம் செய்க '' என்றார்.

அண்ணாமலை ரெட்டியார் அகமிக மகிழ்ந்தார். தமது வீட்டுத் திருமணமென்றே அவருடைய தூய உள்ளம் விழைந்தது. கருணைப்பிரகாசர், வேலையர் என்னும் இரு புலவர்க்கும் ஏற்ற மங்கையரை அவர் தேடினார். அவ்வாறே கிடைத்தனர். நல்ல நாளில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. புலவர் மண மக்களைப் பாடினர்; முனிவர் வாழ்த்தினர். வந்த வர்க்கும் ஊரார்க்கும் ஏழைகளுக்கும் சிறந்த விருந்து நடந்தது. அண்ணாமலை ரெட்டியாரின் கொடை யைப் பலர் போற்றினர்.

## திருப்பணி

துறையூரில் சிவப்பிரகாசர் சில ஆண்டுகள் தங்கிச் சைவத் தொண்டும் தமிழ்ப் பணியும் புரிந்

தார். மற்றப் பகுதிகளிலும் தொண்டு செய்யவேண்டும் என்ற ஆவல் அவருக்குப் பிறந்தது. 'அண்ணுமலை ரெட்டியாரைத் தாம் பிரிவதற்கு அவர் உடன் படுவாரா?' என்ற ஐயமும் சிவப்பிரகாசருக்கு உண்டாயிற்று. நற்செயலாதலால் அவர் உடன் படுவார் என்று அவரது தூய உள்ளம் தெளிந்தது. அவர் ரெட்டியாரிடம் சென்று தமது கருத்தை வெளியிட்டார்.

ரெட்டியார் நீர்மேல் உள்ள துரும்பின் எறும்பு போலானுர். "சிவப்பிரகாசரோ செந்தமிழ்ச் செல்வர். அவர், 'அறத்தொண்டு செய்யப் புறப்படுகிறேன்' என்கிருர்; அவரைத் தடுப்பது அறமன்று. அவரது பிரிவு எனக்குப் பெருந்துன்பம். நாட்டுக்குப் பேரின்பம். என் செய்வது?" என்று அவர் வருந்தினுர். அவர் சிவப்பிரகாசருக்கு ஒன்றுமே சொல்லவில்லை. அவருடைய இமைகளும் இமைக்கவில்லை; உடல் காற்றில்லா விளக்குப்போல் ஆயிற்று. அவரது அகத்தை முகத்தால் அறிந்தார் சிவப்பிரகாசர்.

"நீங்கள் கற்றறிந்தவர்; ஒழுக்கம் நிறைந்தவர்" என்ருர் சிவப்பிரகாசர். அண்ணுமலை ரெட்டியார் ஒருவாறு மனந்தேறி அவருக்கு விடை கொடுத்தார். சிவப்பிரகாசர் தில்லையை யடைந்து அங்குச் சில நாளிருந்து பலர்க்குத் தமிழ் அமுது ஊட்டினுர். அவர் சைவத்தொண்டு செய்யக் காஞ்சீபுரம் சென்ருர். அவ்வூரார் அவரை எதிர்கொண்டழைத்தனர். அங்கு வீரசைவத்தின் உண்மையைப் பலர்க்குப் போதித்தார். அப்போது திருப்போரூர்ச் சாந்தலிங்கர் அங்குச் சென்ருர். அவருடன் சிவப்பிரகாசர் அளவளாவினுர். இருவரும் இன்பப் பொய்கையில் மூழ்கினர்.

"பொம்மபுரத்தில் சிவஞான பாலைய தேசிகர் எழுந்தருளி உள்ளார். அவரைத் தரிசிப்பதற்காக நான் அங்குப் போகப் போகிறேன்" என்று அன்பொழுகக் கூறினர் சாந்தலிங்கர். அச்செய்தி சிவப்பிரகாசருக்குப் பெரு மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அவர், "நானும் உங்களோடு வருவேன்" என்றார். சாந்தலிங்கர் அதற்கு உடன்பட்டார். பாலையர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடு தூது என்னும் சிறு நூல்களைச் சிவப்பிரகாசர் இயற்றினர். அது சாந்தலிங்கருக்குப் பெரு மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. இருவரும் பொம்மபுரம் சென்று சிவஞான பாலைய சுவாமிகளைக் கண்டு வணங்கினர். அவர்கள் அவரிடம் ஞானத் தேனைப் பருகினர். பின்னர் இருவரும் காஞ்சியம்பதியை யடைந்தனர். சிவப்பிரகாசர் தம் தங்கையைச் சாந்தலிங்கருக்கு மணஞ் செய்து கொடுத்தார்; மகிழ்ந்தார்.

சிவப்பிரகாசருக்கு வெங்கனூருக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ண முண்டாயிற்று. செல்லும் வழியில் விருத்தாசலத்தை அடைந்தார். அங்குச் சிதம்பர பூபதி என்றொரு சிவபக்தர் இருந்தார். அவர் ஒரு திருமடம் கட்டி அதில் சிவப்பிரகாசரை எழுந்தருளக் கேட்டுக் கொண்டார். சிவப்பிரகாசர் அங்குச் சில ஆண்டுகள் இருந்தார். அவரது மாணவர்கள் அவரை நல்லாற்றூர்க்கு வருமாறு வேண்டினர். அதனால் அவர் நல்லாற்றூர்க்குச் சென்றார். அவர் அங்கிருந்த காலத்தில் வெங்கனூரில் அவரது தம்பியார் கருணைப்பிரகாசர் அழியாப் பேரின்ப வீடு பெற்றார்.

அச் செய்தி சிவப்பிரகாசரின் திருச்செவியில் தைத்தது. அவரது கண்களில் நீர் பெருகிற்று. தூய துறவியாயினும் சகோதர வாஞ்சை விடா தன்றே ? தமிழணங்கை அலங்கரித்த தம்பியன்றே அவர் ? சிவப்பிரகாசர் விரைந்து வெங்கனூரை யடைந்தார். அடைந்தும் தமது செந்தமிழ்க் குன்றும் தம்பியாரைக் காணவில்லை. அவரை விழுங்கிய சமாதிக் குழியையே அவர் கண்டார். கண்டு, கண்ணீர் சிந்தி, வெதும்பி, உடல் சோர்ந்து, “ என்னுடன் பிறந்த தம்பியாம் கருணைப் பிரகாசனே, தமிழாம் உலகாண்ட மன்னனே, முன்னே அருட் பாவலராம் அப்பரை உண்டு சுவை நுகர்ந்தான் சிவ பெருமான். அச்சுவையின் மிகுதியால், நீ காளத்தி புராணம் பாடி முடிப்பதற்கு முன் என் மாதவப் பயன் ஒழியும்படி உன்னையும் உண்டான்” என்னும் அவலச்சுவை சொட்டும் செய்யுளைக் கூறி வருந்தினர். பின்னர் அவரது தமிழ் மனம் ஒருவாறு உறுதி பெற்றது. அவரது மற்றொரு தம்பியரான செந்தமிழ்ச் சோலையாம் வேலையர், கருணைப் பிரகாசரின் பெரும் பிரிவிற்கு மிகவும் வருந்தினர். சிவப்பிரகாசர் அவரைத் தேற்றி மறுமுறை நல்லாற்றூரை யடைந்தார்.

அங்கு அவர் சில ஆண்டுகள் செந்தமிழ்த் தொண்டும் வீர சைவத் தொண்டும் செய்துகொண்டிருந்தார். அவர் தமது முப்பத்திரண்டாம் ஆண்டில் அழியாப் பேரின்பவீடு பெற்றார். அவர் தமிழணங்கிற்கு அணிந்து மகிழ்ந்த அணிகலன்கள் முப்பது. அச்செயலே அவரது பெரும் புலமைத் திறனைப் புலப்படுத்தும். சிவப்பிரகாசர் இயற்றிய நூல்களில், திருவள்ளுவரின் தெய்வ நீதியும் இளங்கோவடிகளின் இயற்கை யழகும் கம்பரின் கவி நயமும் பொலிகின்றன.

# 2. வளமான வாழ்வு

செந்தாமரை, சேற்றில் முளைத்தால்தான் என்ன ?

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனத் தமிழகம் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களையும் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தென் பகுதியையும் கொண்ட நிலப்பகுதி சோழ நாடாகும். இது நீர் வளமுடையது; மலைவளம் இல்லாதது; சிறந்த நிலவளம் உடையது; காவிரி, பெரும்பொருளைத் தந்ததால் சோழநாடு "பொன்னி நாடு" எனப் புகழப்பட்டது. சோழநாடு இன்றுள்ள பெருமையை விடப் பழங்காலத்தில் ஒரு தனிப் பெருமையை உற்றிருந்தது. காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த துறைமுகந்தான் இக்காலச் சோழ நாட்டின் பெருமையைவிட முற்காலச் சோழ நாட்டின் தனிப் பெருமையாக இருந்தது.

சோற்றுப் பஞ்சம் இல்லாச் சோழநாட்டில் இரையூர் என்னும் ஓர் ஊருண்டு. அதனை, 'இரசை' என்றும் கூறுவர். வேளாளருள் பல பிரிவினர் உண்டு. அவருள் கார்காத்த வேளாளர் என்போர் ஒரு பிரிவினர். கார்காத்த வேளாளர் குலத்தில் வடமலையப்ப பிள்ளையன் என்பார் தோன்றினார்.

தோன்றி அவர் வறுமையில் தவழ்ந்தார்; உண்ணும் உணவிற்கும் உடுக்கும் உடைக்கும் பஞ்சம் படாப் பாடு பட்டார். "கல்வி கற்றால்தான் உயர்

நிலை அடைய முடியும்; வறுமை ஒழியும்" என்று அவர் உள்ளத்தில் தோன்றிற்று. அதனால் அவர் கல்வி கற்கப் பலரிடம் சென்றார்.

விசய நகர அரசர்களின் குலகுரு வைணவ ஆச்சாரியார் ஒருவர். அவர் ஏழைகளிடத்தில் இரக்கமும் திருமாலிடத்தில் பேரன்பும் கொண்டவர். அச்சான்றோரை ஒரு நாள் வடமலையப்பர் கண்டு வணங்கினார். அவர் தம் வறுமையையும் கல்வியில் சென்ற கருத்தையும் கூறவில்லை. ஆச்சாரியார் குறிப்பால் உணர்ந்து, வினவி, "பிள்ளாய், நீ இனி அஞ்சற்க. உனக்கு உணவிட்டுக் கல்வி கற்பித்து வேண்டியன செய்தல் என் கடமை. இன்று முதல் நீ என்னுடன் இருந்திடுக" என்று வடமலையப்ப பிள்ளையனுக்குக் கூறினார்.

"உயர்தவத்தீர், உங்களை யன்றி அடியேனுக்குப் புகலிடம் வேறில்லை. தங்கள் நன்றி சிறியேன் தலைமேல்; என்னை மகனாக ஏற்று வேண்டியன செய்து நன்னிலை யடையச் செய்யத் தங்களை வேண்டுகின்றேன்" என்றார் வடமலையப்பர்.

அந்த வைணவச் சான்றோர் தாம் கூறியபடியே வடமலையப்ப பிள்ளைக்குச் செய்தார். வடமலையப்ப பிள்ளை ஒழுக்கத்திற் சிறந்து, கல்வியிற் பெரியவரானார். அவர் இலக்கிய இலக்கணம் கற்றதோடு போர்க்கலையையும் பயின்றார். 'போர்விற் றடக்கை யிரையூர் வட மலைப்பூபதி' என்று திருமேனி இரத்தின கவிராயர், பிள்ளையப்பரைப் பாடிப் பாராட்டி மகிழ்கின்றார்.

மல்லிகைப்பூ ஓரிடத்தில் இருப்பினும் வேறிடத்தில் மணம் வீசுவதுபோல, வடமலையப்பர் சோழ

நாட்டில் இருப்பினும் பாண்டிய நாட்டில் அவரது அறிவு மணம் வீசிற்று. அப்போது (கி. பி. 1623-59) பாண்டிய நாட்டைத் திருமலை நாயக்கர் நல்லாட்சி புரிந்துகொண்டிருந்தார். அவரிடமிருந்து சென்ற அரசியல் தலைவர் ஒருவர் பிள்ளையவர்களை வணங்கி,

“உங்களை நம் திருமலை நாயக்கர் அழைத்து வரச் சொன்னார்; பல்லக்கும் அனுப்பியுள்ளார். எழுந்தருள விரும்புகின்றேன். எதன் பொருட்டென்று எனக்குத் தெரியாது. ஆனால் அரசரது அழைப்பு உங்கள் நன்மைக்காகவே இருக்கும்” என்றார்.

வடமலையப்பரோ மகிழவில்லை. “கடமையைச் செய்தால் உடமை தானே வரும்” என்று சென்றார். அவர் இருந்த வறுமை நிலையில்—அவரது கல்வியின் உயர்வு அவருக்குத் தெரியாத நிலையில்—தமக்கு அரச பதவி கிடைக்கப் போகிறது என்று அவர் எங்ஙனம் எண்ணத்தான் முடியும்?

வடமலையப்பர் பல காத தூரம் கடந்து கன்னித் தமிழ் மதுரையை அடைந்தார். மீனாட்சியம்மையின் கோவில்கோபுரமும் சொக்கநாதர் கோவில் கோபுரமும் அவருக்குக் காட்சியளித்தன. அவர் அவற்றைக் கண்குளிரக் கண்டு வணங்கி இன்புற்றார்.

ஆயினும் அவரது புலமை உள்ளத்தில் துன்பப் புயல் சுழன்றது. சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி முதலான நூல்களில் மதுரையைப் பற்றி அவர் படித்திருந்த சிறப்பும் அயல் நாட்டாரின் படை எடுப்பால் அழகழிந்திருக்கும் அலங்கோலமும் அவரது உளக் கண்ணில் தோன்றின. ‘பழந்தமிழ் நூல்களில் உளக் கண்ணாற் கண்ட சிறப்பை,

ஊனக் கண்ணால் என்று காண்பேன்?'' என்று அவரது உள்ளம் கலங்கிற்று.

வடமலையப்பர், திருமலை நாயக்க மன்னரை வணங்கினார். நிலவைக் கண்டு அல்லி மலர்வது போலத் திருமலை நாயக்கரது உள்ளம் மலர்ந்தது. 'இப்புலவரால் நம் ஆட்சி மேலும் செம்மையுறும்' என்று அவர் மகிழ்ந்து வடமலையப்பரை நோக்கி,

"புலவரே, உங்களைத் திருநெல்வேலிப் பகுதிக்குத் தலைவனாக்கியுள்ளேன். இலக்கிய புலமையோடு போர்ப் பயிற்சியும் பெற்றுள்ளீர். அதனால் அயல் நாட்டார் நம் நாட்டில் அடி எடுத்து வைக்காமல் அவர்களைக் காலன் உலகுக்கு அனுப்பவேண்டும். பசியும் நோயும் பகையும் இன்றிக் குடிகளை உம் உயிர்போலக் காப்பீர் என்று எண்ணுகிறேன்'' என்றார்.

"அரசே, சிட்டுக் குருவியின் தலையில் பனங்காயை வைத்தது போல' எனக்குப் பெரும்பாரத்தைத் தந்தீர். நாராயண மூர்த்தியின் நல்லருள் துணைபுரியும். தங்களுக்குப் பெரும்புகழும் குடிகளுக்கு நீங்கா இன்பமும் உண்டாக நடப்பேன். என்னை உயர்நிலையில் வைத்த தங்களுக்கு என் நன்றியும் வணக்கமும் என்றும் நிலைத்திருக்கும்'' என்று உளத் தூய்மையோடு கூறினார் வடமலையப்பர்.

வடமலையப்பர் திருநெல்வேலிக்குத் தலைவரானது முதல் அவர் கவலைக்கு ஊன்றுகோலானார். அக்கவலை நாட்டைப் பற்றியது. 'குடிகளுக்கு எந்த எந்த வகையில் நன்மை செய்வது? அயல் நாட்டுப் படையெடுப்பை எப்படித் தகர்ப்பது?'' என்று அவர் எண்ணிக் குடிகளைத் தம் உயிர்போலக் காத்தார். அவராட்சியில் அயல்நாட்டார் படையெடுப்பு

இல்லைபோலும்! திருமலை நாயக்கர் வடமலையாரின் ஆட்சியின் திறனைக் கண்டு களித்தார். கி. பி. 1659இல் நாயக்கரது ஆட்சி முடிவுற்றது.

## சிறைக் கதவைத் திறந்த செய்யுள்

திருமலை நாயக்கருக்குப் பின் பாண்டிய நாட்டுக்குச் சொக்கநாத நாயக்கர் அரசரானார். அவர் திருச்சிராப்பள்ளியில் இருந்து கி. பி. 1660—82வரை ஆட்சி புரிந்தார். அவரது ஆட்சியிலும் வடமலையப்பர் திருநெல்வேலிச் சீமைக்குத் தலைவராகத் திகழ்ந்தார்.

வடமலையார் குடிகளுக்குச் செய்த நன்மையை விடத் தமிழுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் செய்த நன்மை பெரிது. அதனால் தமிழை ஊக்கத்தோடு மக்கள் மிகுதியாகக் கற்றனர்; 'தமிழின் செவிலித் தாய் வடமலையப்பர்' என்று எங்கும் பாராட்டு முழக்கம் ஒலித்தது.

அக்காலத்தில் தென் திருப்பேரை என்னும் ஊரில் பல வைணவர்கள் இருந்தார்கள். அவர்கள் மறை நெறி ஒழுகும் பெரியோர்கள். அவர்களுள் நாராயண தீட்சிதரும் ஒருவர். அவர் தமிழை நன்கு பயின்ற சான்றோர். அவருக்கு விளை நிலமும் பெரிய மாளிகையும் இருந்தன. அதனால் அவர் கவலையற்றுத் தமிழ்ச் சோலையில் பொழுது போக்கி, பக்திக் கடலுள் மூழ்கி இன்புற்றிருந்தார்.

ஓராண்டு மழை பெய்யவில்லை; அதனால் நிலம் விளையவில்லை. அவ்வூரார் நிலவரி செலுத்த முடியாமல் தவித்தனர். வடமலையப்பரால் நியமிக்கப்பட்ட வரி அதிகாரி நாராயண தீட்சிதரையும் வரி செலுத்தாத மற்றவரையும் திருநெல்வேலியில் உள்ள சிறையில் இட்டார். நாராயண தீட்சிதர் மிகவும் துன்புற்றார்.

'நான் எவ்வுயிர்க்கு எத்துன்பம் செய்தேனே? அத்துன்பப் பயன்தான் இச்சிறை வாழ்க்கை. சிறையில் இட்டோரை நோவதிற் பயனில்லை. குழைக்காதராம் திருமாலிடம் கூறுவதிற் பயனுண்டு. என் துன்பத்தின் ஒலி, திருமாலின் திருச்செவியில் ஒலிக்கும்படி செய்வது தான் சிறைக்கதவு திறக்கும் சாவி' என்று அவர் குழைக்காதர்மேல் ஒவ்வொரு நாளும் பல செந்தமிழ்ச் செய்யுட்கள் இயற்றிப் பலமுறை பாடிப் பாடி உருகினர். அச் செய்யுட்களின் தொகுதிக்கு, 'குழைக்காதர் பாமாலை' என்று பொருள் நிறைந்த பெயரும் இட்டார்.

முப்பது நாட்கள் உருண்டோடி ஒரு திங்கள் என்ற பெயரைப் பெற்றது. சிறைக்கதவு திறக்கவில்லை. நாராயண தீட்சிதர் மிகவும் உருகி.

"திங்களொன் ருகச் சிறையிருந் தோமிச் சிறையகற்றி
எங்கடம் பாலிரங் காததென் னேவிசை நான்மறையின்
சங்கமுங் கீதத் தமிழ்ப்பாட லுஞ்சத்த சாகரம்போற்
பொங்குதென் பேரைப் புனிதா கருணைப் புராதனனே"

என்று தம் சிறை வாழ்க்கையில் ஒரு திங்கள் கழிந்ததைத் திருமாலிடம் கூறி முறையிட்டார். விடுதலைக்கு வழி பிறக்கவில்லை. ஆயினும் தீட்சிதர், கடவுளைப் பாடுவதை நிறுத்தவில்லை.

'இன்று விடுதலையாவேன்! அன்றி நாளை விடுதலையாவேன்!' என்று அவர் நினைப்பார். அந்த நினைப்பு 'இலவு காத்த கிளிபோல்' ஆகிவிடும்.

'வடமலை யப்பரோ தமிழ்க் கடல்! வரி கட்ட முடியாத ஒரு தமிழ்ப் புலவரை அவரோ சிறையில் அடைப்பார்? நாட்டில் நடப்பவை எல்லாம் அரசர்க்குத் தெரியுமா? தெரிந்துகொள்ளத்தான் முடியுமா?'

'என்னைச் சிறையில் அடைத்திருப்பது வட மலையப்பருக்குத் தெரியாது. தெரிந்தால் விடுதலை கிடைக்கும். எவ்வாறு தெரிவிப்பது? மண்ணில் இருந்து குருவி கத்தினுல் விண்ணில் உள்ள மீனுக் குக் கேட்குமா? இதனையும் இறைவரிடம் கூறிவிடு வேன் என்று,

"வள்வார் முரசதிர் கோமான் வடமலை யப்பன்முன்னே
விள்வாரு மில்லையினியெங்கள்காரியம் வெண்டயிர்பாற்
கள்வா அருட்கடைக் காண்பார் கருணைக் களிறழைத்த
புள்வாக ஞவன்பர் வாழ்வேதென் பேரைப்புராதனனே'

நாராயண தீட்சிதர் உடம்பெல்லாம் வாயாக அழு தார்; சோர்வுற்று நிலத்தில் விழுந்தார்! அசைவற் றுக் கிடந்தார். அவரது மூக்கில் இருந்து வந்த மூச்சுத்தான், 'இவர் உயிர் உள்ளவர்' என்பதை அறிவித்தது.

தீட்சிதர் பாடிய இச்செய்யுள் சிறைக்கூட அதி காரியின் காதில் புகுந்தது; இரக்கத்தையும் உண் டாக்கிற்று.

'இச்சிறையில் வருந்துவோர் தமிழ்ப் புலவர் போலத் தோற்றுகிறது. வடமலையப்பருக்குத் தெரிந் தால் புலவர்க்கு நன்மை உண்டாகும். அவர்க்கு உயிர் புலவர்கள்; உணவு தமிழ். அந்தச் சான் ருேர்க்கு இப் புலவரைப் பற்றி அறிவிப்போம்' என்று எண்ணிய அவர் சென்று வடமலையப்பரை வணங்கி,

"அரசே, தென்திருப்பேரையில் உள்ளோர் அர சாங்கத்திற்கு வரி செலுத்தாமையால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் ஒருவர் செந்தமிழ்ப் புலவர் போலத் தெரிகிறது. அவர்,

தாம் சிறையில் இருப்பதைப் பற்றிக் கடவுளிடம் முறையிட்டுப் பாடிக் கலங்குகின்ருர். அவர் பாடிய பாடலை மறந்துவிட்டேன். அப்பாடலின் ஒன்றரை அடிமட்டும் அடியேன் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

> ‘வள்வார் முரசதிர் கோமான் வடமலை யப்பன்முன்னே
> விள்வாரு மில்லை’......

என்பதுதான் அது. தங்கள் திருப்பெயர் பாடலில் வந்துள்ளதால் அதனைக் கூற வந்தேன்” என்ருர்.

அது வடமலையப்பருக்கு இதயத்தில் வேலைப் பாய்ச்சியது போல இருந்தது. ‘தமிழுக்காகப்பிறந்து, தமிழ்ப் புலவர்களுக்காக ஆட்சியை ஏற்ற என் ஆட்சியிலா தமிழ்ப்புலவுரைச் சிறையில் அடைப்பது? “தமிழ்க் கொலைஞன் வடமலையப்பன்” என்றன்ருே பெரியோர் கூறுவர்! தமிழ்ப்புலவர் சிறைப்படவில்லை. தமிழ்தான் சிறைப்பட்டது!’ என்று வடமலையப்பர் உருகி, விரைவில் ஒரு குதிரையைக் கொண்டுவரச் சொன்ஞர்.

அங்ஙனமே பட்டத்துக் குதிரை கொண்டுவரப் பட்டது. ஒரு குன்றின்மேல் புலி பாய்வது போலப் பாய்ந்தார் வடமலையார். உடனே குதிரை தாவித்தாவி ஓடிற்று. இலாடம் கட்டப்பட்ட அதன் கால்கள் பட்ட இடமெல்லாம் ஒரு சாண் பள்ளம். குதிரை ஓடியதால் எழுந்த தூசியால் பின்னிருந்து காண்போர்க்குக் குதிரை புலஞகவில்லை.

அது சிறைக்கூடத்தை அடைந்தது. கரைமேல் இருந்து கிணற்றில் குதிப்பது போல வடமலையப்பர் குதிரைமேல் இருந்து குதித்து, “சிறைக் கதவைத் திறமின்” என்ருர், கதவு காவலரால் திறக்கப்பட்

டது. “ஒரு புலவர் இச்சிறைக் கூடத்தில் எங்குள் ளார்?” என்ருர். காவலர் அவரை அழைத்துச் சென்று புலவரைக் காட்டினர்.

அவரது அருட்பார்வை இருப்புக் கம்பிகளின் இடையிற் புகுந்து, தீட்சிதரின் திருமேனியில் அழுந்திற்று. தீட்சிதர் கண்களை மூடிக்கொண்டு திருமாலைப் பாடிக்கொண்டிருந்தார். பாட்டின் பொருளும் இசையும், புலவரின் குரலும் வடமலை யாரை இன்பத்தில் ஆழ்த்தின. புலவர் முகத்தில் செந்தமிழ் ஒளியும் மெய்ஞ்ஞானப் பொலிவும் விளை யாடின; கண்களில் இருந்து ஒழுகிய நீர், புலவரின் மார்பை ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

“என் கண்ணெதிரில் தோன்றும் வடிவம் தமிழோ! இறைவரிடத்தில் சுரக்கும் இன்பமோ! சான்ருேர்களின் நூல்களோ!” என்ருர். நாராயண தீட்சிதர் கண்களைத் திறந்து வடமலையப்பரை நோக்கினுர். வடமலையப்பர் புலவர் வரலாற்றைப் புலவரால் அறிந்து புலவரை நோக்கி,

“உங்கள் புலமையை அறியாமல் அதிகாரிகள் உங்களைச் சிறையில் இட்டனர். அதற்கு வருந்தா தீர். உங்களை விடுதலை செய்தேன்” என்ருர்.

“என்னைப்போலப் பலர் இச்சிறையில் வருந்து கின்றனர். அவர்களும் வரி கொடுக்க முடியாமல் சிறைப் படுத்தப் பட்டவர்கள். அவர்களுக்கு விடு தலை இன்றி எனக்கு மட்டும் விடுதலை ஏன்? அவர் களையும் விடுதலை செய்ய வேண்டுகின்றேன்” என்று தீட்சிதர் கூறினுர்.

“நீங்கள் விரும்பியவாறே அவர்களையும் விடுதலை செய்தேன். எல்லோரும் அரண்மனைக்கு வாருங்கள்” என்றார். வடமலையார் கட்டளைப்படி பல வண்டிகள் சிறைக்கோட்டை வாயிலை அடைந்தன. அவர்கள் எல்லோரும் வண்டிகளில் ஏறி அரண்மனையை அடைந்தார்கள். அவர்களுக்கு நால்வகை உணவும் அறுசுவை உண்டியும் கொடுத்துப் பிள்ளையப்பர் உபசரித்தார். ‘நாராயண தீட்சிதரால் நாங்கள் நன்மை யடைந்தோம்’ என்று விடுதலையடைந்த மற்றவர் கூறிக்கொண்டாடினர். நல்லார்க்குப் பெய்யும் மழை எல்லார்க்கும்தான் ஆகும். வடமலையார் அவர்களை நோக்கி,

“இனி தீட்சிதரும் நீங்களும் நிலத்தீர்வை கொடுக்க வேண்டா. உங்கள் நிலங்களை இறையிலி நிலங்களாகச் செய்துவிட்டேன்” என்று கூறி அவ்வாறே செய்தார். அவர்கள் திருநெல்வேலியில் சிறை இருந்த தெருவுக்குக் காவல் புரைத்தெரு என்று இன்றும் பெயர் வழங்குகிறது.

**மலராத மலர்கள்**

“வடமலையப்பர், தீட்சிதரை நோக்கி, “நீங்கள் சிறையில் பாடிய செய்யுட்களைப் பாட வேண்டும்; நான் கேட்டு மகிழ வேண்டும்” என்றார்.

தீட்சிதர் சிறையில் பாடிய செய்யுட்கள் அறுபத் தைந்து. அவர் அவற்றை ஏற்ற இசைகளை அமைத்து உருக்கத்தோடு பாடினார். பிள்ளையப்பர் கேட்டு மகிழ்ந்தார்; “மேலும் முப்பத்தைந்து இயற்றி நூலை முடியுங்கள்” என்றார். அவ்வாறே தீட்சிதர் செய்தார். அந்நூலின் பெயர். ‘குழைக்காதர் பாமாலை’.

வடமலையப்பர் நூல்கள் இயற்றுவதில் வல்லவர். அவர் மச்ச புராணம் இயற்றினார். அது கி. பி. 1707இல் அரங்கேற்றப்பட்டது; ஐயாயிரஞ் செய்யுட்களை உடையது. அவர் நீடூர்த் தலபுராணமும் இயற்றித் தமிழ்த் தெய்வத்தை அழகு செய்தார்.

திருமேனி இரத்தின கவிராயர் வடமலையப்பரைப் புகழ்ந்து புலவராற்றும்படை, தென்திருப்பேரைத் திருப்பணிமாலை என்னும் நூல்களை இயற்றினார். திருமேனிக் கவிராயர், சிறிய இரத்தின கவிராயர் என்னும் வேறு பெயர்களும் இவர்க்கு உண்டு.

இக்கவிராயர் முதலில் செல்வராய் வாழ்ந்தார். சான்றோர் நூல்களைப் படிப்பதிலும் பிறர்க்குக் கற்பிப்பதிலும், நூல்கள் இயற்றுவதிலும் இவர் தம் தூய கருத்தைச் செலுத்தினார். அதனால் அவர்க்கிருந்த செல்வம் குறைந்து அவர் வறிஞரானார். வடமலையப்பர், திருமேனிக் கவிராயரின் வறுமையை ஒழித்து முன்னிலும் பெருஞ் செல்வராக்கினார்.

"ஏர்விற்று, இருந்த மனைவிற்று, மற்ற உடைமை எல்லாம் விற்று ஏழையானேன். உன் (வடமலையப்பர்) பேர்விற்று இழந்த பொருளெலாம் பெற்று வாழ்ந்தேன்" என்று மேற்கண்ட கவிராயர் வடமலையப்பரைப் பாராட்டுகின்றார்.

சொக்கநாதப் புலவர், வடமலையப்பரைத் திருமாலாகவே கூறுவதால் வடமலையாரின் பெரும்புகழ் நன்கு விளங்குகிறது. வடமலை வெண்பா, முக்கூடற் பள்ளு என்னும் நூல்களும் வடமலையப்பரைப் புகழ்ந்து கூறுகின்றன.

# 3. மதுர கவி

## பொற்காசே சோறு !

பாரத நாடு பன்னெடுங் காலமாக நம்மவரின் வெண்கொற்றக் குடையின் நிழலின்கீழ்க் குளிர்ந் திருந்தது. கி. பி. 16ஆம் நூற்றுண்டு முதல் 19ஆம் நூற்றுண்டின் முற்பகுதி வரை அது கொதித்துக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அயல் நாட்டினர் படையெடுப்பு. மொகலாயர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், போர்த்துக்கீசியர் முதலான அயல் நாட்டவர் தங்கள் ஏகாதிபத்தியக் கோட்டையை இந் நாட்டில் வலிமையாகக் கட்ட ஒருவரோடொருவர் போரிட்டுக்கொண்டனர். அவர்களை எதிர்த்து இந் நாட்டுக் குறுநில மன்னர்களும் குடிகளும் பெரும்போர் புரிந்தனர். அவர்கள் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக்கொண்டது தவிர்க்க முடியாமல் இருந்தது. குடிகள் அடைந்த இன்னலுக்கு அளவே இல்லை. 'கொதிக்கும் சோற்றை உண்ணுவோமா !' என்ற ஐயங்கூட அவர்களுக்கு உண்டாயிற்று. ஏன் ? அவ்வளவு விரைவிலே போர் வந்துகொண் டிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் சிறு பகுதியைக் கைப்பற்றினர். இருப்பினும் அமைதி இல்லை. அத்தகைய நிலையில் அவர்கள் தங்கள் ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் நிலை நாட்ட டியூப்ளே என்பவரைப் பிரெஞ்சுக்கவர்னராக நியமித்து இந்தியாவிற்கு அனுப்பினர். அவர் மிகத் தேர்ச்சி பெற்ற இராச தந்திரி; 'இந்தியர்களுக்குப்

போர்ப்பயிற்சி யளித்து அவர்களையே ஏவி, பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும்' என்ற ஒரு புதிய திட்டத்தை வகுத்தார்; செயலிலும் காட்டினார். இதனையே மற்ற மேல்நாட்டாரும் கீழ் நாட்டில் பின்பற்றினர்.

சென்னைக்கடுத்த பிரம்பூரில் பிறந்தவர் ஆனந்த ரங்கம் பிள்ளை என்பவர். அவர் தம் தந்தையோடு புதுவைக்குச் சென்றார். அவரது அறிவாற்றலையும் அரசியல் தந்திரத்தையும் அறிந்தார், டியூப்ளே. அவரை அவர், தம் உள்நாட்டு வெளிநாட்டு அமைச்சராக நியமித்தார். ஆனந்தரங்கம் பிள்ளையின் உள்ளம் முறுக்கேறி இருந்தது. அதனால் அவர் அப்பதவியை நெருக்கடியான காலத்தில் ஏற்றுக்கொண்டார். அக் காலத்தில் அவருக்கு உயர் பதவி கிடைத்தது, குதிரைக்குக் கொம்பு முளைத்தது போலாகும். அக்காலத்தில் ஏக போக உரிமை பிரெஞ்சுக்காரருக்கே. பிரெஞ்சுச் சரித்திரத்தில் முதலிடம் பெற்ற இந்தியர் பிள்ளையவர்களே.

பிள்ளையவர்கள் தமிழில் பெரும் பற்றும் புலவரிடத்துப் பேரருளும் பொருந்தப் பெற்ற புண்ணியர். அவரது உள்ளமாம் நிலத்தில் தமிழ்ப்பயிர் வளர்ந்து விளைந்தது. அவரது பெருங் குணத்தையும் பொருளையும் கேள்வியுற்றார் மதுர கவிராயர். அவரைக் காண விரைந்தது அவரது தமிழ் பழுத்த உள்ளம். கருங்கடலோடு உறவு கொண்டுள்ள புதுச்சேரியை அவரடைந்தார்.

கவிராயர், ஆனந்தரங்கம் பிள்ளையின் அழகிய மாளிகையைக் கண்டு களித்தார். பிள்ளையவர்கள் அப்போது அங்கில்லை. அங்கிருந்தோர் அவர் வயற்

புறஞ் சென்றிருப்பதாகக் கூறினர். கவிராயர் அங்கே சென்ருர். சலசலவென்ரேடும் வாய்க்கால் நீரும், அதை எதிர்த்து உடலசைத்துச் செல்லும் மீன்களும் கவிராயருக்குக் களிப்பை உண்டாக்கின. கதிர்களின் கனத்தைத் தாங்க முடியாமல் சாய்ந்த பயிர்களால் மூடப்பட்டிருந்தன, சில நிலங்கள். அறுவடை செய்து அழகழிந்திருந்தன, சில நிலங்கள். விண்ணில் நட்சத்திரங்கள் சிதறிக்கிடப்பன போல் செந்நெல் மணிகள் நிலத்தில் விழுந்து கிடந்தன. அவற்றைப் பொறுக்கிக்கொண் டிருந்தார் ஆனந்தரங்கம் பிள்ளை ; அவர் தற்செயலாய்த் தலை நிமிர்ந்தார் ; கவிராயரைக் கண்டார். "வணக்கம், அந்த வரப்பின்மேல் உட்காருங்கள். வருகிறேன்" என்ருர்.

புற்களால் மூடப்பட்டு மெத்தென்றிருந்த வரப்பின் மேல் மதுரகவிராயர் உட்கார்ந்தார். சிறிது நேரம் சென்றும் பிள்ளையவர்கள் முன்போல் நெல்லைப் பொறுக்கிக்கொண் டிருந்தார். கவிராயர் எழுந்திருப்பதும் உட்காருவதும் சிறிது நடப்பதுமாகத் தம் விரைவை அவருக்கு உணர்த்திஞர். பிள்ளையவர்கள் கவிராயரைப் பார்த்து, "ஏன் பறக்கிறீர் ?" என்ருர். அவரது முகத்தில் சினக்குறி தோன்றிற்று. சொல்லில் கடுமையும் தோன்றிற்று. அவை கவிராயரைச் சுருக்கென்று சுட்டன. அவர் பிள்ளையவர்களைப் பார்த்து,

'' கொக்குப் பறக்கும் புருப்பறக்கும்
குருவி பறக்கும் குயில் பறக்கும்
நக்குப் பொறுக்கி களும்பறப்பர்
நானேன் பறப்பேன் நராதிபனே !'

திக்கு விசயம் செலுத்தியுயர்
செங்கோல் நடாத்தும் செய்துங்கன்
பக்க லிருக்க வொருநாளும்
பறவேன் பறவேன் பறவேனே''

என்று இச்செய்யுளை விடையாகக் கொடுத்தார். ஆனந்தரங்கம் பிள்ளை பாட்டின் சுவையைச் சுவைத்துக் கொண்டே தம் வீட்டிற்குப் புறப்பட்டார். கவிராயர் முன்னே செல்ல, பிள்ளையவர்கள் பின்னே செல்ல வழி கடந்தது. பிள்ளையவர்களின் உள்ளம் சிந்தனைக் கடலில் சென்றது. கவிராயரவர்களின் எண்ணம் இமயச் சிகரத்தில் ஏறிற்று. பிள்ளையவர்கள், கவிராயரைத் தம் மாளிகைக்குள் அழைத்துச் சென்றார். அம்மாளிகையை ஆயுதம் தாங்கிய வாயிற் காப்போர் காத்து நின்றனர். அவர்கள், வணக்கம் செலுத்தி ஒதுங்கி நின்றனர். அம் மாளிகைமீது பிரெஞ்சுக் கொடி பறந்துகொண்டிருந்தது. நிலவொளியைப் பாய்ச்சியதுபோல அம்மாளிகை விளங்கியது. அதனுள் இளந்தென்றலின் இனிய காற்றும் சூரியனது வெள்ளொளியும் கூடி விளையாடின.

அம்மாளிகையில் கவிராயர் களைப்பாறினார். அவருக்கு உணவளிக்கப் பிள்ளையவர்கள் தலைவாழை இலையை அவர்முன் இட்டார். புலவருக்கோ பசி மிகுதி. பிள்ளையவர்கள் வெள்ளித் தட்டில் பொற்காசுகளைக் கொண்டுவந்து இலையில் இட்டார். இட்டு அவர், புலவரவர்களை முகமலர்ந்து நோக்கி, "மதுரகவி பாடும் மதுர கவிராயரே, மதுரமோடு இதனை உண்ணுங்கள்" என்றார். புலவர் திகைத்தார். "கவிராயரே, ஏன் விழிக்கிறீர்? இதனை உண்ணுங்கள். நான் கழனியில் உதிர்ந்துகிடந்த நெல்லைப் பொறுக்கினேன். அதனை நீர் அற்பமாக நினைத்தீர்

அது நெல்லன்று; பசிப்பிணி மருந்து. அது பசியை ஒழிக்குமா, இந்தப் பொற்காசுகள் பசியை ஒழிக்குமா ?" என்று பிள்ளையவர்கள் புன்முறுவலோடு வேடிக்கையாகக் கேட்டார்.

"என்னைப் பசி மிகவும் எரித்தது. அதனால் நான் பசியைப் போக்கிக்கொள்ள உங்களைத் துரிதப் படுத்தினேன்" என்று மதுரகவிராயர் கூறினர். பிள்ளையவர்கள் உடல் குளிரச் சிரித்து இலையை இழுத்துப் பக்கத்தில் வைத்துவிட்டு, அவரும் புலவர் பக்கத்தில் உட்கார்ந்தார். வேலைக்காரன் இருவருக்கும் உணவு பரிமாறினன். அவர்கள் உண்டனர். பின்பு பிள்ளையவர்கள் இலையிலிருந்த பொற்காசுகளைப் புலவருக்குப் பரிசாக அளித்தார்.

### பாம்பு தந்த பரிசு

சில ஆண்டுகள் கவிராயரது வாழ்க்கை இன்பக் கடலில் இனித்திருந்தது. அவர் தம் வாழ்நாளைச் செந்தமிழைச் சுவைத்துக்கழித்தார். அந்தச் சிந்தையை வறுமை சிதறச் செய்தது. வறுமை என்னதான் செய்யாது ? இறுதியில் காளத்தி பூபதியே தம் கொடிய வறுமைக்கு நன்மருந்து எனத் துணிந்தார். துணிந்த மதுரகவிராயர் அவரைக் காணப் புறப்பட்டார். காளத்தி பூபதியின் கொடையைப் பாராட்டிப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவரும் படிக்காசுப் புலவரும் பாடியுள்ளனர். பொருள் இருந்தபோது அவர் பாமாலை கட்டிய பாவலர்க்கும் பசியால் வாடிய ஏழை இரவலர்க்கும் இன்முகத்தோடு பொருள் கொடுத்தார். கொடுத்துக் கொடுத்து அவரது குடி முழுகிப்போயிற்று. அவர் இருந்த எழில் மாளிகையையும் விற்று இரவலர்க்குக் கொடுத்து

விட்டுக் குடிசையில் அவர் குடியேறினர். ஒருநாள் அவரது கையில் செல்லாத காசுகூட இல்லை. அதனால் அவரது உள்ளம் நெருப்பிற் பட்ட மெழு காய் உருகிற்று. எதன் பொருட்டு ? 'இனிக் கொடுப் பதற்குப் பொருள் இல்லையே' என்று அவரது உள்ளம் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தது. 'நாளைக்கு என்னை நம்பிவரும் இரவலர்க்கு இல்லை என்று சொல்லி அவரது துன்பக் குறியைக் காண்பதைவிட எங்கேயாகிலும் தலை மறைவாகச் செல்வதே இனிது' என்று காளத்தி பூபதி ஊரைவிட்டுச் சென்றார்.

மதுர கவிராயர், காளத்தி பூபதியைக் காணச் சென்று ஓர் இன்பச் சோலையை யடைந்தார். அது இன்பச் சோலையாய் இருப்பினும் கவிராயருக் குத் துன்பச் சோலையாகத் தோன்றியது. அங்கிருந்த உயிர்களை உற்று நோக்கி, 'இங்கிருக்கும் உயிர்கள னைத்தும் பசியால் படாதபாடு படுகின்றன. இதோ செல்லும் இந்த எறும்பிற்குக் கண்ணிற்குத் தெரி யாத வயிறு. அவ்வளவு சிறிய வயிற்றிற்கும் இரைக் காக இரவு பகலாக அலைகின்றது. பசி ! பசி ! மழை பெய்தால் ஏரி குளங்கள் நிறைந்து பல மாதம் அமைதியாய் இருக்கின்றன. இந்த வயிறு ஒரு நாளைக்கு எத்தனை முறை உணவு கேட்கிறது ! இந்த வயிற்றினுள் பெரு நெருப்புத்தான் இருக்கிற தோ?' அன்றி, வடவைத் தீதான் இருக்கிறதோ ?" என்று உருகினர். உருகி வழி நடந்தார். சூரியன் நெருப்புக் குழம்பைக் கக்கிவிட்டு மறைந்தான். இரு ளும் மெல்ல மெல்ல நகர்ந்து வந்துகொண்டிருந்தது. நிலமகள் கரும் போர்வையைப் போர்த்துக்கொண் டாள். அப்போர்வையின் மீதே கவிராயர் நடந்து

ஒரு சத்திரத்தை அடைந்தார். அச் சத்திரத்தின் ஒரு மூலையில் ஒரு மங்கலான விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண் டிருந்தது. அங்குமிங்கும் சிலர் துணிகளை விரித்தும் வெறுந்தரையிலும் படுத்துக்கொண்டிருந்தனர். கொசுக்களின் வீணையும் பூச்சிகளின் யாழும் சிள்வண்டின் குரலோடு சேர்ந்து ஒலித்தன.

வழிநடந்த களைப்பு, உள்ளத்தின் சோர்வு, பசியின் மிகுதி இவற்றால் குன்றிய உணர்ச்சியால் புலவர் சத்திரத்தில் படுத்தார். உடலின் வலியாலும் பசியின் கடுமையாலும் அவருக்குத் தூக்கம் வரவில்லை ; ஏக்கமே வந்தது. அந்த ஏக்கத்தில் அவர் சிறிது நேரம் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தார். தூக்கம் வரவில்லை. அவர் நெருப்பெனப் பெருமூச்சு விட்டார் ; எழுந்தார் ; உளம் கொதித்தது. வறுமையை நோக்கி,

'ஏ வறுமையே, என்னுடைய உடலைவிட்டுப் பிரியாத நிழல்போல நீ நெடுநாளாக என்னோடு அலைந்து வருந்தினாய். நீ நாளைக்கு என்னோடு கூட இருப்பாயோ ? நான் காளத்தி பூபதியின் ஊரை அடையும்போது நீ எங்கிருப்பாயோ ? நான் எங்கிருப்பேனோ ? இன்று மட்டும் நீ என்னோடு இரு' என்னும் பொருள் நிறைந்த செய்யுளைக் கூறினார். கவிராயருக்கு அருகில் படுத்திருந்த ஒருவரது உள்ளத்தை அள்ளிக்கொண்டது அச் செய்யுள். அவர் தான் காளத்தி பூபதி.

'பெரிதும் என்னை நம்பி வந்திருக்கும் புலவருக்குக் கொடுக்க ஒன்றுமில்லையே ! இவர் யாரோ எந்த ஊரோ ? ஊரையும் பேரையும் அறிவதால் இவரது கொடும்பசி தொலையுமோ ? இவருக்குக் கொடுக்க ஒன்றுமில்லையே ! இல்லை என்று சொல்

வதைவிட இறப்பதே இன்பம்' என்று ஒரு பாம்பின் புற்றில் காளத்தி பூபதி கையை விட்டார். அதனுள்ளிருந்த நல்ல பாம்பு அறம் வளர்த்த அவரது கையில் ஒளி விளங்கும் ஒரு மாணிக்கத்தைக் கக்கிற்று. அவர் கையை எடுத்துப் பார்த்தார் ; மகிழ்ந்தார் ; புலவரிடம் சென்றார். அப்போது நிலவு, காரிருட் திரையைத் தள்ளிக்கொண்டு வெளியே வந்தது. அவ்வெண்ணிலவில் கவிராயர் முகத்தைப் பார்த்தார் காளத்தியப்பர். அது வறுமையால் கசக்கப் பட்ட முகமலராயினும், அதில் தமிழின் குளிர்ச்சியும், அறிவின் மலர்ச்சியும், அன்பின் ஒளியும் விளங்கின. காளத்தியப்பர் புலவரை வணங்கி, " இந்த மாணிக்கத்தைப் பெற்று உங்களை வாட்டுகின்ற வறுமையை ஓட்டுங்கள் " என்று அவரது கையில் மாணிக்கத்தைக் கொடுத்தார். கவிராயர் ஒன்றும் புரியாமல் திகைத்தார். காளத்தியப்பர் பாட்டைக் கேட்டது முதல் மாணிக்கம் தந்தது வரை கூறினர். " இத்தகைய பெருங்குணமுள்ள தங்கள் திருப் பெயரை அறிந்துகொள்ளும் ஆற்றல் அற்றவனாய் உள்ளேன்" என்றார் கவிராயர்.

"நீங்கள் யாரை நாடி வந்திருக்கின்றீரோ அந்த ஏழைதான் அடியேன். மதுரகவி பாடிய தங்கள் திருப்பெயரை......"

" அறிய விரும்புகின்றீர் போலும். நீங்கள்தான், 'மதுரகவி' என்று சொன்னீரே! அதுவே என்பெயர்."

"ஆ! ஆ! நீங்கள்தானா மதுரகவிராயர்!" என்று காளத்தியப்பர் கவிராயரை வணங்க, கவிராயர் அந்த அன்பின் திருவுருவைத் தழுவி, அருளொழுகும் கண்களிலிருந்து நீரைப் பெருக்கினர். இருவரும் அளவளாவி மகிழ்ந்தனர்.

# 4. முட்டைக்குத் தோற்ற புலவர்

## உலகில் ஒரு புதுமை

'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று அருந்தமிழ் அம்மையார் கூறிய தொண்டைநாட்டிலுள்ள வயிரபுரத்தில் பொய்யா மொழிப் புலவர் தோன்றினார். அவரது காலம் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகட்கு முன். அவரது ஆசிரியர், 'பொய்யாமொழியாய் இருப்பாய்' என்று கூறினார். அன்று முதல் அவர் பொய்யா மொழிப் புலவரானார். அவரது இயற்பெயர் எங்கோ சென்றுவிட்டது.

பொய்யாமொழிப் புலவர் ஒரு நல்லாசிரியரை அடுத்துக் கல்வி கற்றார். எத்தனையோ ஆசிரியர் பெயர் தெரியாமல் இருத்தல் போல் பொய்யாமொழி யின் ஆசிரியர் பெயரும் தெரியாமல் இருக்கிறது. பொய்யாமொழிப் புலவர்க்குக் கண்கண்ட தெய்வம் ஆசிரியர். உளங்கொண்ட தெய்வம் வயிரபுர மாகாளியம்மை. செல்வரிடத்து ஏழைகள் வணங் கிப் பொருள்பெறுவதுபோல், ஆசிரியரிடத்து அவர் வணங்கிக் கல்வி கற்றார்; உயிரோவியம்போல் இருந்து கேட்டார். பசுவானது புல்லைக் கண்ட இடத்து வயிறார மேயும்; பின்னர் வயிற்றிலிருக்கும் புல்லைச் சிறிது சிறிதாக வாய்க்குக் கொண்டுவந்து அசைபோட்டு ஜீரணிக்கச் செய்யும். அதுபோல், பொய்யாமொழியார், ஆசிரியரிடத்து நிரம்பக் கேட்டுப் பின்பு ஓரிடத்திலிருந்து அவர் கூறியதை

நினைவிற்குக் கொண்டுவந்துசிந்தித்துத் தெளிந்தார். அரசன் கட்டளைப்படி அடங்கி நடக்கும் நற்குடி போல், தாம் கற்ற பெருநூல்கள் கூறியபடி அற வழியில் ஒழுகினர். வயிரபுரத்தில் கோயில் கொண்ட மாகாளியம்மையை மனம் மொழி மெய்களால் வணங்கினர்.

அக்காலத்தில் மாணவர்கள் ஆசிரியர்களுக்குத் தொண்டு செய்து கல்வி கற்றல் வழக்கம். அத் தொண்டு அன்பினுற் செய்யப்பட்டது. பொய்யா மொழியாரும் தம் ஆசிரியரது தினைக்கொல்லையைக் காவல் புரிந்தார். இளந்தென்றல் அவரைக் கண் ணுறங்கச் செய்தது. சிறிது நேரத்திற்குள் அலறி எழுந்தார் புலவர். ஐயனர் கோவில் மண்குதிரை போல் ஒரு பெருங்குதிரை தினைப்பயிரை உதடு களால் வாய்க்குள் தள்ளித் தள்ளி மேய்ந்துகொண் டும், கருங்குளம்புகளால் சீய்த்துப் பயிர்களை அழித் துக்கொண்டும் இருந்தது. பொய்யாமொழிப் புலவர் ஓடிப்போய்ப் பார்த்தார்.

'இக்குதிரையோ காளிங்கராயனது. இது அழிப் பதோ நமது ஆசிரியரின் பயிரை' என்று குதிரை யைத் துரத்தினர். அக்குதிரை அவர்மீது பாய்ந் தது. புலவர் ஒதுங்கி, மாகாளியம்மையை மனத்துள் இருத்தி,

"வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
காய்த்த தினைப்புனத்துக் காலைவைத்துச்-சாய்த்துக்
கதிரைமா ளத்தின்னும் காளிங்க னேறும்
குதிரைமா ளக்கொண்டு போ"

என்று உருகிப் பாடினர். குதிரை கனைத்துத் துள்ளி விழுந்து இறந்தது. தினைக்கொல்லையைக் காக்கச்

சென்ற தமிழ் மாணவர் இவ்வாறு நிகழுமென்று நினைத்திருப்பாரா ? 'ஒன்றை நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்,' அன்றோ ?

குதிரை மாண்டது புலவருக்குப் பெரு வியப்பாக இருந்தது. 'வியப்பான செய்தியை ஆசிரியரிடம் கூறி அவரை மகிழ்விக்கலாம்' என்று பொய்யாமொழியார் அவரிடம் ஓடிக் கூறினார். அதனைக் கேட்ட ஆசிரியர் மகிழ்ந்தாரோ? இல்லவே இல்லை. குதிரை இறந்த இடத்திற்குச் சென்று, அதனைக் கண்டு, காளிங்கராயனால் கடுந்துயர் நேரிடுமென்று கலங்கி, "உடும்பு போனால் போகட்டும்; அது காலை விட்டால் போதும்" என்றார். குறிப்புணர்ந்த பொய்யாமொழிப் புலவர், 'குதிரை மாளக் கொண்டுபோ, என்று முன்பு பாடிய வெண்பாவின் ஈற்றடியை, 'குதிரைமீ ளக் கொண்டு வா' என்று மாற்றிப் பாடினார். தூக்கத்திலிருந்து எழுந்ததுபோல் குதிரை எழுந்தது. ஆசிரியர் மகிழ்ந்து, "அகத்தியனாகவும், பொய்யா மொழியாகவும் வாழ்க" என்று வாழ்த்தினார். அது முதல் புலவர் பொய்யாமொழி என்று அழைக்கப்பட்டார்.

### பாட்டினால் மிதந்த பலகை

கடைச்சங்கம் ஒரு காலத்தில் சிறப்புற்றுச் செந்தமிழை வளர்த்தது. பிற்காலத்தில் அது மறைந்து போயிற்று. அதனைப் புதுப்பிக்கக் கருதினார் பொய்யாமொழியார். அதற்காகச் செந்தமிழ் மதுரைக்குச்சென்றார். "கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டுப் பின் பாண்டியனைக் காண்பது நல்லது" என்று எண்ணிஅவர் சொக்கநாதர் கோவிலுக்குச்சென்றார்.

வணங்காமுடிப் பாண்டியனும் அக்கோவிலுக்குச் சென்றான். அங்கிருந்த புலவர்களும் பக்தர்களும் பாண்டியனிடம் பொய்யாமொழிப் புலவரைப் பற்றி புகழ்ந்து கூறினர். அவன் அதனைப் பொருட் படுத்தவில்லை. ஏன்? போலிப் புலவர் பலரைக் கண்டவன், அவன். அவர்கள் பின்னரும் வற் புறுத்திக் கூறினர். பாண்டியன் புலவரை அழைத் துக்கொண்டு போய்ச் சங்கப் புலவர்களின் விக்கிர கங்களைக்காட்டி, ' இத் திருவுருவங்கள் தலையசைக் கும்படி ஒரு பாட்டுப் பாடும் ' என்றான்.

' மலர் மாலையணிந்த நாற்பத்தொன்பது கடைச் சங்கப் புலவர்களே, உங்களிலே நானொருவன் ஒவ்வு வனோ? நீங்கள் பாடிய முத்தமிழுக்கு என் பைந் தமிழ் ஒக்குமோ? பாண்டியன் அறியச் சொல் லுங்கள் ' என்னும் பொருள் செறிந்த நற்றமிழ்ப் பாடலைப் பொய்யா மொழியார் பாடினார். சங்கப் புலவர் திருவுருவங்கள் தலைகளை அசைத்தன.

பாண்டியன், பொய்யாமொழியாரோடும் மற்றச் சான்றோரோடும் பேசிக்கொண்டே சென்று பொற்றா மரைக் குளத்தைப் புலவருக்குக் காட்டி, " செந் தமிழ்க் கொழுந்தாம் சங்கப் புலவர்கள் வீற்றிருந்த தூய சங்கப் பலகை இதனுள் மூழ்கி இருக்கின்றது. இது மிதக்கும்படி ஒரு பாடல் பாடும் " என்றான்.

' முன்போல் புலவர்களைப் போற்றும் அரசர் களில்லை. ஆயினும் புலவர்கள் உண்டு என்று காட்டுதற்குப் பாண்டியன் அறியச் சங்கப் புலவர் வீற்றிருந்த சங்கப் பலகையே சற்றே மித ' என்னும் கருத்தமைந்த பாடலைப்பாடினார் பொய்யாமொழியார்.

சங்கப் பலகை சற்றெழுந்து மூழ்கிற்று. புலமை மிக்கோர் வியந்து தம்மை மறந்து நின்றனர். இத் தகைய வியத்தகு செயல்களைக் கண்டும் வணங்கா முடி மாறன் புலவரைப் போற்றவில்லை. புலவரோ அதனைப் பொருட்படுத்தவில்லை. 'தமிழுக்காகவே பிறந்து, தமிழுக்காகவே வளர்ந்து, தமிழுக்காகவே ஆட்சி புரிந்த பாண்டியர் மரபில் தோன்றிய ஒரு வன் தமிழைப் போற்றவில்லையே!' என்று அவரது உள்ளம் கொதித்திருக்கலாம்.

இச்செய்தி பாண்டிமாதேவிக்குத் தெரிந்தது. 'குணமாகிய மலையின் உச்சியில் நின்ற பெரியோரது கோபம் ஒரு கணந்தான் இருக்கும். ஆயினும் கோபிக்கப்பட்டவரால் அதனைத் தடுக்க முடியாது' என்று அவள் கதறினாள். அவளது உள்ளம் அலையிற்பட்ட துரும்பாய் அலைந்தது. 'என் ஆருயிர்க்கணவருக்குப் பேரிடர் நேருமோ? அன்றி ஆட்சிக்கே அழிவு நேருமோ?' என்று அவள் அலறினாள். அவளது உடல் வியர்த்தது ; வயிறு எரிந்தது ; புலவர் சாபம் பொல்லாதது என்று அவள் புலம்பினாள் ; பின் புலவரைத் தன் அரண்மனைக்கு அழைத்துத் தன் கணவரது குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினாள். "அம்மையே, அரசர் என்னைச் சோதித்தது நல்லதுதான். ஒருவர் நல்லவரைச் சோதிப்பது பொன்னைப் புடமாக்குவதற்கு ஒப்பாகும். நீர் வருந்த வேண்டாம்" என்றார்.

மண்ணுலகாளும் வேல்வேந்தரின் வில்லம்பு உடலிற் பாயும். சொல்லுலகாளும் பாவேந்தரின் சொல்லம்பு உள்ளத்திற் பாயும்.

**எனக்கொரு பாட்டு**

பொய்யாமொழிப் புலவர் சிவபெருமானிடத்தில் நீங்கா அன்புடையவர்; அவரையன்றி வேருெரு தெய்வத்தைக் கனவிலும் கருதாதவர்; சிவனது வேறு வடிவங்களாகிய முருகன், பிள்ளையார் முதலிய தெய்வங்களையும் நினையார். முருகப் பெருமானுர் புலவரது கனவில் தோன்றி, "என்மீது ஒரு பாட்டுப் பாடுக" என்ருர். புலவர் விழித்து, "கோழியைப் பாடிய வாயால் குஞ்சினைப் பாடுவனே?" என்று கூறினுர். சிவபெருமானிடத்துப் புலவர் கொண்ட பேரன்பினுல், அவ்வாறு கூறியதன்றிச் செருக்கினுல் கூறினுர் என்று கூற முடியுமா?

**முட்டையைப் பாடு**

தஞ்சைவாணன் என்பான் தென்மாறை நாட்டை யாண்ட பாண்டியன் குலசேகர தேவர்க்குப் படைத் தலைவன். அவன் தஞ்சாக்கூர்க்குத் தலைவன். ஆகையால் தஞ்சைவாணன் எனப் பெயர் பெற்ருன். தஞ்சாக்கூர் என்பது வைகையாற்றின் கரையிலுள்ள ஓரூர். தஞ்சைவாணன் சிறந்த கொடையாளி; பாவலரைப் போற்றும் பண்புடையவன்; போரிற் சிறந்தவன்; 'அவன் சோழனேடு போரிட்டு வெற்றி பெற்ருன்' என்று தஞ்சைவாணன் கோவை கூறுகிறது. அவனைக் காண விரும்பினுர் பொய்யாமொழியார். அவன்மீது அகப்பொருள் அமைந்த அரிய நூலொன் றியற்றினுர். அதன் பெயர் தஞ்சைவாணன் கோவை என்பது.

தஞ்சாக்கூரை யடைந்து தஞ்சை வாணனைக் காணப் புறப்பட்டார் பொய்யாமொழியார். முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் தம் இயல்பில் திரிந்து

பாலை நிலமான பாழிடத்தில் சென்றுகொண்டிருந் தார் புலவர். இடக்கையில் வில்லும், வலக்கையில் அம்பும், வலத்தோளில் அம்புப்புட்டிலுமாய் யானைக் கன்று போல் ஒரு வேடன் புலவர் முன் தோன்றி, "ஐயா, உன்னிடத்துள்ள பொருளைக் கொடு. இல்லை யேல் இந்தக் கூரிய அம்பு உன் மார்பினைப் பதம் பார்க்கும்" என்றான்.

"என்னிடத்தில் செல்வப்பொருள் ஒன்றுமில்லை. சிறிது கல்விப் பொருள்தான் உண்டு."

"அப்படியானால் நீ புலவனோ?"

"அப்படித்தான் உலகம் சொல்கிறது."

"உடன்போக்கின்போது நற்றாய் இரங்கலாக என்மீது ஒரு பாட்டுப் பாடும்."

"உன் பெயர் யாது?"

"என் பெயர் முட்டை."

"இவன் ஒரு புலவனாக இருக்கலாம். புலவனைப் பாடுவது குற்றமில்லையன்றோ?" என்று புலவர் நினைத்து,

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே — மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்குங் காடு"

("மின்னல் போன்ற கூர்மையான வேலையுடைய முட்டை என்பவனுக்கு மாறுபட்ட பகைவர் செல் லும் கூர்மையான வேலமரத்தின் முள்தைக்கின்ற காட்டில், பொன்னைப்போல் கள்ளியின் பொறி

பறக்கும் அருஞ்சுரத்தில் எனது மகள் தலைவனோடு செல்வதற்கு உடன் பட்டாளே! ")

என்று பொய்யாமொழியார் பாடினார். வேடன் அதனைக் கேட்டு நகைத்து, "புலவனே, நீ பொய்யா மொழிப் புலவனல்லன். பொய் ஆம் மொழிப் புலவன் தான். உனது பாட்டில் சொற்குற்றமில்லை. பொருட்குற்றமுண்டு. பல திங்கள் தண்ணீர் இல் லாமற் போயினும் காய்ந்துபோகா, கள்ளிச் செடிகள். அத்தகைய செடிகளே கதிரோன் கொடு மையால் காய்ந்து பொறிபறக்கும் பாலை நிலத்தில் கருவேல் மரத்தின் முட்கள் தீய்ந்து போகாமல் இருக்குமோ? ஆகையால் உனது பாட்டுக் குற்ற முடைத்தாயிற்று. நான் பாடுகிறேன் கேள்.

"விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தில் பெய்வளையும் சென்றனளே
பொய்யாக மொழிப்பகைஞர் போல்"

(விழுந்த மழைத் துளி நிலத்தின் வெப்பத் தினால் விண்ணையும் சூரியனையும் சுடும் என்று மேகம் ஏங்கிப் பெய்யாத பாலைவனத்தில், பொய்யா மொழிப் பகைவர் போல் எனது மகள் தலைவனோடு சென்றாள்.)

என்று ஒரு பாடலைக் கூறினான் வேடன். புலவர் திகைத்தார். வேடன் புலவரைப் பார்த்து, "முட்டை பெரியதா? குஞ்சு பெரியதா?" என்றான்.

"குஞ்சு பெரிது."

"அவ்வாறாயின், கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சினையும் பாடுக" என்று வேடன்

மறைந்தான். "முருகப் பெருமானுர், முன்னர் கனவில் தோன்றித் தம்மைப் பாடுமாறு கூறினர். "கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சினைப் பாடமாட்டேன், என்றேன். அதனுல்தான் முருகப் பெருமானுர் வேடனுக வந்து என்னைத் திகைக்கச் செய்தார்" என்று புலவர் அவரது பேராற்றலைப் போற்றினுர். பைந்தமிழ்ப் பின் சென்ருன் பச்சைப் பசுங் கொண்டலான திருமால். செந்தமிழ்முன் சென்ருன் செக்கச் சிவந்த செம்மேகமான செவ்வேள். எனின், செந்தமிழ்ப் பெருமையைச் சொல்வார் யாரே? எவ்வளவுதான் செந்தமிழ் மிகுந்த இனிமையுடைத்தாய் இருப்பினும் பிரமனுக்கு உபதேசித்த முருகவேள் ஒரு புலவரிடம் இருமுறை சென்று பாடச் சொல்வது வியப்பிலும் வியப்பன்ருே!

## பொன் தேங்காய்

பொய்யாமொழிப் புலவர் தஞ்சாக்கூரையடைந்து, தஞ்சைவாணனது மாளிகையின் வாயிலை நெருங்கி, வாயிற்காவலனைக் கண்டு "பொய்யாமொழிப் புலவர் தங்களைக் காண வந்திருக்கிருர் என்று தஞ்சைவாணனிடம் கூறுக" என்று கூறினுர்.

"புலவரே, வணக்கம். தஞ்சைவாணர் போர்க்களத்தில் இருக்கின்ருர். (ஓரிடத்தைக் காட்டி) இங்கே எழுந்தருளுங்கள். இதோ வருகின்றேன்" என்று காவலன் அழகு மாளிகையினுட் சென்று விரைந்து மீண்டு வந்து, "புலவரே, உங்களைத் தஞ்சைவாணரது கற்பரசியார் வரவேற்கக் காத்துக் கொண்டிருக்கிருர். அந்த அம்மையார் பைந்தமிழ்க் கொண்டல்; பாவலர் செவிலி. நீங்கள் அரண்மனைக்கு வாருங்கள்" என்ருன். புலவர்

சென்ருர். வாணன் மனைவி வரவேற்ருள்; உபசரித்தாள்; உடல் பூரித்தாள்.

பின், "உங்கள் கையிலிருக்கும் சுவடியை நான் பார்க்க விரும்புகின்றேன்" என்ருள் அவள். புலவர் அதனைக் கொடுத்தார். அவள் அதன்மீது கட்டப் பெற்றிருந்த கயிற்றினை அவிழ்த்தாள்; மேலேட்டில், தஞ்சைவாணன் கோவை' என்று தடித்த எழுத்திலிருந்ததைக் கண்டு மகிழ்ந்தாள்; ஒவ்வொரு செய்யுளையும் உற்று நோக்கினுள்; உளம் பூரித்தாள்.

"நான் இந்த நூலை அரங்கேற்ற வந்தேன். தலைவன் இங்கில்லை. தலைவனைக் காணுத தலைவி இரங்குவது இயல்புதானே?" என்ருர் பொய்யாமொழிப்புலவர்.

"இரங்குந் தலைவியைச் செவிலித்தாய் தேற்றுவதும் இயல்புதான். நீங்கள் அந்நூலை அரங்கேற்றக் கோருகின்றேன்" என்ருள் வாணன் மனைவி. பொய்யாமொழிப் புலவர் அதற்கு உடன்பட்டார்.

இலக்கிய இலக்கணங்களில் புலமை பெற்ற புலவர்கள் முன்னிலையில் பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் கோவையை அரங்கேற்றினுர். புலவர்கள் மகிழ்ந்தனர். வாணன் மனைவி இன்பப் பெருங்கடலில் ஆழ்ந்து ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒவ்வொரு பொன் தேங்காயைப் புலவர்க்குப் பரிசிலாக உருட்டினுள். அத்தக் கோவை நானூறு பாடல்களை உடையது. புலவர்கள் பொய்யாமொழியின் புலமையையும், வாணன் மனைவியின் தமிழ்ப் பற்றினையும் போற்றினர். புலவர் நன்றி கூறினுர். அந்தப் பொன் தேங்காய்கள் இரத்தினங்கள் பதிக்கப்பெறும் என்பதை யாரறிவார்?

பல நாட்களுக்குப் பின் போர்க்களத்திலிருந்து தஞ்சைவாணன் தஞ்சாக்கூரை அடைந்தான். அஞ்சொல் மொழியாம் அவனது மனைவி தஞ்சை வாணன் கோவையைப்பற்றிக் கூறிக் கோவையை அவனிடம் கொடுத்தாள். அவன் அதனைப் பல முறை படித்தான்; தேன் உண்ட வண்டுபோல் ஆனான். அவன் பாவலரைப் பரிசோடு அழைத்துக் கொண்டு வருமாறு பல்லக்கனுப்பினான். 'தஞ்சைவாணனது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்' என்று புறப்பட்டார் பொய்யாமொழிப்புலவர். தஞ்சைவாணன் அரச விருதுகளோடு புலவரை வரவேற்றான்; உபசரித்தான்; அவன் மனைவி கொடுத்த பொன் தேங்காய்களை வாங்கிக்கொண்டான். அதனைக் கண்டோர் வாணனை வெறுத்தனர். தஞ்சைவாணன் மீண்டும் ஒருமுறை கோவையை அரங்கேற்றுமாறு புலவரைக் கேட்டுக்கொண்டான்.

புலவர் அவ்வாறே அதனை அரங்கேற்றினார். வாணன் அகமிக மகிழ்ந்து, இன்பத்திலாழ்ந்து, தன் மனைவி கொடுத்த ஒவ்வொரு பொன் தேங்காயின் மூன்று கண்களிலும் மூன்று இரத்தினங்கள் பதித்து ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒவ்வொரு தேங்காயைப் புலவர்முன் உருட்டினான். கண்டோர் வியப்புற்றனர்.

வாணனிடத்தில் புலவர் சிலநாள் தங்கினார். அவன் தமிழ்ச்சுவை துய்த்தான். ஒரு நாள் புலவர் அவனிடம் தாம்போக விடை கேட்டார். அவன் கடுஞ்சொல் கேட்ட சான்றோர்போல் துன்புற்றான். துன்புற்றுப் புலவரைப் பார்த்து. "நீங்கள் என்றும்

திலேயே இருப்பீரென்று நான் எதிர்பார்த்தேன்'' என்று தாழ்ந்த குரலில் கூறினுன்.

"எல்லோரும் இன்புற்றிருக்க, நற்றமிழ் நாடு முழுவதும் சென்று அறம் உரைக்கக் கருதி உள்ளேன். அதனுல் தயவுசெய்து விடை கொடுங்கள்'' என்ருர் புலவர். தஞ்சைவாணன் விடை கொடுக்க வாய் திறந்தான்; முடியவில்லை. அதனுல் அவன் தலையசைத்துக் கைகுவித்து விடை கொடுத்தான்.

கண் பெற்ற புதுமை !

பொய்யாமொழிப் புலவர் தெய்வத் தமிழ்நாடு முழுவதும் சென்று ஆங்காங்குள்ள மக்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை உரைத்துச் சென்ருர். அவ்வாறு செல்லுங்கால் திருக்கானப்பேர் என்னும் காளையார் கோயிலை அடைந்தார். அங்குள்ள தெய்வத் திருக் கோயிலுக்குச் சென்று, கண்ணுதற் கடவுளைக் கை தொழுது, தேவாரம், திருவாசகம் முதலிய தெய்வப் பாடல்களை ஓதினுர்; உருகினுர். உருகித் தெருவழியே சென்றுகொண் டிருந்தார்.

அப்போது கருமேகம் சூழ்ந்து பெருமழை பெய்தது. மின்னற்கொடி மேகத்திரையைத் தள்ளிக் கொண்டு வானரங்கில் வளைந்து வளைந்து ஆடினுள். ஆடலுக்கேற்ப இடி மத்தளமாயிற்று. மின்னற் கொடிக்கு நாணம் உண்டாயிற்று. அவள் பெண்ணல்லவா? அதனுல் அவள் நாணி மறைந்து விட்டாள். பின்னரும் ஆடவேண்டும் என்ற ஆசை அவளை ஊக்கிற்று. மீண்டும் அவள் வானரங்கில் ஆடினுள். அந்த இயற்கைக் காட்சியைக் கண்டு கொண்டே பொய்யாமொழியார் மழைக்காக ஒரு

வீட்டினை அடைந்தார். ஒரு காலத்தில் நடனம் நடனமாடிய வீடு அது. அதனுள்ளிருந்த நடன மங்கையர் நால்வரும் ஏதோ காரணத்தால் சில ஆண்டுகட்கு முன் குருடாயினர். அவர்கள் தட்டுத் தடுமாறிப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தனர். அதனைக் கண்ட புலவர் உள்ளம் உருகிற்று. குருடரைக் கண்டு கொடியவர் உள்ளமும் உருகும் எனின் பண்பட்ட பாவாணர் உள்ளம் உருகாமலிருக்குமா ?

பொய்யாமொழிப் புலவர் அவர்கட்குக் கண் தெரியவேண்டுமென்று ஈசனை நினைத்து ஒரு பாடல் பாடினர். விண்ணில் மின்னல் தோன்றியதுபோல் அவர்கள் கண்ணில் ஒளி தோன்றியது. நங்கையர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்கள் புலவரது அடியில் விழுந்து வணங்கி, "உங்களுக்குக் கைம்மாறு செய்ய எங்களால் முடியவில்லை' என்று கதறினர். புலவர், "உங்களால் ஏன் கைம்மாறு செய்ய முடியாது ? முடியும். நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய கைம்மாறு, நடனக் கலையை வளர்ப்பதும், அதனுல் மக்களுக்கு இன்பத்தைத் தருவதுமே யாம்" என்ருர். "தங்கள் திருவுளப் படியே செய்வோம்" என்றனர் அவர்கள். புலவர் அவர்களிடம் விடைபெற்றுச் சீநக்க வள்ளலைக் காணப் புறப்பட்டார்.

ஏழூரும் வேண்டாம்

சீநக்கன் என்பான் அறவழியில் பெற்ற பெருஞ் செல்வனுகவும், செந்தமிழ் கற்ற திருவுடையவனுக வும் விளங்கினன். கன்னித் தமிழை ஒரு கண்ணுக

வும் கலைஞர்களை மற்ருெரு கண்ணுகவும் ஒழுக்கத்தை உயிராகவும் கொண்டவன் அவன். அவனது ஊர் அரசூர். அவ்வூர் சோழநாட்டில் உள்ளது.

பொய்யாமொழிப் புலவர் சீநக்கனைக் காண அரசூரை நோக்கிச் சென்றுகொண் டிருந்தார். ஏதோ ஒரு வேலையாக இடைவழியிலே வந்து கொண் டிருந்த சீநக்கனைப் புலவர் கண்டார்; மகிழ்ச்சி கொண்டார். சீநக்கன் பொய்யாமொழிப் புலவரின் புலமையையும் ஒழுக்கத்தையும் முன்னமே கேள்வியுற்றிருந்தான். அதனுல் அவனும் பெரு மகிழ்ச்சி யுற்ருன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தால் அம்மகிழ்ச்சி கடலினும் பெரிதாக வன்ருே இருக்கும்!

சீநக்கன் தன் பொருட்டுப் புளிச்சோறு கொண்டு வந்திருந்தான். புலவரது பசியை அவருடைய கண்கள் காட்டின. பசிக் குறிப்பறிந்த சீநக்கன் தானே சென்று தூய நீர் கொண்டுவந்து உணவு உண்ணுமாறு புலவரை வேண்டிக் கட்டுச் சோற்றினை இட்டான்; கட்டுச் சோற்ருேடு கனிந்த இனிய மொழிகளையும் கலந்திட்டான். புலவர் சோறுண்டு களித்தார்; இன்சொல் கேட்டு மகிழ்ந்தார். மகிழ்ந்து, "வண்டுகள் நிறைந்த மாலையையுடையவன், அரசூர்க்குத் தலைவன், அவன் பெயர், புகழ்மிகுந்த சீநக்கன். அவன் இன்று மகிழ்ந்திட்ட சிறப்புள்ள புளியஞ்சோறு நான் தமிழை ஆராயும்போதெல்லாம் என்னுள்ளத்தில் தித்திக்கும்" என்ற கருத்துள்ள பாடலைப் பாடினுர். ஒரு கைக் கூழுக்கும், ஓரகப்பைக் கீரைக்கும் நன்றி சுமந்து பாடும் புலவர் குலத்தைச் சேர்ந்த பொய்யா

மொழிப்புலவர், தாம்வயிருர உண்ட இனிய புளியஞ் சோற்றுக்குப் பாடியதில் வியப்பொன்றும் இல்லை.

சீநக்கன் பொய்யாமொழிப் புலவரைத் தன் அரசூர்க்கு அழைத்துச் சென்ருன் ; உபசரித்தான் ; மகிழ்ந்தான் ; தமிழ்ச் சுவை துய்த்தான். புலவரும் அங்கே சில நாள் இருந்தார்.

கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு தனி அரசு புரிந்த இராசேந்திர சோழனைக் காண விரும்பினுன் சீநக்கன். 'கையுறைப்பொருள்களோடு ஒரு கன்னித் தமிழ்ச் செய்யுளும் கொண்டுபோக வேண்டும்" என்பது அவனது விருப்பம். அதனை அறிந்தார் பொய்யாமொழிப் புலவர். அவர் அரிய செய்யுள் ஒன்றெழுதிச் சீநக்கனிடம் கொடுத்தார். அவன் அதனைக் கண்களில் மும்முறை ஒற்றிக்கொண்டான். புலவர் தன் வீட்டிலேயே இருக்க அவரை வேண்டிக்கொண்டான். புலவரும் அதற்கு உடன்பட்டார்.

நெற்களஞ்சியம் என்னும் தஞ்சையைச் சீநக்கன் அடைந்து, இராசேந்திர சோழனைக்கண்டு கையுறைப் பொருள்களோடு கன்னித் தமிழ்ச்செய்யுளையும், அவன் முன் வைத்து வணங்கி நின்ருன். அரசனே மற்றப்பொருள்களை நோக்காமல் செய்யுளை ஆர்வத்துடன் எடுத்து நோக்கினுன், ஏன் ? அது அழியாப் பொருள் அல்லவா ? சோழனும் கலைஞன் அல்லனு ? அச்செய்யுளில், 'ஆரவாரிக்கும் வீரக் கழல் அணிந்த அடியை உடைய போர் வேந்தர் போர்க் களத்தில் மாளப் போர்வாளை உறையிலிருந் தெடுத்த இராசேந்திரனது தஞ்சையின் தெருவில்,

திறையினை முறையாகக்கொண்டு வந்து பகைவரெ லாம் நெருங்கி இருப்பதனுல் அரசர்களால் சிறிதும் செல்ல முடியாது" என்னும் பொருள் பொதிந்த செய்யுள் அரசனது கண்களேயும் கருத்தையும் கவர்ந்தது. அவனது முகத்தில் புத்தம் புதிய இன் பக்களே தோன்றியது. அவன் சீநக்கனைப் பார்த்து, "உனது செய்யுளின் சிறப்புச் சொல்லத் தரமன்று. அது தெய்வக் காவிரி போன்றது" என்ருன்.

"அரசே, மன்னிக்க வேண்டும். அச்செய்யுள் அடியேன் இயற்றியதன்று. பொய்யாமொழிப் புலவர் இயற்றியது."

"நீ பொய்யாமொழியோடு நட்புக்கொண்டு பொய்யாமொழி யானுய். உனது வாய்மையைப் பாராட்டுகிறேன்."

"உருகும் பெரும் பொன்னை அடைந்த சிறு செம்பும் பொன்னுகத்தான் மாறும் ?"

"சிற்றரசூர், பேரரசூர், தென்மாவை, பூந்து ருத்தி, சுத்தமல்லி, கண்டி, குறுகாவூர் முதலான ஏழூர்களையும், மும்முடிச் சோழக் கண்டியூர் நாடாள் வான் என்ற சிறப்புப் பெயரையும் உனக்குத் தந்தேன்,"

"அரசே, வணக்கமும் நன்றியும்."

சீநக்கன், இராசேந்திரனிடம் சென்ற வேறு வேலைகளையும் முடித்துக்கொண்டு தன் அரசூர்க்குத் திரும்பினுன். தன் மாளிகையிலிருந்த பொய்யா மொழிப் புலவரிடம் நிகழ்ந்ததைக் கூறிச் சோழன் கொடுத்த ஏழூர்களையும் பெற்றுக்கொள்ளும்படி

அவரை அவன் வேண்டினான். புலவர் மறுத்துவிட்டார். சீநக்கன் புலவரோடு தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு போய்க் கண்டியூரில் சில நாள் தங்கினான்.

தூக்கம் தந்த துயர்

ஓரிரவு சீநக்கன் வெளியே சென்றான். வெகு நேரமாகியும் அவன் வரவில்லை. புலவரைத் தூக்கம் துன்புறுத்திற்று. அம்மாளிகையின் ஒரு புறத்தில் பஞ்சு மெத்தை பரப்பிய கட்டிலொன்றிருந்தது. புலவர் அதன்மீது படுத்தார். அப்போது குளிர் மிகுதியாக இருந்தது. அதனால் அருகிலிருந்த சீநக்கனின் போர்வையை எடுத்துப் போர்த்துக் கொண்டு புலவர் கண்ணுறங்கினார். தூக்க மயக்கத்தில் சொக்கிக்கிடந்த அவருடைய கண்கள் சீநக்கனது போர்வை அது என்பதை அறிவிக்கவில்லை. ஊரார் தூற்றப் போவது அப்போது புலவருக்கு எப்படித் தெரியும் ?

சிறிது நேரஞ் சென்று சீநக்கனின் மனைவி அந்த இடத்திற்குச் சென்றாள். புலவரைத் தன் கணவரெனக் கருதி, "ஏன் என் கணவர் இங்கு தூங்குகின்றார் ? அவரை எழுப்பக்கூடாது" என்று கட்டிலின் மறு புறத்தில் படுத்து அவளும் உறங்கிவிட்டாள். விதி இவ்வாறு மதியை மயக்கும் ! 'ஊழிற் பெருவலி யாவுள' என்பது மிகமிகப் பொருத்தமாயுள்ளது.

வெளியே சென்ற சீநக்கன் வெகுநேரங் கழித்து வீட்டிற்குச் சென்றான் ; "மனைவி அருகில் படுத்திருப்பவன் எவன் ?" என்று திடுக்கிட்டான் ; உற்று நோக்கினான். பொய்யாமொழிப் புலவர் என்று உறுதியாக எண்ணினான். "இது புலவரின்

தவறு அன்று. என் மனைவியின் தவறும் அன்று. ஆனால் அவளது அறியாமையே. அதனால் குற்ற மில்லை" என்று சீநக்கன் நினைத்து, "சிறிது ஒதுங்கி எனக்கும் சிறிது இடங் கொடுத்துப் படுங்கள். நானும் படுத்துக்கொள்கிறேன்" என்றான். அக்குரல் கேட்டு இருவரும் கண்விழித்துப்பார்த்து, நெருப்பிலே தடுமாறி விழுந்த புழுப்போல் துடித் தனர்; நடுங்கினர். அவர்களுடைய உடல்கள் குப்பென்று வியர்த்தன. அவர்கட்குப் பேச்சு வர வில்லை; பெருமூச்சு வந்தது. பித்துக்கொள்ளி போல் அவனது மனைவி மறுபுறம் ஓடிவிட்டாள்.

புலவர் சீநக்கனைக் கட்டித் தழுவி 'ஐயனே, மன்னிக்க வேண்டும்; மன்னிக்க வேண்டும்; ஆனால் மன்னிக்க முடியாத குற்றம். நான் இன்றிரவு உம்மை வெகுநேரம் எதிர்பார்த்திருந்தேன். நீர் வரவில்லை. தூக்க மயக்கம் என்னைச் சொக்கிற்று. இக்கட்டிலிலே படுத்தேன். குளிராக இருந்ததால் இந்தப் போர்வையை எடுத்துப்போர்த்துக்கொண்டு உறங்கிவிட்டேன். (அதனைப் பார்த்து) ஆ! ஆ! இது உம்முடைய போர்வை; பின் என்ன நிகழ்ந்த தோ அறியேன்" என்று நடுங்கிக் கூறினர். அப் போது அவர் கண்களில் பல முத்துக்கள் உதிர்ந் தன. "புலவரே, நீங்கள் இதற்கு ஏன் கலங்க வேண்டும்? உங்கள் அருமைக் குழந்தையின் அருகில் நீங்கள் படுத்துக்கொண்டிருந்தது எப்படிக் குற்றமாகும்? நீங்கள் வருந்துவதுதான் எனக்குப் பெருந்துன்பம்" என்று சீநக்கன் கூறிக் கண்ணீர் துடைத்தான்.

பித்துக்கொள்ளிபோல் ஓடிய சீநக்கனின் மனைவியால் ஓரிடத்தும் நிற்க முடியவில்லை. எந்த இடத்திற்குப் போகிறோம் என்ற நினைவில்லாமல் அந்த இடத்திற்கே சென்றாள்; தன் ஆருயிர்க் கணவனைக் கண்டாள்; அவனடியில் விழுந்தாள். "என் அறியாமையால் நிகழ்ந்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். உங்கள் போர்வையை எடுத்துப் புலவர் போர்த்துக்கொண்டு தூங்குகிறார் என்பதை அறியேன். நீர்தாம் என்று எண்ணி, 'நிட்டையிலிருப்போரையும் நித்திரையிலிருப்போரையும் எழுப்பக்கூடாது' என்னும் பழமொழியை நினைத்துக் கட்டிலின் மறு பக்கத்தில் படுத்து உறங்கிவிட்டேன்" என்று அலறினாள்.

"மாசற்ற மணியே, மனங்கலங்க வேண்டா. யானைக்கும் அடி சறுக்கும். விண்ணில் தூசு படியாது. தந்தையருகில் மகள் உறங்கியது குற்றமா? (இருவரையும் பார்த்து) வாருங்கள். இந்தப் பாலை மூவரும் ஒருங்கிருந்து பருகுவோம். இந்தப் பாலைப் புலவருக்குக் கொடு" என்று சீநக்கன் தன் மனைவி கையில் பாலைக் கொடுத்தான். அதனை அவள் புலவருக்குக் கொடுத்தாள்; தானும் உண்டான். மூவரும் அவரவர்கள் உறங்கும் இடத்திற்குச் சென்று உறங்கினர். பொழுது விடிந்தது.

ஈமத்தீயில் அன்புக் கொழுந்துகள்

சீநக்கனின் வேலைக்காரி ஒருத்தி மற்றொருத்தியிடம் சென்று, 'ஓர் இரகசியம்! யாரிடத்தும் சொல்லாதே" என்றாள்.

"இல்லை, அதனைச் சொல்."

"அது உனக்கு எப்படித் தெரியும்?"

"உன்னை நம்பி எப்படிச் சொல்வது ?"

"ஒருவரை ஒருவர் நம்பினால்தான் உலக மூண்டு."

" நமது எசமானியும்........"

,'புலவரும் ஒரு கட்டிலில் உறங்கினர். அதனைத் தானே சொல்லப்போகிறாய் ?"

"உனக்குத் தெரியாது என்னடி இருக்கிறது ? சிறிது தள்ளிப் படுங்கள்; நானும் படுத்துக்கொள்ளு றேன் என்று நம் எசமானர் சொன்னார். அப்போது தான் தெரிந்தது."

"எங்கும் சொல்லாதே."

"நீ யாரிடமும் சொல்லாதே. பெரிய இடத்துப் பேச்சு" என்று அவர்கள் சொல்லிக்கொண்டே போய் விட்டார்கள். ஆயினும் அச்செய்தி அவர் கட்குப் பெரும் பாரமாக இருந்தது. ஒருத்தி வேறொருத்தியினிடம் சொல்லி, "யாரிடமும் சொல்லாதே" என்றாள். கேட்டவள் மற்றொருத் தியினிடம் சொல்லி " யாரிடமும் சொல்லாதே " என்றாள். இவ்வாறு பழி எங்கும் பரந்தது. அது பழிக்கு ஆளான மூவர்க்கும் தெரிந்தது. அவர்கள் பறையோசை கேட்ட அசுணமாப்போல் விழுந்த னர்; புரண்டனர். நாளுக்கு நாள் அவர்களது உணர்ச்சி ஒடுங்கிற்று. பழியும் வளர்ந்தது. உலை வாயை மூட முடியும்; ஊர் வாயை மூட யாரால் முடியும் ?

பொய்யாமொழிப் புலவர் ஒருவருக்கும் சொல்லா மல் சீநக்கனது செல்வ மாளிகையை விட்டு வெளி

யேறினர். அவர் வெளியேறியது சீநக்கனுக்கு வெந்த புண்ணில் வேலை எரிந்ததுபோல் இருந்தது. இராமனைப் பிரிந்த பரதன்போல் வருந்தினன் அவன். அவனுக்குத் துன்பம் மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது.

"பொய்யாமொழியை என்று காண்பேன்? செந்தமிழ்ப் பொருளை அவரது திருவாயால் என்று கேட்பேன்? அவரோடு இன்னுரையாடி என்று மகிழ்வேன்? அவருடனிருந்து அறுசுவை உண்டி என்று உண்பேன்?" என்று சீநக்கன் அடிக்கடி சொல்லிக் கொண்டான். அவனது உள்ளத்தைப் பற்றிய நோய் உடலையும் பற்றியது. உடல் படுக்கையில் புரண்டது. அருந்தமிழ் ஔவையின் பிரிவை ஆற்ருத பாரி வள்ளல், அவரது பொருளை அபகரித்து அவரைத் தன்னிடம் வருமாறு செய்தான். கணிகண்ணன், திருமழிசை இவர்களின் பிரிவை ஆற்ருத கரிய மால், அவர்கள் பின் சென்ருர். பண்பட்ட பாவலரின் பிரிவை நண்புற்ற சீநக்கன் எங்ஙனம் பொறுப்பான்?

சீநக்கனைப் பிரிந்த பொய்யாமொழிப் புலவர் பல இடங்கள் சென்று அலைந்து திரிந்தார். தம்மால் மிகத் தூயவர்கட்கு நேர்ந்த வீண்பழியை எண்ணி இரங்கினர்; "அவர்களுள்ளம் எவ்வாறு வருந்துகின்றதோ!" என்று வருந்தினர்.

சீநக்கனது உணர்ச்சி புலவரைக் காணுமையால் சிறிது சிறிதாக நாளுக்கு நாள் குறைந்து கொண்டே சென்றது. அவன் இருந்தாற்போலிருந்து, "பொய்யாமொழி! பொய்யாமொழி!" என்று அலறினன்; "எப்பொழுது உன் இன்முகத்தை எனக்குக் காட்டுவாய்?" என்று வினவினன்; "இதோ வந்துவிட்டார் புலவர்" என்று எழுந்தான்;

கீழே விழுந்தான். இவ்வாறு பல முறை நிகழ்ந்தது. மருத்துவரும் சீநக்கனது நோயைப் போக்க இயன்ற வரை முயன்றனர். முடியவில்லை. அவர்களும் கைசோரவிட்டனர். விதிக்கு மருந்தேது ? வீரமற்ற மன்னனுக்கு நாடேது ?

சீநக்கனது கருவிழிகள் மறைந்து வெள்விழிகள் நிலைத்துவிட்டன ; நாக்கு உள்ளிழுத்துக்கொண்டது ; உதடுகள் கருகின ; உடல் சில்லிட்டது ; மூச்சு நின்றுவிட்டது. அவனது மனைவி அக் கோரக் காட்சியைக் கண்டு கதறினாள் ; கீழே விழுந்தாள் ; அவள் உயிரும் பிரிந்தது.

பொய்யாமொழிப் புலவர் பல இடங்களில் அலைந்து திரிந்து சீநக்கனைக் கண்டு களிக்க மறு முறை கண்டியூரை அடைந்தார். அந்த ஊர் முழுவதும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தது. சீநக்கன் உயிர் துறந்ததையும் அவனது ஆருயிர் மனைவி அவனோடு உயிர்விட்டதையும் கேள்வியுற்றுக் கீழே விழுந்து சிறிது நேரம் உணர்ச்சியற்றுக் கிடந்தார் ; எழுந்து தள்ளாடிக்கொண்டு சீநக்கனது மாளிகையை அடைந்தார். சீநக்கனது வீர உடலும், அவனது கற்பரசியின் தூய உடலும் சுடலைக்குக் கொண்டு போகப்பட்டிருந்தன. "அவற்றையாகிலும் கண்டு மனக்குறையைச் சிறிது போக்கிக் கொள்ளலாம்" என்று புலவர் சுடுகாட்டுக்கு ஓடினார். ஓடியும் பயனில்லை. பொறுமை குடிகொண்டிருந்த பொன்னுடல்கள் ஒன்றாக ஈமத்தில் தீ வைக்கப்பட்டிருந்தன.

புலவர் அதனைக்கண்டு கீழே விழுந்து புரண்டார். கண்ணீர் விட்டுக் கதறினார். கதறி, "அறியாமல் நான் கட்டிலில் படுத்துறங்கின அன்று,

சிறிது ஒதுங்கி எனக்கு இடங்கொடுத்துப் படுங்கள். நானும் படுத்துக் கொள்கிறேன்' என்று கூறினுய், மாசற்ற கற்புள்ள உனது ஆருயிற் மனைவியோடு இன்று விண்ணுலகத்திற்குச் செல்கின்ருய். யானும் வருகின்றேன். எனக்கும் இந்தச் சிதையில் சிறிது இடங்கொடு'' என்ற கருத்துள்ள செய்யுளைக் கூறிக் கண்ணீர் வடித்தார்.

அங்கிருந்தோர் புலவரைத் தீப்புகாமல் பெரிதும் தடுத்தனர். அந்தத் தடுப்புப் பயனற்றுப் போயிற்று. சிதை அகன்று புலவர்க்கு இடங்கொடுத்தது. அவர் அதில் கிடந்து மேலுலகஞ் சென்ருர். பெரும் பழி தூற்றிய பாவியர்முன் அவர்களிருப்பின் அவர்கட்குப் பெருந்துன்பமென்று அங்கியங்கடவுள் கருதி அவர்களைப் பேரின்ப உலகிற்கு ஏந்திச் சென்ருன். அதனைக் கண்டோர் கண்ணீர் வடித்தனர் ; கதறினர். என்னே அன்பினுல் விளைந்த செயல் !

அவர்கள் மூவரையும் அன்பின் திருவுருவங்கள் என்று சொல்லலாமா ? அன்றி அன்பு பெற்ற அருட் குழந்தைகள் என்று கூறலாமா ? பொய்யாமொழிப் புலவரைப் பிரிந்ததால் நோயுற்று உயிர் துறந்த செம்மை சான்ற சீநக்கனைப் போற்றுவதா ? அன்றி அவனது மனைவியைப் போற்றுவதா? அவர்கள் தம்மிடத்துக் கொண்ட பேரன்பிற்காக உடன்கட்டை ஏறித் தமிழ் மணக்கும் உயிர் துறந்த அருந்தமிழ் அண்ணலான பொய்யாமொழிப் புலவரைப் போற்றுவதா ? மூன்று குணக்குன்றுகளையும் போற்றுவது தான் மூதறிஞர் கடமையாகும். அவர்கள் உயிர் கொடுத்துப் புகழ் வாங்கினர். புகழ் என்ருல் புளியங்காயா ?

# 5. கவியரசரான புவியரசர்

## மன்னரும் கலைஞர்

அருஞ்சமர்க் கலையிலும் அரசியல் நீதியிலும் நம் பாரத நாட்டு மன்னர் சிறப்புற்றிருந்தனர். அவ்விரு கலையும் எல்லா மன்னர்க்கும் பொது. வேறு பல கலைகளிலும் பல மன்னர் சிறப்புற்றிருந்தனர். 'கலை அறுபத்திநான்கு' என்று முன்னோர் கூறினர். இராச சேகர பாண்டியன் அறுபத்துமூன்று கலைகளில் வல்லவனாக இருந்தான். பின் அறுபத்து நான்காவ தாக நடனக் கலையைக் கற்றான். நளனும் வீமனும் பாகசாத்திரத்தில் பண்பட்டிருந்தனர். இசைக்கலை யிலும் யாழ்க்கலையிலும் சீவகன் தேர்ந்திருந்தான். அருச்சுனன் இசைக்கலையிலும் நடனக் கலையிலும் பேரறிவு பெற்றிருந்தான். சகுனியும் புட்கரனும் சூதுக் கலையில் மிக வன்மை பெற்றிருந்தனர்.

பல அரசர்கள் புவிராயராக மட்டும் அல்லாமல் கவியரசராகவும் விளங்கினர். சில மன்னர்கள் தனித் தனிச் செய்யுட்களை இயற்றி மகிழ்ந்தனர். சில மன்னர்கள் அரும்பெரும் நூல்களை இயற்றி அக மகிழ்ந்தனர். பூவேந்தராகவும் பாவேந்தராகவும் விளங்கினார் பாண்டியனார் ஒருவர். அவரது இயற் பெயர் மறைந்து விட்டது. குடிப்பெயராலேயே அவரைக் குறித்தனர் பெரியோர். அவர் கி. பி. பதினாறும் நூற்றாண்டில் விளங்கியவர். கலைஞரைக் காப்பதும், கலைகள் கற்பதும், கவிகள் இயற்று வதுமே அவரது பொழுது போக்கு. அவரது கலையின் ஆர்வமே இக்கட்டுரையின் வடிவமாகும்.

## மரணக் கூத்து

முற்காலத்தில் கூத்தரென்று ஒரு குலத்தினர் இருந்தனர். இவர்கள் பல வகைப்படுவர். இவர்களது தொழில் இன்பக் கூத்தாடுவது. அக்கூத்தின் வகைகளைச் சிலப்பதிகாரம் சித்தரித்துக் காட்டுகின்றது. கழைக்கூத்து என்பதும் அவற்றுள் ஒன்று. அக்கழைக்கூத்தின் அருமை பெருமைகளை அயன்றைச் சடையன் இனிதறிந்தவன். அவன் கூத்தரைப் பாதுகாத்த வள்ளல். அவன் கழைக் கூத்து மாதொருத்தியைச் சிறப்பாக ஆதரித்தான்.

கழைக்கூத்தர் இக்காலத்திலும் கிராமங்களிலும் காணப்படுகின்றனர். அவர்களது கழைக் கூத்து முற்காலம்போல் இக்காலத்து அத்துணைச் சிறப்பாக இல்லை. ஆதரிப்பார் இருந்தால்தானே அது சிறப்படையும்! கழைக்கூத்தர் நீண்ட மூங்கிலை நிலத்தில் நிறுத்தி நான்கு புறத்திலும் நான்கு கயிற்றால் அதனை இழுத்துக் கட்டிவிடுகின்றனர். அம் மூங்கிலின் இடையில் ஒரு சிறு மூங்கில் குறுக்காகக் கட்டப்பட்டிருக்கும். இக்காலத்துச் 'சர்க்கஸி'ல் ஆடுவதுபோல் அதன்மீது ஆடுகின்றனர். இது ஒரு வகை. மற்றொரு வகை : பல பானைகளைத் தலையில் அடுக்கி நிறுத்தப்பட்ட மூங்கிலின் நுனியை இடுப்பிலுள்ள கச்சையில் பொருத்தி வளைந்து வளைந்து ஆடுகின்றனர். பானை ஒன்றுகூடக் கீழே விழுகிறதில்லை, இது இக்காலக் கழைக்கூத்து. முற்காலக் கழைக்கூத்தைக் கீழ் இரண்டாம் பத்தியிற் காண்க.

அயன்றைச் சடையஞல் ஆதரிக்கப்பட்ட கழைக்கூத்து மாது பாண்டியனிடம் சென்று தன் கலைத்திறனைக் காட்ட விரும்பினுள். புலவர் பாண்டியனுரும் உடன்பட்டுக் காண ஏற்பாடு செய்தார். அதனைக் கண்டு களிக்கப் பலர் ஒன்று கூடினர். பாண்டியனுரும் அவரது மனைவியாரும் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்தனர். விண்ணில் மின்னற்கொடி ஆடுவதுபோல் கழைக்கூத்து மாது கழையின்மேல் பலவகையாக ஆடினுள். அவையோர் கண்டு களித்தனர். அவள் விச்சுளிப்பாய்ச்சல் என்னும் ஒப்பற்ற கூத்தொன்று ஆடினுள். அவையோர் கைதட்டி ஆரவாரித்தனர். ஆனுல் பாண்டியனுர் அவ்விச்சுளிப் பாய்ச்சலைக் காணவில்லை. அப்போது அவர் தம் மனைவியோடு அன்புகலந்து பேசிக்கொண்டிருந்தார். விச்சுளிப் பாய்ச்சலைக் காண முடியாமையால் அவரது உள்ளம் மிகவும் வருந்திற்று. மறுமுறை விச்சுளிப் பாய்ச்சல் பாயுமாறு கழைக்கூத்து மாதை அவர் கேட்டுக்கொண்டார். கலை இன்பத்தால் அவள் மரணமடைவதை மறந்தார் போலும் அம் மன்னர். கலை இன்பத்திற்கு இணையான இன்பமேது ?

கழைக்கூத்தாடுவோர் மூங்கில் மேலேறிப் பல வித்தைகளைச் செய்வர். இருந்தாற்போலிருந்து தம் மூக்கிலுள்ள மூக்குத்தியைக் கழற்றி மெதுவாக நழுவ விடுவர். அது சிறிது தொலைவு சென்றவுடன் விச்சுளிப் பறவைப்போல் மூங்கில் மீதிருந்து பாய்ந்து, கையால் தொடாமல் பாய்ச்சலிலேயே அம் மூக்குத்தியைத் தம் மூக்கில் அணிந்துகொள்வர். பின் கீழே வராமல் அப்படியே மேலே பாய்ந்து

மூங்கில் மேல் ஏறிக்கொள்வர். அவ்வாறு செய்வது தான் விச்சுளிப் பாய்ச்சல்.

ஒரு முறை விச்சுளிப் பாய்ச்சல் பாய்வோர் மறு முறை பாயவேண்டின் ஆறு திங்கள் மூச்சடக்கும் பயிற்சி செய்யவேண்டும். இல்லையேல் அவர்கள் மரணமடைவது உறுதி.

கழைக்கூத்து மாது தனக்கு வரும் மரணத்தைக் குறித்து வருந்தினரோ? இல்லை. அதனால் வரும் புகழை நினைத்து மகிழ்ந்தாள். தன்னை ஆதரித்த அயன்றைச் சடையனது கனிந்த அன்பு அவளது உள்ளத்தில் பொங்கிற்று. அவள் அவனுக்கு ஒரு செய்தி அனுப்ப விரும்பினாள். அவள் கழைக் கூத்துமாது மட்டும் அல்லள்; கவிகட்டும் புலமை யுடையவளாகவும் இருந்தாள். அவளெதிரில் பல பறவைகள் மலர்மாலை போலப் பறந்து சென்றன. அவள் அவற்றைப் பார்த்து, அயன்றச் சடையனைக் குறித்து, "பெருமலை போன்று இரு தோள் உடைய பாண்டியன், இன் சொல்லுடைய தன் அன்பான மனைவியைப் பார்த்தான். என் விச்சுளிப் பாய்ச்சலை அவன் தன் கண்களால் பருகவில்லை. பையப் பையச் செல்கின்ற பறவைக் கூட்டங்களே, நீங்கள் புழற்கோட்டம் என்னும் ஊர்ப்பதியை அடைவீரா யின், 'கழைக்கூத்து மாது சாகின்றனள்' என்று அயன்றைச் சடையனுக்குச் சாற்றுங்கள்" என்னும் பொருள் பொதிந்த செய்யுளைக் கூறினாள். கூறி, அவள் விச்சுளிப் பாய்ச்சல் பாய்ந்தாள். அவளது கலைபழுத்த உயிர் கண்ணுக்குத் தெரியாமல் பறந்து போயிற்று. அந்தோ!

அந்தோ! அவள் உயிர் துறந்தது கலைமீது கொண்ட அன்போ! அன்றிப் பாண்டியனாரிடம் கொண்ட மதிப்போ! அன்றிப் புகழுக்காகச் செய்த உயிர்த் தியாகமோ!

அதனைக் கண்ட பாண்டியனாரது உடல் நடுங்கிற்று. உணர்ச்சி ஒடுங்கிற்று. நீரைப் பெருக்காத அவையோரின் கண்களே இல்லை. பாண்டியனார் மிக வருந்தி, "அந்தோ! நான் கலைக்கோவிலை அழித்த பாவியானேன்! இப்பாவம் தீர என்ன செய்வது!" என்று மிகவும் வருந்தினார். வருந்தி அவளது கலைக்கோயிலாம் நல்லுடலை அடக்கஞ் செய்து அங்கு ஒரு கலைப் பள்ளிக்கூடம் நிறுவினார்.

அவர் அப்பள்ளியிற் கழைக்கூத்தும் மற்றக் கலைக்கூத்தும் பிறர் கற்க ஏற்பாடு செய்தார். கற்போருக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் கொடுக்கப்பட்டன. பலர் பல கலையில் வல்லவராயினர். எனினும், பாண்டியனார் துயர் முற்றும் போகவில்லை. அதனால் அப் பாவந் தீரக் காளியின் முதுகில் குருதிச் சோறிட்டு அவர் வணங்கினார். அவ்வாறு செய்தல் அக்கால வழக்கம் போலும்.

கழைக் கூத்து மாதைக் கலைமாதாகச் செய்தவன் அயன்றைச் சடையன். அதனால் அவன்மீது பாண்டியனார்க்குப் பேரன்பு பொங்கிற்று. பொங்கி அது ஒரு செய்யுளாக வழிந்தோடிற்று.

" இரவலாளரே, நீங்கள் அயன்றைச் சடையனிடம் பெருஞ் செல்வம் பெறுங்கள். பாம்பினிடத்துள்ள மாணிக்கத்தைக் கேட்பினும் அவன்

கொடுப்பான். அலை கடலமிழ்து கேட்பினும் அவன் தருவான். சிங்கத்தின் பாலைக் கேட்பினும் அன் போடு ஈவான். இல்லாத பொருளைக் கேட்காதீர்கள். கேட்டால் இல்லை என்று சொல்வதற்கு அஞ்சி அவன் தன் இன்னுயிர் கொடுப்பான். அதனால் இரவலரே, நீங்கள் அவனிடத்துள்ள பொருளை அறிந்து கேளுங்கள். அதுவே உங்களுக்கு அற மாகும்" என்பது இச்செய்யுளின் பொருள்.

பரந்த நோக்கம்

செஞ்சியின் தலைவன்கொற்றந்தை. அவன்மீது புகழேந்தி யாண்டான் என்னும் புலவர் செஞ்சிக் கலம்பகம் என்னும் செந்தேன் துளிக்கும் நூலொன் றியற்றினர். அதில், "வையம் பெறினும் பொய்யு ரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே" என்று கூறப்பட்டுள்ளது. அதனைக் கண்டு புலவர் பாண் டியனர் புகழ்ந்தார். அத்தகைய தொண்டைநாட் டாரைக் காணவேண்டுமென்று அவர் ஆவலோடு இருந்தார்.

தொண்டை நாட்டுச் சான்றோர் பலர் பாண்டி யனரைக் காணச் சென்றனர். மதுரைக் கோட்டை யிற் பறந்த மீனக்கொடி அவர்களை வரவேற்றது. சங்கப் புலவர்கள் தமிழ் வளர்த்த கடைச் சங்கம் இருந்த இடத்தை அவர்கள் வணங்கினர்; பின் னர் அரண்மனையை அடைந்தனர். வில்லேந்திய வீரர் அரசவையைக் காத்து நின்றனர். அவர் களிடம் தொண்டை நாட்டார் தம் வருகையைக் கூறினர். வாயில் காப்போர் பாண்டியனரை வணங்கி, "செழிய, போற்றி, தென்னவா போற்றி, உங்களைக் காணத் தொண்டை நாட்டுச் சான்றோர்

பலர் வந்துள்ளனர் " என்றனர். பாண்டியனார் தலை யசைத்து விடை கொடுத்தார்.

வாயில் காப்போர் சென்று தொண்டை நாட்டாரை அழைத்துக்கொண்டு போய் அரசரைக் காட்டினர். அவர்கள் அரசரைக் கண்டு, " செந் தமிழ் வளர்த்த தென்னவர் குலத் தென்றலே, வணக்கம் " என்று வணங்கி நின்றனர். பாண்டிய னார் அவர்களுக்கு இருக்கையளித்து,

" வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரென்
றையன் களந்தைப் புகழேந்தி
யாண்டா னுரைத்த அவரோ நீர்? "

என்று அன்பு பொங்க வினவினார். அதனால் தொண்டை நாட்டார் உளம் பூரித்து,

" எய்யும் சிலைவேள் வடிவோனே
இராசா திபனே இரப்போர்கள்
ஐயந் தவிர்த்த பெருமானே
ஆவோம் அடியோம் அடியோமே "

என்றனர். பாண்டியனாரும் மகிழ்ந்தார். அவர் உடல் பூரித்தது. அவர் பாண்டிய மன்னராக இருந் தும் தொண்டை நாட்டாரிடம் கொண்ட மதிப்பு மகிழ்ச்சிக்குரியது. விண்ணில் வெகு தொலைவி லுள்ள நிலவு, மண்ணிலுள்ள எல்லாப் பொருள் களுக்கும் இன்னொளியைத் தருகின்றதை எல்லோ ரும் அறிவர்.

### பாடுந்தொழில் யாருக்கு?

அறம் வளர்த்த முதலியார் என்பவர் ஒரு வள் ளல்; வேளாண்குடித் தலைவர்; பதினைந்தாம் நூற்

றுண்டில் சந்திரகிரியை ஆட்சி புரிந்த அரசர்க்கு அமைச்சர்; உயர்ந்த கொள்கையும் பரந்த நோக்கமும் உள்ளவர். அவரது சிறப்பியல்புகளைக் கேள்வியுற்றார் புலவர் பாண்டியனார். அச்சிறப்பியல் புகளைப் பாட்டோவியத்தில் அவர் காட்டத் தொடங்கிக் கலம்பகம் என்னும் ஒரு சிறு நூலைப் பாடினார்; பாடி மகிழ்ந்தார்.

அறம் வளர்த்த முதலியாரிடம் இருந்த அருந் தமிழ்ப் புலவரொருவர். "கவியரசர்க்குரியது கலம் பகம் பாடுந் தொழில். அதனைப் புவியரசர் பாடுவது பொருந்துமோ?" என்றார்.

அதனைக்கேட்ட பாண்டியனார் புன்னகை பூத்து. "ஏன் பொருந்தாது? பாடி மகிழும் இன் பத்திற்குப் பாராளும் இன்பம் ஒப்பாகாது. நான் என்னைப் பூவேந்தன் என்று சொல்லிக் கொள்ள விரும்பவில்லை; பாவேந்தன் என்று சொல்லவே விரும்புகின்றேன். திங்களைச் செஞ்சடையிலணிந்த சிவபெருமான் கங்கையையும் அணிந்துகொண் டான். அதுபோல் சந்திரகுலத்தவனான நான் கங்கை குலத்தவரான அறம் வளர்த்த முதலியாரைப் பாடத் தகும்" என்று சமத்காரமாக விடை கூறினார். புலவர் மிக மகிழ்ந்து பாண்டியனாரைப் போற்றினார்.

போரைத் தடுத்த செய்யுள்

வட இந்தியாவில் முகலாயர் ஆட்சி, கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் செழித்து, கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலும் வளரத் தொடங்கிற்று. அரிஅரர், புக்கர் என்னும் வீரச் சகோதரர்களால் துங்கபத்திரை நதிக்கரையில்

கி. பி. 1336இல் விசயநகர இராச்சியம் ஸ்தாபிக்கப் பட்டது. முகலாயர் ஆட்சி தென்னிந்தியாவில் வேரூன்ருமல் தடுப்பதே அதன் நோக்கம்.

விசயநகரத்து அரச மரபில் விட்டல அரசன் என்பான் ஒருவன் இருந்தான். அவன் கல்விக் கடல்; வீரத்தின் விளக்கு. அவன் ஒரு முறை தென்னுட்டின்மீது படையெடுத்தான். அக்காலம் மூவேந்தரது ஆட்சி விளக்கு அணைந்து விட்ட தென்று கூறலாம். சூரியனுக்கெதிரில் தன் ஒளி யைக் காட்டுகின்ற மின்மினிபோல் அம்மரபில் வந்தோர் சிறு சிறு நிலப்பகுதியை ஆண்டனர். விசய நகரத்து விட்டல அரசன் திருவாங்கூரில் வெற்றிக்கொடி நாட்டினன். அவனது வீரப் படைகள் ஐதராபாத்தின் பெரும்பகுதியை வளைத்து விட்டன. மேலும் விட்டல அரசன் கன்னியா குமரியைக் கைப்பற்ற விரைந்து சென்றுன்.

அச்செய்தி பாண்டியனுரின் உள்ளத்தை எரித் தது. ஒருவன் போரில் இறந்தால் அவனைச் சார்ந் தார் பலர் நீங்காத் துயர்க்கு இரையாகின்றனர். ஒரு போரில் பல்லாயிரம் வீரர்கள் இறக்கின்றனர். அதனுல் கணக்கற்றேர் அடையும் துன்பத்திற்கு அளவுண்டோ! 'கொடிது கொடிது பகை கொடிது; அதனினும் கொடிது அதனுல் விளையும் போர். அந்தப் போரைத் தடுப்பது எப்படி?' என்று அவ ரது சிந்தனை சென்றது. அந்தச் சிந்தனை செந் தமிழ்ச் செய்யுள் ஒன்றினைத் தந்தது.

அந்தச் செய்யுளை அவர் ஒரு சான்றேரிடம் கொடுத்து விட்டல அரசனிடம் அனுப்பினர். அச் சான்றேர் விட்டல அரசனைப் பாசறையிற் கண்டு

அச்செய்யுளைக் கொடுத்தார். அதில், "விட்டல ஐயா, தொட்டிலில் இருக்கத் தொடங்கிய நாள் முதலாக எட்டுத் திக்குகளும் நின் குடையின், கீழாயின. தன் குமரி (தன் மனைவி) யன்றித் தனிக் குமரி (வேருெருவர் மனைவி) கொள்ளாத நீ தென் குமரிக்குச் செல்வது என்? சொல்" என்று எழுதப் பட்டிருந்தது.

அதனை விட்டல அரசன் ஒரு முறையன்று; பல முறை ஆழ்ந்து படித்தான். படிக்கப் படிக்க அவனது உள்ளத்தில் அருள் சுரந்தது. அதனுல் அவனுக்குப் போர்வேட்கை ஒழிந்தது. வில்லுக்கு இல்லாத வன்மை சொல்லுக்கு உண்டன்றே!

# 6. தெய்வப்பரிசு பெற்றவர்

## புலமை பெறுதல்

தொண்டை நாடு பல்லவ மன்னர் காலத்தில் செல்வமும் வளமும் செழித்தோங்கிற்று. காஞ்சீ புரம் அம்மன்னர்க்குத் தலைநகர்; மகாபலிபுரம் என்னும் மாமல்லபுரம் அக்காலத்திய துறை முகப்பட்டினம். இன்னும் அக்காலத்திய கலங்கரை விளக்கம் அந்த உண்மையைக் கூறுகின்றது. மீனினங்கள் எதிர்கொண்டழைக்கப் பாலாறு பாய்ந்து அந்நாட்டின் திருமேனியைச் செழிக்கச் செய்கிறது. கடைச்சங்க காலத்திலேயே தொண்டைநாடு சிறப்புற்றிருந்தது. 'தொண்டைமானிடம் ஔவை அம்மையார் தூது சென்றார்' என்று புறநானூறு புகல்கின்றது. 'தொண்டைநாட்டின் பெருமையைத் தொண்டைமண்டல சதகம் சொல்லிக்கொண்டே இருக்கிறது. அங்குப் பாடல் பெற்ற சைவ வைணவத்தலங்கள் பல உள்ளன. அன்பு பழுத்த அடியார்களும் அருந்தமிழ் கனிந்த புலவர்களும் தோன்றிய நாடு அந்நாடு.

அத் தொண்டை நாட்டில், பொன்விளைந்த களத்தூர் என்று ஓர் ஊர் உண்டு. அது செங்கல் பட்டுக்குத் தெற்கே ஏறக்குறையப் பதினைந்து கல் தொலைவில் உள்ளது. 'பொன்விளைந்த காரணத்தால் அது அப்பெயர் பெற்றது. விளைந்த பொற்கதிர்கள் இன்றும் அவ்வூர்க்கோயிலில் உள்ளன' என்று கூறு

கின்றனர். அவ்வூர் நிலத்திலிருந்து பொன் தோண்டி எடுக்கப்பட்டிருக்கலாம். இக்காலத்தில் பொன் எடுக்கும் கோலார் என்னும் இடத்தினைத் 'தங்க வயல்' என்று கூறுகின்றோம் அன்றோ? நிலவளத்தின் சிறப்பினாலும் பொன்விளைந்த களத்தூர் என்று கூறி இருக்கலாம். 'பொன் இட்டால் பொன்விளையும்' என்று வளமான நிலத்தினை இன்றும் கூறுகின்றோம். ஏதோ ஒரு காரணத்தால் அப்பெயர் பொருந்தும் எனத் தோன்றுகிறது.

மேலும் பொன் விளைந்த களத்தூருக்கு மற்றொரு பெருமையும் உண்டு. நளவெண்பா என்னும் கட்டிக் கரும்பினைத் தந்த புகழேந்திப் புலவர் பிறந்த ஊர் அவ்வூர். அவ்வூரில் அப்புலவருக்கு வெகு காலத்திற்குப் பிறகு படிக்காசுப் புலவர் தோன்றினார். அவரது காலம் கி. பி. 1686 - 1723. அத்தமிழ்க் குழந்தையின் மழலை கேட்டுத் தாய் தந்தையர் மகிழ்ந்தனர். பெற்றோர் அக்குழந்தைக்கு என்ன பெயர் இட்டனரோ தெரியவில்லை. படிக்காசுப் புலவர், படிக்காசுத் தம்பிரான் என்றே உலகோர் கூறினர். இயற் பெயர் நமக்கு விளங்காத எத்தனையோ சான்றோர் இந்நாட்டில் இருந்தனர். அவர்களுள் ஒருவர் படிக்காசுப் புலவர்.

மனம் விரிந்து, அறிவு வளர, ஒழுக்கம் உண்டாகப் படிக்காசுப் புலவர் கல்வி கற்றார். மேலும், இலக்கியம், இலக்கணம் கற்கப் புலவர் மனம் அவாவி நின்றது. அதற்கேற்ற ஆசிரியரை அவர் தேடினார்.

அக் காலத்தில் திருவாரூரில் வைத்தியநாத நாவலர் தமிழ்ப் பூஞ்சோலையை அலங்கரித்துக் கொண்டு இருந்தார். அவர் தொல்காப்பியம், நன்

னூல் முதலிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றவர்; திருக்குறள், நாலடியார் முதலிய நீதி நூல்களை ஓதி உணர்ந்தவர்; அக நானூறு, கலித்தொகை முதலிய அகப்பொருள் நூல்களை ஆழ்ந்து படித்தவர்; புறநானூறு, பதிற்றுப் பத்து முதலிய புறப்பொருள் நூல்களைக் கற்றவர்; சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களைச் செம்மனத்தோடு விளக்கம் பயின்றவர்; இலக்கணவிளக்கம் என்னும் சிறந்த நூலை இயற்றியவர். வைத்திய நாத நாவலர் பெருமை வெள்ளம் படிக்காசுப் புலவர் காதில் பாய்ந்தது. அவரே தமக்கு நல்லாசிரியர் என்று புலவர் கருதினர்.

அவர் ஒரு நாள் பெற்றோரிடம் விடை பெற்றுத் திருவாரூரை நோக்கி நடந்தார். அக்காலத்தில் விண்ணில் பறக்கும் விமானம் இல்லை; தண்டவாளத்தில் ஓடும் புகைவண்டி இல்லை; சாலையில் ஓடும் மோட்டார் வண்டியில்லை; மாட்டு வண்டி மட்டும் இருந்தது. அதுவும் புலவருக்கு இல்லை. பொன் விளைந்த களத்தூரிலிருந்து திருவாரூருக்கு நடந்து செல்வது என்றால் எளிதன்று. கருமத்தில் கருத்துள்ளவருக்கு மெய்வருத்தம் தோன்றாது; கண்ணுறக்கம் வாராது.

புலவர், பாய்ந்தோடும் ஆறுகளையும் நிமிர்ந்துயர்ந்த மலைகளையும் அடர்ந்திருண்ட காடுகளையும் குளிர்ந்த அழகிய சோலைகளையும் கண்டு களித்துக் கொண்டே பலநாள் நடந்து திருவாரூரை நெருங்கினர். தியாகேசப் பெருமான் திருக்கோயில் கோபுரம் முதலில் புலவருக்குக் காட்சியளித்தது. புலவர் மெய்சிலிர்த்து, இருகை கூப்பி, அதனை வணங்கி

ஞர். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர் நேரே திருக்கோயிலை அடைந்தார்; மும்முறை அதனை வலம் வந்து உடலுருகி, உள்ளம் நைந்து, தம்மை மறந்து இறைவனை வணங்கினார். கற்றதன் பயன் இறைவனது நற்றாள் தொழுவதே.

படிக்காசுப் புலவர் வைத்தியநாதநாவலரின் தமிழ் வளர் இல்லத்தினை அடைந்தார். அப்போது நாவலரவர்கள் பலர்க்குச்செந்தமிழ்த்தேனை ஊற்றிக் கொண்டிருந்தார். அவர்களோடு இருந்த படிக்காசுப் புலவரும் இன்பம் துய்த்தார்; நாவலர்களின் நாவன்மையைக் கண்டு வியந்தார்; 'ஏற்ற ஆசிரியர் கிடைத்தார்' என்று எண்ணி மகிழ்ந்தார். நாவலரவர்கள் பாடத்தை முடித்தார். பாடம் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சென்றனர்.

படிக்காசுப் புலவர் நாவலரவர்களின் திருவடியில் விழுந்தெழுந்து, "நாவல, பெருந்தகையே, அடியேன் தங்களிடத்தில் கல்விச்செல்வம் பெறப்பொன் விளைந்த களத்தூரிலிருந்து வந்துள்ளேன். உங்கள் மாணவர்களுள் ஒருவனாக என்னையும் ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்" என்று நாக்குத் தழுதழுத்துக் கூறினார். நாவலர் சற்று யோசித்துப் புலவரை நோக்கிச் சிறிது நேரம் சிந்தனையிலிருந்தார்.

பின்னர் அவர் புலவரைப் பார்த்து, "தனக்குத் தெரிந்த கல்வியைப் பிறர்க்குக் கற்றுக் கொடுக்காதவன் குருடனாய்ப் போவான். அப்படிப்பட்ட குற்றத்திற்கு நான் ஆளாகாமல் என்னைத் தமிழ்த் தொண்டில் ஈடுபடச் சொன்னதற்கு நன்றி. இச்

காலத்தில் தமிழ் படிப்போர் தொகை நிறைமதிபோல் குறைகிறதே என்று நான் அடிக்கடி எண்ணி வருந்துவதுண்டு. அவ்வருத்தத்தில் ஒரு சிறிது போக்கினீர். உமக்குத் தமிழ் சொல்லிக் கொடுப்பதே எனக்குப் பேரின்பமாகும். கைம்மாறு கருதாமல் சொல்லிக்கொடுப்போர் இருந்தால் எருவில் கீரைபோல் தமிழ் வளரும்" என்று நாவலர் முகமலர்ந்து கூறினார். கூறிப் படிக்காசுப் புலவருக்கு உண்டி, உறையுள் முதலியன கொடுத்துக் கல்விப் பொருளையும் கொடுத்தார். 'அன்புடையார் தம் என்பும் பிறர்க்குக் கொடுப்பார்.'

கோடையால் வாடிய ஒருவன் குளிர் நீரைத் தேடுங்கால் அது கிடைத்தால் அவன் அதனைப் பருகுவது போல் படிக்காசுப் புலவர் விரும்பிக்கற்று, அறிவு பெற்று மகிழ்ந்தார். குளிருக்காகத் தீக்காய்பவன் அத் தீயைவிட்டு நீங்காமலும் இருந்து குளிரைப் போக்கிக் கொள்வதுபோல், படிக்காசுப் புலவரும் ஆசிரியரிடம் அச்சங்கொண்டு அவரைவிட்டு நீங்காமலும் அருகில் நெருங்காமலும் இருந்து தம் அறியாமையைப் போக்கிக்கொண்டார்.

பல ஆண்டுகட்குப் பின் ஒரு நாள் பெருநாவலர், புலவரைப் பார்த்து, "நீர் தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றீர். உமது ஊருக்குச் செல்ல விருப்பமாயின் செல்லலாம்" என்று கூறினார்.

புலவருக்கு மேலும் கற்க விருப்பம். ஆயினும் தமக்காகத் தம் ஆசிரியருக்குப் பொருள் செலவாவதைக் குறித்துத் தம் ஊருக்குப் போகத் துணிந்தார். ஆசிரியருடைய அடிகளை முடிமேற்கொண்டு

அவரிடம் விடை பெற்று, நன்றிகூறிப் புலவர் தம் மூர்க்குப் புறப்பட்டார்.

படிக்காசுப் புலவர் பலநாள் நடந்து சென்ற தால் பலவகை மக்களின் பழக்க வழக்கங்களைக் காண நேர்ந்தது. ஊர்களின் இயல்பும் இயற்கை யின் அழகும் நீரின் தன்மையும் இயல்பும் மொழி யின் வேறுபாடும் அவர் அறிந்தார். அவற்றல் உலக அனுபவம் அடைந்தார். அவர் பல நாள் நடந்தபோதும் அவருக்கு வழித்துயர் தோன்ற வில்லை. ஏன்? திருந்திய செந்தமிழும் நிறைந்த இயற்கை அழகும் அவருக்கு இன்பம் சுரந்து கொண்டே இருந்தன. அந்த இன்பத்தில் நீந்திக் கொண்டே தாம் பிறந்த பொன்னுடாகிய பொன் விளைந்த களத்தூரை அடைந்தார் புலவர். செழித் துக் கிளைத்த நெற்பயிர்களும் ஓங்கி உயர்ந்த மாமரங் களும் தலைவணங்கி அவரை வரவேற்றன.

**காளத்தியின் பரிசு**

ஒத்த குலமும் உயர்ந்த குணமும் உள்ள ஒரு மங்கையைப் புலவருக்கு மணஞ்செய்து வைத்தனர் பெரியோர். "வாழ்விலும் தாழ்விலும், இன்பத்தி லும், எப்பிறவியிலும் இனிப் பிரியமாட்டோம்" என்று கடவுளரை முன்னிலையாக்கி மணவேள்வி முன்னிலும் சான்ருேர் முன்னிலும் இருவரும் சத்தியம் செய்துகொண்டனர். புலவர், மங்கைக்கு மங்கல நாண் சூட்டினர். மணமக்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் மாலை சூட்டிக்கொண்டனர். பெரியோர் வாழ்த்தினர்; வாத்தியங்கள் முழங்கின.

தம்பதிகள், செந்தமிழும் சுவையும்போல் இன்புற்று, நகமும் சதையும்போல் ஒற்றுமையுற்று, சிறுத்தொண்டரும் அவர் மனைவியும்போல் அறம் வளர்த்து வாழ்ந்தனர். செங்கதிர்ச் செல்வனால் குளிர் நீர்ப் பொய்கையில் செந்தாமரை மலர்வதுபோல் படிக்காசுப்புலவருக்கு அவரது மனைவியார் மணி வயிற்றில் செந்தமிழ்க் குழந்தை ஒன்று பிறந்தது. பெற்றோர் மகிழ்ந்தனர். 'மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம், அவர் சொற்கேட்டல் செவிக்கின்பம்.' முன்னோர் தேடிய பொருள் சிறிது புலவருக்கு இருந்தது. அது ஏழைகளுக்கும் இரந்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. தமக்கென வாழாத் தன்மை புலவர்களுக்குப் பொருந்திய பரம்பரைக் குணம். அதனாலன்றோ பெரும் பொருள் பரிசு பெற்ற புலவர்களும் சில நாளில் வறுமைக் கடலில் தத்தளித்தனர்? அந்த வறுமை வாளுக்குப் படிக்காசுப் புலவர் மட்டும் விலக்காவாரா?

புலவருக்கு வறுமை மிகுதியால் ஒன்றும் தோன்றவில்லை. அவரது குழந்தையோ பச்சிளங் குழந்தை. அதற்குக் குடிக்கப் பாலில்லை. அதன் தாய்க்கோ உண்ண உணவில்லை. குழந்தைக்கு எப்படிப் பால் கிடைக்கும்? குழந்தையோ, 'குவா குவா என்று நெருப்பிற் பட்ட புழுவாய்த் துடித்தது. அந்தத் துன்பநிலையைத் தாயின் மலர்க்கண்கள் பார்க்க, அதனால் அவளது இளகிய உள்ளம் துடிக்க, கண்கள் நீரை உதிர்க்க, அவற்றையெல்லாம் புலவர் கண்டு மின்சார உலைக்களத்து இரும்புபோல் உருகினர்.

அதனை அவரது மனைவி கண்டு, "கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு ஏன் நெய்க்கு

வருந்த வேண்டும்? புலவர்களைப் பாதுகாக்கஅருள் பழுத்த அரசர்களையும் அருங்குணம் வாய்ந்த பெருஞ் செல்வர்களையும் ஆண்டவன் படைத்துள் ளான். அவர்களைப் பாதுகாக்க அறத்தைப் படைத் துள்ளான். நீங்கள் அவர்களிடம் சென்று பாடிப் பரிசு பெற்று வறுமை நோய் களையலாம்'' என்று கண்ணீர் ஒழுகக் கூறினுள்.

''இப்போது நம்மையாளும் அரசரோ தமிழ்ப் பெருமை அறியார்; அயல் நாட்டரசர். மேலும் யாரிடத்தும் பரிசு பெற என் உள்ளம் துணிய வில்லை. மூவேந்தர் சென்றபின் பாவேந்தர் படாத பாடு படுகின்றனர்'' என்ருர் படிக்காசுப் புலவர்.

''புலவர்கள் பரிசு பெறுவது குற்றம் அன்று. கார்மேகம் பொழியும் கனமழை, உயிர்களைக் காத்து இன்பம் தந்து ஒழுக்கத்தை வளர்ப்பது போல, புலவர்கள் பொழியும் கலை மழை அறிவை வளர்த்து, ஒழுக்கம் தந்து, அழியாப் பேரின்பத்தை யும் தருகிறது. அத்தகைய செயற்கரிய செயல் களைச் செய்யும் புலவர்கள், வயிற்றின் பொருட்டு வேலைமேற் செல்லின் மக்கள் கதி யாதாம்? கடும் புலி வாழும் காடாக அன்ருே உலகம் இருக்கும்! கலை வளர்ச்சியும் இம்மை இன்பமும் மறுமை இன்ப மும் தரும் கற்பகத் தருக்களாம் புலவர்களைப் போற்று வது அரசர், செல்வர் இவர்களின் முதற் கடமை யாம். நாட்டில் அமைதி இருந்தால்தான் அரசனது ஆட்சி நடைபெறும். செல்வரின் பொருளும் சிதை யாதிருக்கும். அந்த அமைதியை உண்டாக்கு வோர் புலவர்கள்.

''ஆண்டவனளித்த நல்லுடல் பெற்றும் உழைக் காத சோம்பேறிகள் யாசிப்பதுதான் பேரிழிவாகும்.

இரவு பகலாக எழுத்தெண்ணிப்படித்து. மூளையைக் கசக்கிக் கலையாகப் பொழியும் புலவர்கள் யாசிப்பது சிறுமை யாகாது; பெருமையேயாகும். மேலும் அழி யாக்கலைச் செல்வத்தை அளித்து, அழியும் பொருட் செல்வத்தைப் பெறுவது எவ்வாறு இரத்தலாகும்? இவை நீங்கள் அறிந்தனவே! உங்களுக்கு நினை வூட்டினேன்'' என்றாள் புலவர் மனைவி.

தமது கருத்தையும் மனைவியார் கருத்தையும் சிந்தனைத் தராசில் வைத்துப் புலவர் சீர் தூக்கிப் பார்த்தார். தம் மனைவியார் கருத்துள்ள தட்டு அழுந்திற்று. தக்கவரிடம் சென்று புலவர் பரிசு பெறத் துணிந்தார். 'எச்சொல் யாரிடத்துக் கேட் பினும் அச் சொல்லின் மெய்ப் பொருள் காண்பது அறிவு.'

படிக்காசுப் புலவர் வல்லநகர்க் காளத்தி பூபதி யிடம் போக விரும்பினார். வல்லநகர் என்பது வட ஆர்க்காட்டு மாவட்டத்திலுள்ள வல்லம் என்னும் ஊராக இருக்கலாம். அக்காளத்தி பூபதி பெருஞ் செல்வர்; புலவர்க்கு அடையா நெடுங் கதவும் அஞ்சலென்ற சொல்லும் கூம்பாத குளிர் முகமும் உடையவர். அவரிடம் படிக்காசுப் புலவர் சென்று "வல்லம் என்னும் பெரிய ஊரிலுள்ள காளத்தி பூபதியே, என் மனைவி குழந்தை பெற்றாள். அக் குழந்தைக்குத் தாயினிடத்துள்ள பால் போதவில்லை. அக்குழந்தை கஞ்சி குடிக்கும் நிலையிலில்லை. யாரிட மாகிலும் சென்று பாலிரக்கச் சிற்றாளுமில்லை. இவ் வெல்லாத் துன்பமும் தொலையும்படி கன்றோடுள்ள ஒரு பசுவை நீ எனக்கு அளிக்கக்கூடுமா?" என்று நுண்பொருள் பொதிந்த செய்யுளொன்றினைக் கூறி

ளுர். அச்செய்யுளின் நுண்பொருள் கற்ளேரைப் பரவசமாக்கும் இயல்புடையது.

தமக்கென்று பொருள் கேட்கப் புலவர் உள்ளம் துணியவில்லை. 'தாய்ப்பால் குழந்தைக்குக் காணுது குழந்தை கஞ்சி குடிக்கும் நிலையிலில்லை" என்று தாயின் வறுமையையும் குழந்தையின் இளமையையும் அவர் குறிப்பிட்டார். புலவர் பேராசை கொண்டு பெரும் பொருள் கேட்கவில்லை. கன்றுள்ள ஒரு பசுவையே கேட்டார். அதனையும், கொடு' என்று அவர் கேட்கவில்லை. "கொடுக்கக் கூடுமா?" என்றுதான் கேட்டார். புலவரின் அறிவின் நுட்பம் போற்றத் தக்கது.

புலவரின் வறுமையையும் புலமையையும் காளத்தி பூபதி கண்டார். புலவர் ஒரு பசுமட்டும் கேட்டார்; காளத்தி பூபதியோ பல பசுக்களையும் மிகுதியான பொருள்களையும் கொடுத்துப் புலவரை அனுப்பினுர். நிலையறிந்து, குறிப்பறிந்து கொடுப்பதே கொடையாகும். காளத்தி பூபதி பெரும் பரிசு கொடுத்தது புலவரிடத்துக் கொண்ட தனிப்பட்ட அன்போ? அன்றி அழகுத் தமிழ்மீது கொண்ட பழகிய அன்போ?

பரிசு பெற்ற புலவர், 'வல்லைமாநகர்க் காளத்தியே, நான் திரும்பிச் செல்லும் வழியையே பார்த்துக்கொண்டிருக்கும் என் மனைவி மனந்தளராமலும், பிறர் பழிக்காமலும் குழந்தையும் 'பால்' என்று அழாமலும், என்னை இங்கு அனுப்பிய ஏழையாகிய என் மனைவி மனந்திடுக்கிடக்கூடிய சொற்களைச் சொல்லாமலும், அவள் வருந்தி உடல் இளைக்காமலும்

கறக்கின்ற பசுவையும் வளர்க்கின்ற பொருளையும் கொடுத்தாய்' என்னும் பொருள் சிறந்த செய்யுளைக் கூறி, காளத்தி வள்ளலை வாழ்த்தி, தம் ஊர் நோக்கிச் சென்றார் படிக்காசுப் புலவர்.

காளத்தி பூபதியிடம் பெற்ற பரிசைப் புலவர் தமக்கெனப் பாதுகாக்கவில்லை. முன்பட்ட கடனுக்கும் தமிழ் கற்கும் மாணவர்களுக்கும் துன்புறும் சுற்றத்தார்க்கும் பசியுள்ள ஏழைகளுக்கும் அவர் அதனைப் பங்கிட்டுக் கொடுத்தார். அவரும் சில நாள் இன்பச் சோலையில் இனிது வாழ்ந்தார்.

**வள்ளல் பல்லக்குச் சுமத்தல்**

பண்டைப் பெருமையுள்ள தொண்டை வள நாட்டில் மாவை என்னும் ஓரூர் உண்டு. இப்போதுள்ள மாவண்டூர்தான் முற்காலத்தில் மாவை என்று வழங்கிற்றென்று சிலர் கூறுகின்றனர். அவ்வூரில் கத்தூரி என்னும் ஒரு கொடையாளி இருந்தார். அவரது கொடைப் பயன் ஒரு மகனைத் தோன்றியது. அம் மகன் பெயர் கறுப்ப முதலியார் என்பது. ஆனால் அவர் சிவப்பாகவே இருந்தார். அவர் அன்பிலும் அருளிலும் பொங்கி விளங்கினார். அவர், தாம் பிறந்த நாட்டைப் பொன்னாடாக நினைத்தார். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே.'

தொண்டை நாட்டின் பெருமையை அமைத்து ஒரு நூலியற்றுமாறு கறுப்ப முதலியார் படிக்காசுப் புலவரைக் கேட்டுக்கொண்டார். புலவரோ பெற்ற தாயைப் போலப் பிறந்த நாட்டைப் போற்றுபவர். அதனால் அவர் அகமிக மகிழ்ந்தார். வளமான பூந்தோட்டத்திலுள்ள பல நிற மலர்களை ஆராய்ந்

தெடுத்து எந்த எந்த இடத்தில் எந்த எந்த மலர்களைக் கட்டினுல் அழகாக இருக்குமென்று எண்ணி அன்புள்ள அடியார், அருளுள்ள ஆண்டவனுக்குப் பூமாலை கட்டுவதுபோல், தொண்டை நாட்டுத் தோகைக்கு அழகிய பாமாலை கட்டினுர் படிக்காசுப் புலவர். அதன் பெயர் தொண்டைமண்டல சதகம். அதனை அரங்கேற்ற முதலியார் புலவரைக் கேட்டுக்கொண்டார். புலவரும் உடன்பட்டார். அரங்கேற்றத்திற்கு அறிஞர் பலர் சென்றனர். சென்ற பெரியோர்களுக்குச் சிறந்த உணவும் தகுந்த இடமும் அளித்தார் கறுப்ப முதலியார். படிக்காசுப் புலவர் தொண்டைமண்டல சதகத்தை அரங்கேற்றினுர். அங்குச் சென்றிருந்த சான்ருேர், சொல் தேனையும் பொருள் பாலையும் செவி வாயால் உண்டு மகிழ்ந்தனர். முதலியார் உள்ளம் பூரித்துப் புலவருக்கு மிகுந்த பொருளும் தந்தப் பல்லக்கும் பரிசாகத் தந்தார். புலவர் நன்றி கூறினுர்.

மறுநாள் புலவர் தம் ஊருக்குச் செல்லப் பலரிடம் விடை பெற்றுக்கொண்டார். கறுப்ப முதலியாரின் விடைக்குக் காத்திருந்தார் புலவர். முதலியாரது செயலாளர் புலவரிடம் சென்று, வணங்கி, "ஐயா அவர்கள் அவசர வேலையாக வெளியே போயுள்ளார். நீங்கள் செல்லும் வழியிலுள்ள பண்ணை விடுதியில் அவர் தங்களைச் சந்திப்பதாகக் கூறியுள்ளார். அதனுல் தாங்கள் குறித்த நேரத்தில் புறப்படலாம்" என்ருர்.

புலவர் புறப்பட்ட நேரம் இரவு. மல்லிகையும் முல்லையும் குலுங்கக் குலுங்கச் சிரித்தன. வெண்ணிலவு புலவருக்கு விளக்கேந்தி நின்றது. விண்மீன்கள் கண்களை இமைக்காமல் புலவரைப் பார்க்க

விரும்பின. ஆனால் அவற்றால் முடியவில்லை. கண்களை இமைத்து இமைத்தே புலவரைப் பார்த்துக் களித்தன. இளந்தென்றல் மிகுந்த மணத்தை வாரிக் கொண்டுவந்து புலவருக்குத் தந்தது. 'புலவரின் இன்குரலுக்கு முன் நம் குரல் எடுக்காது' என்று பறவைகள் கூடுகளிலும் கிளைகளிலும் அடங்கிக் கிடந்தன. போகிகள் பாடிக் கொண்டே புலவரது பல்லக்கைச் சுமந்து சென்றனர்.

ஆனால் ஒரு போகியால் மட்டும் பல்லக்கைச் சுமக்க முடியவில்லை. அவன் இடத் தோளிலிருந்து வலத் தோளுக்கும் வலத் தோளிலிருந்து இடத் தோளுக்கும் மாற்றிக்கொண்டே இருந்தான். அதனால் பல்லக்கு இப்பக்கமும் அப்பக்கமும் அசைந்து கொண்டே இருந்தது. அவனுக்குப் பின்புறம் பல்லக்குத் தூக்கும் ஒருவன் சினந்து, "என்ன ஐயா, நீ பல்லக்குத் தூக்கத் தெரியாதவன்போல் திண்டாடுகிறாய்? போ ஐயா, அப்புறம்!" என்று அவரைப் பிடித்துத் தள்ளினான்.

அவன் தள்ளிய வேகத்தால் அப் புதியவரது தலைப்பாகை கீழே விழுந்தது. அவனைக் கண்டு போகிகள் திகைத்து நின்றனர். பல்லக்கும் நின்றது. போகிகளில் ஒருவன் உடல் நடுங்கி, வாய்க்குழறி, "பல்லக்குக்கொடுத்த நீங்களா பல்லக்குச்சுமப்பது?" என்றான். கறுப்ப முதலியார் தமக்குப் பல்லக்குச் சுமந்தார் என்பதை அறிந்த புலவர் திட்டென்று குதித்தார்; கறுப்பனாரை அவர் இறுகக் கட்டித் தழுவி அவரது திண்ணிய தோளைக் கண்ணீரால் நனைத்துக் கதறினார். கதறி, "அன்பும் அருளும், கல்வியும் செல்வமும் கொடையும் ஞானமும்

உடைய தாங்களா எனக்குப் பல்லக்குச் சுமப்பது?'' என்று புலவர் ஒடுங்கிய குரலால் வினவினுர்.

"முரசு கட்டிலில் படுத்துறங்கிய மோசிகீரனுர்க்குக் கவரி வீசிய கணைக்கா லிரும்பொறையை விடவா நான் மேலானவன்? அவர் ஒரு சூரியன். நான் ஒரு மின்மினி. புலவர் பணிசெய்ய என்னை ஆளாக்கிய ஆண்டவன் பேரருளைப் போற்றுகின்றேன்'' என்ருர் கறுப்ப முதலியார். புலவர் அவர் மீது சில பாடல்களைப் பாடிப் புகழ்ந்தார்.

## அம்பிகையின் பரிசு

சில ஆண்டுகள் சென்றபின் அறப்பணியும் தமிழ்ப் பணியும் புலவர் செய்யக்கருதித் தில்லையை அடைந்தார். அவரை முன்போலவே வறுமைப் புயல் சுழற்றிற்று. புலவர் கூத்தப்பெருமானின்கோயிலை அடைந்தார். அக்கோவில் சிதம்பரச் செல்வியின் திருமுகம். அத்திருமுகத்தின் திலகம் பொன்னம்பலம். நாற்புறத்திலும் ஓங்கி உயர்ந்த நான்கு கோபுரங்களில் அரைத்த சுண்ணும்பினுல் செய்யப்பட்ட அழகான பதுமைகள் விளங்குகின்றன. அப் பதுமைகளுக்கு அழகைக் கொடுத்த சிற்பிகள் உயிரை மட்டும் கொடுக்கவில்லை. உயிரைக் கொடுத்திருந்தால் அவை ஓடிப்போயன்ருே இருக்கும்! நிலைக்கு நிலை, மூலைக்கு மூலையிலிருக்கும் கோபுரந் தாங்கிப் பதுமைகள், தங்களால்தான் இக் கோபுரங்கள் நிற்கின்றன என்று சொல்வன போல் பெருமிதக் காட்சி யளிக்கின்றன. தேவாரத் திருமுறை பூட்டப் பெற்றிருந்த திருக்கோயிலும் திருச் சுற்ருலயங்களும், திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் அரங்கேற்றிய

அகன்ற ஆயிரக்கால் மண்டபமும், சிவனடி மறவாத் திருநீலகண்டரது சிக்கலான வழக்குத் தீர்த்த திருமண்டபமும் விளங்கும் தெய்வத் திருக்கோயிலைப் படிக்காசுப் புலவர் கண்டு கரைந்துருகினர்.

உருகியவாறே கோயிலை வலம் வந்தார். உலகெல்லாம் ஈன்ற கன்னியாம் உமாதேவியை உள்ளத்து இருத்தி, உடல் குழைய, என்பெலாம் உருக, விழிநீர் பெருக, ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகுவதுபோல் அம்மையின் திருவடியில் கலந்து, "அன்னையே, முருகனுக்கு வேல் கொடுத்தாய். உனக்குத் திருமணம் நடந்த காலத்தில் அம்மியின் மீது வைக்க உன் மணவாளனுக்கு உன் திருவடியைக் கொடுத்தாய். திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் அளித்தாய். மும்மூர்த்திகளும் அஞ்சும்படி மன்மதனுக்கு அதிகாரம் அளித்தாய். எனக்கேதும் அளிக்கவில்லையே?" என்னும் பொருளமைத்துப் பாடினர்.

பெருமாட்டியின் திருவருளால், "புலவர்க்கும் அம்மையின் பொற்கொடை" என்று பலர்க்குக்கேட்கும்படி ஐந்து பொற்காசுகள் பஞ்சாக்கரப் படியின் மீது விழுந்தன. அவற்றைத் தில்லை வாழந்தணர் ஒருவர் பொன் தட்டில் வைத்துப் புலவர்க்குக் கொடுத்து வணங்கினர். அன்று முதல் அவருக்குப் படிக்காசுப் புலவர்' என்ற பெயர் வழங்கலாயிற்று. 'தூய்மை யுடையோர் எண்ணியபடியே தெய்வம் ஈடேற்றும்,' என்பது எவ்வாறு பொய்யாகும்?

**சேதுபதியின் அன்பு**

இராமநாதபுரம் அரசர்கள் தமிழ்ப் புலவர்களுக்குத் தாயகமாக விளங்குகின்றவர்கள். அவர்களுள்

ஒருவர் இரகுநாத சேதுபதி என்பார். அவரைத் 'திருமலைச் சேதுபதி' என்றும் கூறுவர். அவர் கி. பி. 1647 முதல் 1672 வரை வாழ்ந்து வந்தார். அவர் அருட்குணமும் பொருட் செல்வமும் உடையவர்; தமிழ்ப்பற்றும் புலவரைப் போற்றும் பண்பும் படைத் தவர்.

அவரைப் படிக்காசுப் புலவர் கண்டு, "இரகு நாத சேதுபதியாம் வெற்றி வீரனே, முடியுடை மூவேந்தரும் விண்ணுலகு சென்று, அவர் காலத்தி லிருந்த முதல், இடை, கடைச்சங்கங்களும் அழிந்து முதல் வள்ளல்கள், இடை வள்ளல்கள், கடை வள்ளல்கள் ஆகிய இருபத்தொரு வள்ளல்களும் பொன்னுலகமடைந்து வேற்றோர் அரசனும் அறஞ் செய்யாதிருக்கும் காலத்தில், பாவேந்தர் காற்றிலகப் பட்ட இலவம் பஞ்சுபோல் ஆதரவற்று அலையும் காலத்தில் கற்பகத் தருவைப்போல் பொருளை வாரிக் கொடுக்கின்றாய்," என்னும் கருத்துள்ள பாடலைப் பாடினார்.

இரகுநாத சேதுபதி அவர்கள் மகிழ்ந்து, புல வருடைய பாடல்களின் சுவையை நாள்தோறும் நுகர விரும்பினார். அதனால் அவர் தம் அவைக் களப் புலவரோடு படிக்காசரை இருக்கும்படி கேட் டுக்கொண்டார். அவர் சில நாள் அங்கிருந்த பின் காயற்பட்டினத்தை அடைந்தார்.

### சீதக்காதியின் பரிசு

அவ்வூரில் சீதக்காதி என்றொரு செல்வர் இருந் தார். அவர் முஸ்லிம். அவருக்குச் சீதக்காதி மரைக்காயர் என்றும் மற்றொரு பெயருண்டு. 'மரைக்

காயர்' என்பது தமிழ் முஸ்லிம்களுக்கு வழங்கும் குலப் பெயர். சீதக்காதியின் மாளிகை முழுவதும் தமிழ் மயம். தமிழ் அவரது தாய்; தமிழ்ப் புலவர்கள் அவருடைய சகோதரர்கள்; நண்பர்கள்; உறவினர்கள். அவர்களோடு தமிழ்ச்சுவை நுகர்வதே அவருக்குப் பொழுது போக்கு. கொடையினுலும் அவர் சிறப்புற்ருர். அவரது கொடையைப்பற்றிப் பல சொல்லுவானேன்? 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி,' என்பதே போதுமானது. அவர் செத்தும் கொடுத்ததால்தான் இன்றும் அவர் சாகாமல் இருக்கிருர்.

படிக்காசுப்புலவர் காயற்பட்டினத்தையடைந்து சீதக்காதியைக் காணச் சென்ருர். சீதக்காதி, தாய்ப் பசுவைக் கண்ட இளங் கன்றுபோல் மகிழ்ந்தார். புலவராம் தாய்ப் பசு, செய்யுளாம் பாலைக் குடம் குடமாகவன்ருே கறக்கும்? அந்தப் பாலை பருகி இன்பமடைய எண்ணினுர் சீதக்காதி. அவர் புலவரை எதிர் சென்றழைத்துச்சென்று உபசரித்தார்; உருகினுர்; புலவர் பல நாள் அங்கிருந்து சீதக்காதியின் கொடைச்சிறப்பையும் குணப் பெருமையையும் இயற்கை அழகையும் மக்களின் இயல்பையும் அமைத்துப் பல பாடல்கள் பாடினுர். சீதக்காதி மிக மகிழ்ந்து, பெரும் பரிசு அளித்துப் புலவரைப் பல்லக்கில் ஏற்றித் தாம் நடந்து சென்று வழியனுப்பினுர்.

### சிறைக்குள் புலவர்

ஒருநாள் புலவர் பல்லக்கிலேறி மிகுந்த ஆரவாரத்தோடு சிவகங்கையை அடைந்தார். திருமலைத் தேவன் என்பவன் அவ்வூர்க்குத் தலைவன். புலவரது ஆரவார வருகை அவனுக்குப் பொரு

மையை உண்டாக்கிற்று. பொருமை, சினத்தை மிகுத்தது. சினம் புலவரைச் சிறையில் அடைத்தது. திருமலைத் தேவன் புலவருக்கு வயிறார உணவு கொடுக்கவில்லை. அவரைக் கடும்பசி வருத்திற்று. அதனால் அவரது உடல் நிலை மாறிற்று; ஆனால் உள்ள நிலை மாறவில்லை.

ஒரு போது புலவருக்குச் சினம் மிகுந்தது. 'திருமலைத்தேவன் மீது வசைபாடி அவனை ஒழித்துவிட வேண்டும்' என்று ஓரெண்ணம் தோன்றிற்று. 'அவன் இறப்பின் பலர் கண்ணீர் விட்டுக் கதறுவர். அந்தோ! நான் ஏன் அவர்களைத் துன்பத்திற்கு ஆளாக்க வேண்டும்? என்னைச் சிறையிலடைத்த பாவத்திற்கு அறக்கடவுள் அவனைத் தண்டிக்குமே! என் செய்வது! அவன் தண்டனைக்கு ஆளாகாமல் இருக்க ஒரு வழியும் தோன்றவில்லையே!" என்று புலவர் வருந்தினார். பெரியோர் தங்களுக்குள்ள துன்பத்தை நீக்கக் கருதார். பிறர்க்குள்ள துன்பத்தையே போக்கக் கருதுவர். நிலவு தன்னிடத்திலுள்ள இருளையும் போக்கிக் கொள்ளாமல் உலகின் இருளைப் போக்குகிறதன்றோ!

புலவரது சிறைக் கோட்டத்திற்கு அருகில் சிறந்த பூஞ்சோலை ஒன்றிருந்தது. அதன் நடுவில் நீலமணி போன்ற நீருள்ள குளம். அக்குளத்தின் நீர் தெரியாமல் இருவகைத் தாமரையும் அல்லியும் படர்ந்திருந்தன. அவற்றின் இலைகள் தெரியாமல் மலர்கள் மலர்ந்திருந்தன. மலரிலுள்ள தேனை வண்டுகள் உண்டு மேலே செல்வதும் மலர்க்கு வருவதும் கங்கை என்னும் காரிகை தன் மலர்க் கரங்களால் கழங்காடுவது போன்றிருந்தது.

அந்தக் குளத்தைச் சுற்றிலும் பலநிற மலர்கள் மலர்ந்திருந்தன. அவற்றின் ஒளி சோலையின் இருளில் விளக்கெரிவதுபோல் காணப்பட்டது.

கோடையின் வெப்பம் நீங்க மாலைக்காலத்தில் அந்தக் குளிர்சோலைக்குத் திருமலைத் தேவன் சென்றான். அவனுடைய கண்கள் சோலையின் அழகைப் பருகின ; காதுகள் பறவைகளின் பாடல்களைச் சுவைத்தன ; உடல் இளந்தென்றலில் தோய்ந்தது. புலவர் இதுதான் தக்க சமயம் என்றறிந்து அவனுக்குக் கேட்குமாறு இனிய குரலில் ஏற்ற இசையுடன் செய்யுளாம் தென்னமுதத்தை வாரி இறைத்தார்.

'நாட்டிற் சிறந்த திருமலையா, மேலான நாகரிகா, பாட்டிற் சிறந்த படிக்காசுப் புலவராம் பசுங்கிளியைக் காட்டிலும் சோலையிலும் பறந்து உலவாமல் கூட்டில் அடைத்து வைத்தாய். அதனால் அது, "இரை கொடு," என்று உன்னைக் கூப்பிடுகின்றது' என்பது அப் பாடலின் பொருள்.

புலவரது செய்யுள் உள்ளத்தையே அள்ளிக் கொள்கிறது தென்றலில் தவழ்ந்துகொண்டே அச் செய்யுள் திருமலைத் தேவன் செவியிற் புகுந்தது. அது அவனுக்குப் பாலோடு தேன் கலந்ததுபோன்றிருந்தது ; அவனது உள்ளத்தைக் கவர்ந்தது. அவன் புலவரிடம் ஓடி, "செந்தமிழ்ச் செல்வரே, வணக்கம். அடியேன் பிழையைப் பொருத்தருள்க. உங்களைச் சிறையிலிட்ட என்னை, 'நாட்டிற் சிறந்த திருமலையா, துங்க நாகரிகா' என்று அழைத்தீர். இது நான் செய்த தீங்கினை நீங்கள் தீங்காகக் கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. இத்

தகைய பண்பட்ட உங்களைப் பாவியேன் துன்புறுத்தினேன். உமது பாட்டின் பொருள் இருண்ட என் உள்ளத்தில் ஞான விளக்கேற்றியது. என் குற்றத்தை மன்னிக்க வேண்டும்,'' என்று கூறிப் புலவரை விடுதலை செய்து தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று பெரும் பரிசளித்தான்.

**தண்டலையார் சதகம்**

புலவர் அங்கிருந்து புறப்பட்டுப் பல ஊர்களுக்குச் சென்று கடைசியில், 'தண்டலை நீணெறி' என்னும் ஊரை அடைந்தார். அவ்வூரார் புலவரை வரவேற்று உபசரித்துச் சிறந்த நூலொன்றியற்றித் தருமாறு வேண்டினர். படிக்காசுப் புலவர் மகிழ்ந்து, பொன்னில் இரத்தினத்தைப் பதித்ததுபோல் ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வொரு பழமொழியை வைத்து ஒரு நூலியற்றினர். அதன் பெயர் தண்டலையார் சதகம். அது நூறு பாடல்களைக் கொண்டது; இனிய சந்தமும் அரிய பொருளும் அமைந்தது. புலவர் அதனை அவ்வூரில் அரங்கேற்றினர். அறிவிற் சிறந்த புலவர்களும் ஒழுக்கம் மிகுந்த சான்றோர்களும் கேட்டு மகிழ்ந்தனர் ; புலவரைப் போற்றினர். ஊரார் புலவருக்குப் பெரும் பரிசளித்தனர்.

**இறந்த பின் தந்த பரிசு**

செந்தமிழ்ச் செவிலியாம் சீதக்காதியை மீண்டும் காணவேண்டும் என்னும் பேராவல் புலவர் உள்ளத்தில் பொங்கிற்று. அவர் விரைந்து சென்று காயற் பட்டினத்தைக் கண்டார்; சீதக்காதியின் பூத உடலைக் காணவில்லை ; புகழுடலையே கண்டார். செந்த

மிழும் செழுங்கொடையும் கோயிலாகக் கொண்ட சீதக்காதியின் அரிய உடல் சவக்குழியைக் கோயிலாகக் கொண்டு மறைந்திருந்தது. புலவர் வருந்தினுர் ; கண்ணீர் விட்டார் ; கதறினுர்.

அவர் நேரே சீதக்காதியின் சமாதிக்குழியை அடைந்து, அவரது கொடையைப் புனைந்து பல பாடல்கள் பாடிப் புலம்பினுர். சவக்குழி வெடித்து, மேகத்திலிருந்து மின்னல் வருவதுபோல் குழியிலிருந்து சீதக்காதியின் பொற்கரம் வெளியே வந்தது. அக்கையின் ஒரு விரலில் பளபளவென்று ஒரு மோதிரம் ஒளி வீசிற்று. புலவர்க்கோ ஒன்றும் புரியவில்லை. அவருடைய புலன்களும் தத்தம் வேலையைச் செய்யவில்லை. அந்த நிலையில் சீதக்காதியின் விரலிலிருந்த மோதிரம் கழன்று, திருமாலின் சக்கரம்போல் சுழன்று புலவரது கையில் விழுந்தது. புலவர்க்கு மேலும் உணர்ச்சி அடங்கியபின் உணர்ச்சி வரப் பெற்றுப் பலர்க்கு அச்செய்தியைப் பரப்பினுர். திருமுடிக்காரியினிடம் பொன் பெறச் சென்ற ஔவை களைக்கொட்டுப் பெற்றதும், சீதக்காதியின் சமாதிக் குழியைச் காணச்சென்ற படிக்காசுப் புலவர் பொன் பெற்றதும் வியப்பிற்குரிய செய்தியன்ருே ! இரண்டும் அன்பின் செயல்தான்.

படிக்காசுப் புலவர் சீதக்காதியின் திருமாளிகையை அடைந்து நடந்த செய்தியைக் கூறினுர். அப்போது அவரது முகம் வேறுபட்டிருந்தது. அவருடைய கண்ணிமைகள் அசையவில்லை. நெற்றியிலேறிய புருவங்கள் அங்கேயே நின்றுவிட்டன. சீதக்காதியின் சுற்றத்தாரும் அந்நிலையை அடைந்தனர்.

பின்பு அவர்களில் ஒருவர் புலவரைப் பார்த்து, "செந்தமிழ்ச் செல்வமே, நாங்கள் கூறுவதற்குச் செவி சாய்க்க வேண்டும். செந்தமிழ்ச் சீதக்காதி சில நாள் நோயுற்றிருந்தார். அவர் இவ்வுலகை விட்டு நீங்கச் சிறிது நேரத்திற்கு முன், 'நான் இவ்வுலகை விட்டுச் செல்லப் போகிறேன். புலவராம் செந்தமிழ்ப் பயிர்கள் எவ்வாறு வாடுமோ! என் விரலிலுள்ள பொன் மோதிரத்தைக் கழற்ருமல் என்னை அடக்கம் செய்யுங்கள்' என்ருர். நாங்களும் அவ்வாறே செய்தோம். அதன் காரணம் இப்போது தான் தெரிந்துகொண்டோம். இதுவரை கண்ணுற் காணுத காட்சி இது; காதால் கேட்காத செய்தி இது," என்று வியப்புற்றனர். புலவரை அங்கே இருக்குமாறு அவர்கள் வேண்டினர். புலவர் சிலநாள் அங்கிருந்தார்.

## ஞானத் துறவு

தமிழ்த் தொண்டு புரிந்த சந்தக்கவிப் பெருமானுக்குச் சமயத் தொண்டும் புரியவேண்டும் என்று ஓர் எண்ணம் தோன்றியது. மேலும், "ஒரு ஞான குருவை அடுத்து, நல்லுபதேசம் பெற்று ஞானவாரிதியில் மூழ்கவேண்டும்," என்றும் புலவர் எண்ணினுர். வேடர் வலையில் பட்டு அதனை அறுத்துக் கொண்டு ஓடுகின்ற புள்ளிமான்போல் இல்லறத்தை விட்டு ஞானுசிரியரைப் புலவர் நாடிச் சென்ருர். "தக்கவர் யார்?" என்று அவரது மனம் ஆராய்ந்தது. தருமபுர ஆதீனத் தலைவரே தக்கவரென்றும் சான்ருேர் என்றும் புலவர் துணிந்தார். அதனுல் அவர் அவரைக் காணச் சென்ருர்.

வெண்ணீறு பூத்த உடல், மெய்ஞ்ஞானம் பழுத்த உள்ளம்; மார்பில் உருத்திராக்க மாலை, காதில் உருத்திராக்கக் குண்டலம், இடையில் காவி உடை, தலையில் காவித் தலைப்பாகை, முகத்தில் வெண் சாமரைபோல் வெளுத்து நீண்ட தாடி. இக்கோலத்துடன் துறவறச் சீடர்கள் சூழ்ந்திருக்க ஓராசனத்தில் தட்சிணாமூர்த்திபோல் தருமபுர ஆதினத் தலைவர் அமர்ந்திருந்தார்.

அத்தேசிக மூர்த்தியைப் படிக்காசுப் புலவர் கண்டு அவரது திருவடிகளில் விழுந்து, "ஞான தேசிகா, அடியேனையும் உங்கள் அடியார்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளக் கோருகின்றேன். பிறவிப் பெருங் கடல் கடந்து வீட்டுலகை அடைய வழி காட்டுங்கள்," என்று சொற்கள் தடுமாறக் கூறினார். ஆதீனத் தலைவர் அவருக்குத் திருக்கண் மலர்ந்தருளினார். படிக்காசுப் புலவரின் புலமையையும் ஒழுக்கத்தையும் அவர் முன்னமே கேள்வியுற்றவர்.

ஆதீனத் தலைவரின் கட்டளைப்படி புலவர் அங்கு இலக்கண இலக்கியங்களைப் பலர்க்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு நாள் ஞானாசாரியர் புலவர்க்குத் துறவிகட்குரிய காவியுடை கொடுத்து ஞானோபதேசம் செய்தார். புலவரது உள்ளம் பேரின்பக் கடலில் மூழ்கிற்று. சில நாட்களுக்குப் பின் ஆதீனகர்த்தர் வைத்தீசுவரன் கோயில் என்னும் புள்ளிருக்கும் வேளூர்க் கோயிலுக்குப் புலவரைக் கட்டளைத் தம்பிரானாக நியமித்தார். புலவர் அதனைத் தலைமேற் கொண்டார். அன்று முதல் புலவர், 'படிக்காசுத் தம்பிரான்,' என்று அழைக்கப்பெற்றார்.

அவர் தருமபுரத்திலிருந்து வைத்தீசுவரன் கோயிலை யடைந்தார்; திருக்கோயில் திருப்பணிகளை அவர் ஒழுங்காக நடத்தினார்; யாத்திரிகர்களுக்கும் ஏழைகளுக்கும் அறுசுவை உண்டியளித்தார். அவரது சிவ பக்தியும் சிவனடியார் பக்தியும் செந்தமிழ் அன்பும் நல்லோரைக் கவர்ந்தன. அவர்கள் தம்பிரானை போற்றிப் புகழ்ந்தனர். அவர்கள் படிக்காசுத்தம்பிரானை வணங்கி,புள்ளிருக்கும் வேளூரில் திருக்கோவில் கொண்ட வைத்தீசுவரர்மீது ஒரு நூலியற்றித் தருமாறு வேண்டினர். அவ்வாறே தம்பிரானவர்கள் புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம் இயற்றினார். அது மனத்திருள் ஒழிக்கும் விளக்கு; கற்போர் உள்ளத்தினில் இனிக்கும் கரும்பு; பிறவிக் கடலைக் கடப்போர்க்குக் கப்பல்.

கலம்பகத்தைப் பெரியோர் முன்னிலையில் தம்பிரானவர்கள் அரங்கேற்றினார். சான்றோர் தேனுண்ட வண்டுபோல் ஆயினர். அந்நூற் பொய்கையிலிருந்து ஒரு வாடா மலரைப் பறித்து மாதிரிக்குத் தருகிறேன். அதன் தேனைப் பருகுங்கள் :

''தருந்தேனே அனையமொழித் தையல்பங்கர் வேளூரார்
தண்தார்வேட்டுக்
கருந்தேனே தினமுனக்குச் செந்தேனே தந்தேனே
கறிசோறின்னம்
அருந்தேனே இணைவிழிகள் பொருந்தேனே
கொன்றையந்தார் அளித்தால் ஆவி
வருந்தேனே உனை வழிபார்த் திருந்தேனே இருகாத
வழிவந்தேனே.''

இந்த ஒரு மலரில் எத்தனை தேன் துளிகள்! எத்தனை அறிஞர் இந்தத் தேனை உண்டிருப்பர்! உண்

டும் தேன் சுரந்து கொண்டேதான் இருக்கிறது. என்ன வியப்பு! இதுவும் ஓர் அமுதசுரபி போலும்!

படிக்காசுத் தம்பிரானவர்கள் வைத்தீசுவரன் கோவில் கட்டளைத் தம்பிரானாக இருந்த போது அடிக்கடி தில்லைக்குச்சென்று நடராசப் பெருமானைச் சேவித்து வருவது வழக்கம். "இறைவனது வளைந்த எழில் புருவமும் கொவ்வைப் பழம் போன்ற செவ் வாயும் அதில் விளங்கும் புன்சிரிப்பும் குளிர்ந்த சடையும் பவளம் போன்ற மேனியில் பால் போன்ற வெண்ணீறும், இனித்தமுடைய பொற்பாதமும், ஆடிய கோலமும் அவரைக் கவர்ந்து விட்டன. அதனால் புலவர் இறுதியில் அங்கேயே தங்கிவிட் டார். நாள் தோறும் வகை வகையாகப் பாமாலை யும் பூமாலையும் புனைந்து பரமனுக்குச் சாத்தி இன் புற்றார். மற்ற நேரத்தில் உலகத்துயிர்கள் இன்ப மடையத் தவத்தை மேற்கொண் டிருந்தார். இவ் வாறு அவரது இன்பத்தவ வாழ்வு இனிது சென்றது. சென்றபின் பொய் வளரும் நெஞ்சினர்கள் கலக்காத பேரொளியில் தம்பிரானார் இரண்டறக் கலந்து விட்டார்.

படிக்காசுத் தம்பிரானாரின் பாடல்களின் சுவை யைத் துய்த்தோர் பலர். சொக்கநாதப்புலவரும் அவர் களுள் ஒருவர். அவர், 'மணம் நிறைந்த சோலை சூழ் களத்தூரில் பிறந்த படிக்காசர் கூறிய தமிழ் எழுதிய ஏட்டைப் பட்டால் மூடினாலும் பரிமளிக் கும்; தொட்டாலும் கை மணக்கும்; சொன்னாலும் வாய் மணக்கும்; தூய சேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடும்' என்று படிக்காசுத் தம்பிரானா ரின் பாடலைப் புகழ்ந்தார்; புகழ்ந்து மகிழ்ந்தார்.

# 7. எட்டயபுரத்து முத்து

**கல்வி கற்றல்**

பழம் பெரும் பெருமையுடையது பாண்டிய நாடு; அதன் தலைநகர் மதுரை. அதில் தமிழணங்கின் விழிபோல் மீனக்கொடி பறந்தது. அவளது சிலம்பொலி போல் செந்தமிழ் முழங்கிற்று.

பாண்டிய நாட்டில் எட்டயபுரம் என்று ஓரூர் உண்டு. தேசியகவி பொழிந்த சி. சுப்பிரமணிய பாரதியார் பிறந்த ஊர் அந்த ஊர். அந்த ஊரில் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் கடிகை முத்துப் புலவர் பிறந்தார். பெற்றோர் மகிழ்ந்தனர்; குழந்தைக்கு, 'முத்து' என்று பெயரிட்டனர். கடிகை என்பது அவரது குடிப்பெயர். புலவர் என்பது சிறப்புப் பெயர். இரண்டினையும் முத்து என்னும் பெயருக்கு முன்னும் பின்னும் சேர்த்துப் பிற்காலத்தவர் 'கடிகை முத்துப் புலவர்' என்று வழங்கினர்.

தரையில் உட்கார்ந்து, மணலில் எழுதி, ஓலையில் படித்துக் கல்வி கற்பது அக்கால வழக்கம். அவ்வழக்கப்படி கடிகை முத்துப் புலவர் கற்றார்; அவரோடு படித்த மாணவன் ஒருவன் ஆசிரியரைப் பார்த்து, "ஐயா, முத்து என்பவன் தன் ஐந்து விரல்களை மடக்கி எனக்குக் காட்டி, 'இதில் எல்லாம் அடங்கிவிட்டன' என்று கூறினான். மேலும் அடிக்கடி எங்களிடம் குறும்பாகவும் வேடிக்கையாகவும் பேசுகிறான்" என்றான். ஆசிரியர் கடிகை முத்துப் புலவரை நோக்கினார்.

முத்து எழுந்து, "ஐயா, வணக்கம், நான் ஐந்து விரல்களை மடக்கிக் காட்டியதற்குப் பொருள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பது. அவற்றில் எல்லாம் அடங்கிவிட்டன. எங்கும் நிறைந்த ஈசனும் அவற்றில் அடங்கிவிட்டான். இதுவே நான் குறித்த பொருள். குற்றம் இருந்தால் மன்னிக்க வேண்டும்," என்று பணிவு தோன்றக் கூறினார்.

"நான் திண்ணைப் பள்ளி ஆசிரியன். இனி உனக்குக் கற்பிக்க எனக்குத் தகுதி இல்லை. தக்காரிடம் சென்று கற்க," என்று ஆசிரியர் மகிழ்ந்து கூறினார். முத்துப் புலவர் அவரை வணங்கிச் சென்றார்.

அவருக்கு மிகுதியாகக் கற்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. ஒரு வண்டு, பல வகை மலரில் பல சுவைத் தேனைப் பருகுவதுபோல், அவர் பல நல்லாசிரியரிடம் இலக்கியம், இலக்கணம், சங்கீதம் முதலிய கலைகளைக் கற்றார். பசுவின் பால் சுவையுடையதுதான். அதில் சிறிது தேனைக் கலந்தால் சுவையோ மிகுந்திருக்கும். இலக்கியப் பாலில் இசைத் தேனைக் கலந்து உண்ண விரும்பினார் புலவர். அதனால் அவர் இலக்கியம் கற்றதோடு அதற்குச் சுவைதரும் இசையையுங்கற்றார். தேவாரம் முதலிய தெய்வப் பாடல்களைப் பண் முறைப்படி பாட வேண்டும் என்பது அவரது பேரவா. அதனால் அவர் ஓதுவார் மூர்த்திகளிடம் சென்று அவற்றை ஐயம் திரிபறக் கற்றார். அவர் இசையும் தாளமும் அமைத்து, ஏழு பருவ மாதர்களைக்குறித்து அழகிய சிந்து ஒன்று பாடியுள்ளார்.

**உயர்ந்த பதவி**

எட்டயபுரம் அவர் காலத்தில் சிறு சமஸ்தான மாக இருந்தது. வெங்கடேசுரட்டன் என்பவர் அச் சமஸ்தானத் தலைவர். தம் அன்பை ஈசன் தாளுக்கு விருந்திட்டவர். அவர் கடிகை முத்துப் புலவரின் கல்வித் திறத்தையும் ஒழுக்கத்தின் உயர்வையும் உலகியல் அறிவையும் கேள்வியுற்ருர். அவரை சமஸ்தானப் புலவராக வைத்துக்கொள்ளவேண்டும் என்று அவருக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதனுல் அவர் பல்லக்கனுப்பி அவரை அழைத்து வரச்சொன்ஞர். புலவர் சென்று அரசரைக் கண் டார். அரசர் அவருக்கு இருக்கை யளித்து, 'எனது வேண்டுகோளை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்," என்ருர்.

"வேண்டுகோள் யாதோ ?"

"நீங்கள் எம் அவைப் புலவராக இருக்க வேண்டும் என்பது."

"பறந்து திரியும் பறவையை ஒரு கூட்டில் அடைத்து வைக்காதீர்."

" அந்தக் கூட்டிற்குக் கதவே இல்லை. பறவை தன் விருப்பம்போல் போகலாம்; வரலாம்; பாடலாம்; ஆடலாம்."

"அப்படியாயின் உங்கள் வேண்டுகோளை ஏற் றுக் கொள்கிறேன்."

அன்று முதல் அரசரும் புலவரும் உடலும் உயிருமாயினர். புலவர் அரசர்க்குச் செந்தமிழ்ச் சுவையை ஊட்டினர். அரசர் உண்டு மகிழ்ந்தார்.

**இன்ப நகைச் சுவை**

கடிகை முத்துப்புலவர் நகைச்சுவைஉண்டாகப் பேசுவதில் வல்லவர். ஒரு நாள் அவர் தம் தலைவியின் திவசத்திற்குப் பல பொருள்களை வாங்கி மூட்டையாகக் கட்டிச் சுமக்க முடியாமல் தலையில் சுமந்து சென்றார். அது அவருக்குப் பாரமாக இருந் தது என்பதை அவரது நடை காட்டியது. ஊரின் இன்ப துன்பத்தைக் காண்பதற்காகச் சென்ற எட் டையபுரத்தரசர், புலவரைப் பார்த்துவிட்டார். அவரது உள்ளம் சுருக்கென்று சுட்டது. அவர் புலவரைப் பார்த்து, "என்ன இது, கோலமாக இருக்கிறதே?" என்றார். அதற்குப் புலவர், "இது என் தலைவிதி வசம்," என்றார். அது 'தலைவி திவசம்' என்றும் 'தலைவிதி வசம்,' என்றும் பொருள்படவே அரசர் நகைத்தார். அந்தக் கருத்தோவியத்திற்கு ஒரு பரிசும் அவர் கொடுத்தார். அது உயிரற்ற பரிசன்று; உயிரும் உணர்ச்சியும் உள்ள பரிசு; அன்று முதல் புலவருக்கு வேலை செய்ய அவர் ஒரு வேலைக்காரரைக் கொடுத்தார்.

நோயானது முற்றும் உணர்ந்த முனிவரென்று பார்ப்பதில்லை; கற்றுணர்ந்த கலைஞனென்று பார்ப்ப தில்லை. கடிகை முத்துப் புலவரும் அந்த நோய்க்கு இரையானார். கரு வண்டுகள் பாடிய செந்தாமரைப் பூவில் கொடிய கிருமிகள் குடியேறியதுபோல், புல வரது செந்தமிழ்க் கோவிலாம் உடலில் கொடிய நோய் குடிகொண்டது. அவர் படுத்த படுக்கையில் பலநாள் கிடந்தார். அவருக்கு உணவு உட்செல்ல வில்லை. அவரது மகள் கவனக்குறைவால் அழுக்குத்

துணியைப் பாலில் நனைத்து அவரது வாயில் பிழிந்தாள். புலவர் அதனை வெறுப்போடு வெளியில் துப்பிவிட்டார். அவரது மகள் திடுக்கிட்டு, "அப்பா! அப்பா! பாலும் கசக்கிறதோ?" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள். அதற்குப் புலவர், "பாலும் கசக்கவில்லை, துணியும் கசக்கவில்லை," என்றார். அதனைக் கேட்ட அவளுக்குத் துக்கந்தான் உண்டாயிற்றோ? அல்லது வெட்கந்தான் உண்டாயிற்றோ?

இரண்டொரு நாட்களுக்குப் பின் தமிழுலகை அலங்கரித்த புலவர் விண்ணுலகை அலங்கரிக்கப் போவார்போல் தோன்றிற்று. அவரது ஆருயிர் மக்கள் அருகில் இருந்து கண்ணீர்விட்டுக் கதறினர். "எட்டப்பன் இருக்கும்போது ஓரப்பனுக்கு அழாதீர்" என்றார் புலவர். எட்டப்பன் என்பது எட்டயபுரத்தரசன் என்றும் எட்டுப்பேர் தந்தை போன்றிருக்கின்றனர் என்றும் பொருள்படும். மரணத் துன்பத்தை விடப் பெருந்துன்பம் வேறொன்றில்லை. அத்துன்பத்திலும் இரு பொருள் படும் சொற்கள் இயல்பாக வந்தன எனின் அவரது புலமை போற்றத்தக்கது. சில நாட்களுக்குப்பின் புலவரது உடல் நோயை வென்றது. பலர் மகிழ்ந்தனர்.

நன் மாணவர்

உமறுப் புலவர் ஒரு முஸ்லிம். அவரது தந்தையார் பெருவணிகர். அவர் வாணிபத்தின் பொருட்டுச் செல்லும் இடங்களுக்குத்தம் மைந்தனை அழைத்துச் செல்வார். அவர் வாணிகத்தின் பொருட்டு எட்டயபுரம் செல்ல நேர்ந்தது. வழக்கம்போல்

அவர் தம் மகனையும் அங்கு அழைத்துச் சென்றார். அவர் கடிகை முத்துப்புலவரை வணங்கி, "கவிஞரே இவன் எனது மகன். இன்று முதல் இவன் உங்கள் மகன். கல்வியிற் பெரியவனாய், கவிபாடுங் கவிஞனாய் இவனை நீங்கள் செய்யவேண்டும். இவனை உங்களிடமே விட்டுச்செல்கிறேன். ஏற்றுக்கொள்வீராக" என்றார்.

புலவர் உமறுவை உற்றுநோக்கி, யோசித்து' உடன் பட்டார். கல்வி கற்பிக்கத் தொடங்கினார். அரசனிடத்து அன்புள்ள குடிபோல் உமறு பணிந்து கற்றார். இவர் இறுதியில் புலவரிடம் விடைபெற்றுச் சென்று, 'சீறாப் புராணம்' என்னும் காவியத்தைப் பாடினார். அது மகமது நபியின் வரலாற்றைக் கூறுகிறது.

## ஆறு மலர்கள்

கடிகை முத்துப் புலவர் தனிப் பாடல்களாம் மலர்களால் தமிழ்த் தாயை அலங்கரித்தார்; மாலையாகவும் சார்த்தி மகிழ்ந்தார். எட்டையபுரத்து அரசர்மீது சமுத்திர விலாசமும் காமரச மஞ்சரியும் பாடினார்; அன்றியும் திருவிடைமருதூர் அந்தாதி இயற்றினார். ஊற்றுமலை ஜமீன்தார் மருதப்ப தேவர் மேல் மதனவித்தார மாலை பாடிப் பரிசு பெற்றார்; சிவகிரி ஜமீன்தார் வரகுணராம வன்னியனார்மீது திக்கு விசயம் என்னும் சிறந்த நூல் இயற்றினார்; பின்னர் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

# 8. கற்புக் கதிர்

## அருட் காவிரி

முற்காலத்துத் தமிழகம் நாகரிகத்திலும் கல்வியிலும் அறிவிலும் மலைவிளக்காய் விளங்கிற்று. ஆண்மை மிகுந்த ஆண்களும் கற்புமிகுந்த பெண்களும் அவற்றில் சிறந்திருந்தனர். பாடும் புலமை பெற்றுப் பாடிய பெண் புலவர் பலர். செய்யுள் நூல்கள் இயற்றிய மாதரசிகள் பலர். தனித்தனிப் பாடல்கள் பாடிய பெண்மணிகள் அவரினும் பலர். கம்பர் வீட்டு வேலைக்காரியும் கவி பாடினாள். சரித்திர அறிவு பெற்று உளக்கண் கொண்டு பார்ப்போர்க்குப் பழந் தமிழகத்தின் நிலை நன்கு விளங்கும்.

“சோழ வளநாடு சோறுடைத்து,” என்று ஔவைத் தாயால் சிறப்பிக்கப்பட்டது சோழ நாடு. அந்நாட்டின் வளத்திற்குக் காரணம் காவிரி என்னும் காரிகை. அவள் சேர நாட்டின் வளத்தையெல்லாம் வாரிக் கொண்டுவந்து சோழ நாட்டில் கொட்டுகிறாள். சேர நாட்டிலுள்ள பல ஆறுகள் மடுவுகள் முதலானவற்றைத் தன்னுள் அடக்கிச் சோழ நாடு வந்ததும் அவள் பலவாகப் பிரிந்து அந்த நாட்டைச் செழிக்கச் செய்கிறாள். என்னே அவள் அந்நாட்டு மக்களிடம் கொண்ட அன்பு! அந்நாடு என்றும் செந்தமிழ் மணக்கும் திருநாடாக இருக்கவேண்டும் என்று அவள் எண்ணுகிறாள். அவள் எண்ணம் வாழ்க.

சிறைப்படல்

நிலவளம் மிகுந்து நீர்வளம் சுரக்கும் சோழ நாட்டில் திருக்கண்ணபுரம் என்னும் சிறந்த திருப் பதி உண்டு. அது வைணவத் திருப்பதிகள் நூற் றெட்டினுள் ஒன்று. அவ்வூரில் முனையதரையன் என்னும் படைத் தலைவன் இருந்தான். அவன் வீட்டினில் இருந்த தாதியருள் ஒருத்தி வழிந்தொழு கும் அழகும் நிறைந்தோடும் புலமையும் உடைய வள். அந்த நல்லியல்புகள் முனையதரையனைக் கவர்ந்தன. முனையதரையன் அவளை மணந்தான்.

விக்கிரம சோழனது படைத்தலைவன் முனைய தரையன். அவன் வீர விளக்காய், ஒழுக்க மணி யாய் விளங்கினான். சோழநாட்டின் ஒரு பகுதிக்கு அவனைச் சர்வாதிகாரியாக்கினான் விக்கிரம சோழன். கண்களை இமைகாப்பன போல் முனையதரையன் அந்நாட்டைப் பாதுகாத்தான். சில ஆண்டுகள் அப்பகுதி இன்பத்தில் விளையாடிற்று. பின்பு பல ஆண்டுகள் துன்பத்தில் தூங்கிற்று. அந்நாட்டில் மழை பெய்ய வில்லை. ஆயினும் சூரியன் தன் வெயிலை வீச ஓயவில்லை. நில மகளின் உடல் பலவாக வெடிப்புண்டது. நீர் மகள் எங்கோ சென்று மறைந்து விட்டாள். மரங்கள் அழகழிந்து பசுமையற்ற கிளை களே காணப்பட்டன. உண்ணும் உணவிற்கும் உடுக்கும் உடைக்கும் மக்கள் படாதபாடு பட்டனர்.

அத்துன்பத்தைக் கண்டு முனையதரையன் மிக வும் வருந்தினான். பஞ்சம் அவன் நெஞ்சை உருக் கிற்று. அவன் ஆங்காங்கு அறக்கூழ்ச்சாலைகள்

பல ஏற்படுத்தினன். அவன் கையிலிருந்த பொருள் செலவாயிற்று. அதனல் அவன் மிகவும் வருந்தினன்; சிந்தித்தான். விக்கிரம சோழனுக்குக் கொடுக்க வேண்டிய திறைப் பொருளைப் பஞ்சத்திற்குச் செலவழித்தான். சில ஆண்டுகள் பஞ்சப்பேய் தலைவிரித்தாடிற்று. பின் ஆண்டவன் அருள்போல் பெருமழை பெய்தது. நல்லோர் மனம்போல் நாடு செழித்தது.

முனையதரையன் சோழனுக்கு கொடுக்கவேண்டிய திறைப்பொருளைக் கொடுக்க முடியவில்லை. சோழன் பல முறை கேட்டான். முனையதரையன் கொடுக்க முயன்ருன்; முடியவில்லை. விக்கிரமன் வெகுண்டு முனையதரையனைச் சிறையிலிட்டான். முனையதரையனுக்குச் சிறைவாழ்க்கை சிறிது துன்பமாய் இருந்தது. 'நான் சோழன் திறைப் பொருளைச் சொந்தச்செலவிற்குச் செலவிடவில்லை;பஞ்சத்திற்கே செலவிட்டேன். அப்பணம் ஏழைகள் பசிப்பிணிக்கு மருந்தாயிற்று. பலர் இன்புற்றனர்,' என்று பின்னர் அமைதியாக இருந்தான்.

**விடுதலை**

முனையதரையன் சிறைப்பட்ட செய்தி அவன் மனைவியாகிய தாதிக்குப் பெருந்துன்பத்தை உண்டாக்கிற்று. அவள் அழுது புரண்டாள்; கதறினள்; அவனது ஊறிய அன்பினை நினைந்து நினைந்து உருகி உருகிப் பல செய்யுட்களில் அமைத்துப் பாடினள்; புலம்பினள்.

"இன்று வரின் என்னுயிரை நீ பெறுவாய். நாளைவரின் அதுவும் நீயறிவாய். நமது கட்டுண்ட

அன்பினை நெஞ்சத்தில் நீ நினையாயோ?" என்னும் அன்புக் கருத்தைப் பொருத்தி ஒரு செய்யுளியற்றி முனையதரையனுக்கு அவள் அனுப்பினுள்; அவன் அதனைக் கண்ணுற்றுக் கண்ணில் ஒற்றினுன். அவ்வளவுதான். அவனது வீரக்கோயிலாம் உடல் கீழே சாய்ந்தது. அன்பு உருகி நீராகப் பெருகி அந்த ஏட்டை அபிஷேகம் செய்தது. பெட்டி, கதவு முதலாயினவற்றைப் பூட்டப் பூட்டு உண்டு; அன்பினைப் பூட்ட ஒரு பூட்டும் இல்லையன்ருே! "இன்றைக்கு நீ நின்று வரின் அதுவும் நீயறிவை," என்னும் அப்பாட்டின் தொடர்தான் முனையதரையனை மூர்ச்சையாக்கிற்று. "இன்று வராமல் நாளை வருவாவாயின் என்னைப் பிணமாகக் காண்பாய்," என்பது அதன் பொருள். இவ்வாறு வெளிப்படையாகச் சொன்னுல் அவன் மிக வருந்துவான் என்று, 'இன்று வராமல் நாளை வருவாயாயின் அதுவும் நீ அறிவாய்' என்று அவள் மறைமுகமாகக் கூறிய பாட்டின் நயம் முனையதரையனது உள்ளத்தை மிகவும் எரித்தது. சிறையில் பூட்டப்பட்டிருக்கும் அவனுல் அவளை எப்படி மகிழச்செய்ய முடியும்?

முனையதரையன் சிறிது நேரம் நிலமகள் மடி மீது கிடந்து உணர்ச்சி பெற்றெழுந்து, "என் ஆருயிரே, துன்பம் வந்தபோது உயிர்விடுவது கோழைகளின் இழிசெயல். துன்பத்தைப் பார்த்துச் சிரிப்பதுதான் வீரத்திலும் வீரம். நான் இன்னும் சில நாட்களுக்குள் விடுதலையடைவேன். நான் சிறையில் இராசபோகம் அனுபவிக்க அரசர் ஏற்பாடு செய்திருக்கிருர். எனக்குக் குறைவில்லை. நீஉறுதியுடன் உயிர்வைத்திருக்க வேண்டுகிறேன்,"

என்று ஒரு சீட்டெழுதி அனுப்பினான். அதனைக் கண்ணுற்று உறுதிபெற்றாள் தாதி. தன் தலைவன் விடுதலை பெறத் தெய்வம் தவிர வேறு வழியில்லை என்ற முடிவிற்கு அவள் வந்தாள்.

திருக்கண்ணபுரத்தில் திருக்கோவில் கொண்ட திருமால்மீது பல பாடல்களைப் பாடித் தன் தலைவன் விடுதலை பெற வேண்டி உடல் குழைந்தாள். தன் உள்ளத்தைக் கோவிலாக்கித் திருமாலை அதனுள் இருத்தி, அன்பு மலரிட்டு, அறிவு விளக்கேற்றி அவள் உருகினாள். உருகி, "என் தலைவனாகிய முனையதரையன், ஐந்து நாட்களுக்குள் சிறையி லிருந்து விடுதலை பெற அருள் புரிக. இல்லையேல் நான் தீயிற் பாய்ந்து ஆவியை விடுவேன்," என்று ஆண்டவனிடத்தில் கூறி வரங்கிடந்தாள். அடி யார்க்கு எளியவனான ஆண்டவன் சோழன் கனவிலே தோன்றி, "அன்பனே, முனையதரையன் ஏழைகளுக்குத்தானே உனது திறைப் பொருளைச் செலவிட்டான்? நீ அவனைச் சிறை செய்தது தவறு. உடனே அவனை விடுதலை செய்," என்று கூறி மறைந்தார்.

விக்கிரம சோழன் விழித்தான்; துடித்தான். அக்காரிருளில் நேரில் சென்று சிறைவாயிலை அடைந்தான். சிறைச்சாலை அதிகாரிகளும் காவல ரும் திகைத்தனர். சிறைக்கதவு திறக்கப்பட்டது. சோழன் உள்ளே சென்று முனையதரையனைக் கட்டித் தழுவி, "அன்பரே, மன்னிக்க வேண்டும். உமது பெருமையை அறியாமல் உம்மைச் சிறையி லிட்டேன். உம்மாலன்றோ மந்திர மறைகட்கு எட்டாத் திருமால் கனவில் தோன்றினார்? நான் கண் குளிரக் கண்டேன். இதனைவிட வேறு பேறு யாது? உம்மை விடுதலை செய்யத் திருமால் கட்டளை

விட்டார். அதன்படி உம்மை விடுதலை செய்கிறேன்," என்று விடுதலை செய்தான்.

"அரசே, வருந்தாதீர். உமது கடமையைச் செய்தீர். கடமையைச் செய்வது எப்படிக் குற்றமாகும்? நான் போய்வருகிறேன்," என்ருன் முனையதரையன்.

"திருக்கண்ணபுரப் பகுதிக்கு முன்போலவே உம்மைத் தலைவனுக நியமித்துள்ளேன். இத்தேரில் உமது ஊருக்குச் செல்க," என்று சோழன் கூறினுன். முனையதரையன் அவ்வாறே தன்னூரை யடைந்தான்.

ஊரார் மகிழ்ந்தனர். இடி உருண்டது போன்ற தேரொலி தாதியின் தியானத்தைக் கலைத்தது; "தன் தலைவர் வருகிருரோ?" என்று வெளியில் சென்று பார்த்தாள்; மகிழ்ந்தாள்.

அவனை வணங்கி முகமலர்ந்து உள்ளே அழைத்துச் சென்ருள். நடந்தவற்றை எல்லாம் ஒருவருக்கொருவர் கூறி மகிழ்ந்தனர்.

தாதி அறுசுவை உணவு சமைத்துத் தன் தலைவனுக்கு உண்பிக்கையில் அவன் அதனைத் திருக்கண்ணபுரத்துத் திருமாலுக்கு உரிமையாக்கி உண்டான். அப்பெருமாள் திருமேனியில் அந்நெய்யுணவின் நெய் வழிந்திருப்பதை மறுநாள் தருமகர்த்தா முதலியோர் கண்டு திகைத்தனர். பின்னர், உண்மையறிந்து முனையதரனைப் போற்றினர். அவன் அன்று முதல் திருக்கண்ணபுரத்துத் திருமாலுக்குப் பொங்கலமுது நாள்தோறும் படைக்குமாறு ஏற்பாடு செய்தான். அது இன்றும் நடக்கிறது. அதற்கு, 'முனையோதனம்' என்று பெயர். விக்கிரம சோழன் உலாவும், சோழ மண்டல சதகமும் இச்செய்தியைச் சிறப்பிக்கின்றன.

# 9. ஆந்திரத்தில் அருந்தமிழ்

பிறப்பு

**செ**ங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது திருவெவ்வுளூர் (திருவள்ளூவர்). அதன் வடக்கில் பதினெட்டுக்கல் தொலைவில் நாகலாபுரம் இருக்கின்றது. அதன் வடக்கில் ஒரு மலை நிமிர்ந்து நின்று அழகிய காட்சி அளிக்கின்றது. திருமாலின் மார்பில் முத்தாரம் நெளிந்து அசைவதுபோல் அம்மலை அருவி விழுகின்றது. அதன் பக்கத்தில் குளிர்ந்த ஆறு தவழ்ந்து செல்கின்றது. அதன் பெயர் ஆரணிய ஆறு.

அம்மலைக்கும் ஆற்றுக்கும் சிறப்பளிக்கின்றது நாகலாபுரத் திருமால் கோவில். அம்மலையின் பசுமைக் காட்சியும் ஆற்றின் குளுமைத் தன்மையும் கோவிலின் அருட்காட்சியும் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. அவ்வூரின் வடக்கில் ஓர் ஏரி இருக்கின்றது. அதன் பெயர் சிவப்பேரி. அதன் நீர் செக்கச் செவேலென்றிருப்பதால், அதனைச் சிவப்பேரி என்கின்றனர். அதன் தென்மேற்கில் ஓர் ஏரி இருக்கின்றது. அது திருமாலின் திருமேனிபோல் இருப்பதால் அதனைக் கறுப்பேரி என்கின்றனர்.

'ஓர் ஊருக்கு ஏரி இரண்டிருக்க வேண்டும்,' என்று கம்பர் கூறுகின்றார். அதுபோல நாகலாபுரத்திற்கு இரண்டு ஏரிகள் உள்ளன. 'ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்' என்று ஔவையார் கூறுகின்றார். நாகலாபுரம் ஆற்றின் அழகைப் பெற்று விளங்

குகின்றது. புலவர்களின் சிந்தனையைக் கவர்கின்ற பொருள்களுள் மலையும் ஒன்று. ஓரழகிய மலை நாகலாபுரத்தில் காட்சி அளிக்கின்றது.

கிருஷ்ணதேவராயர் சிறந்த பக்தர்; உயர்ந்த கலைஞர்; நல்ல அரசர். இந்த நற்குணங்களுக்கேற்ப அவர் தமது தாயைத் தெய்வமெனப் போற்றினர். மலையும் ஆறும் உள்ள இடத்தில் அவர் ஓர் ஊரை உண்டாக்கி அதற்கு நாகலாபுரம் என்று பெயரிட்டு மகிழ்ந்தார். அவரது திருத்தாயார் பெயர் நாகலா தேவி. இத்தகைய சிறந்த பண்புகள் எல்லாம் அப் புண்ணிய சீலரிடம் பொருந்தி மெருகு பெற்றன.

கோடைக்காலத்திலும் குளிர்காலத்திலும் ஒரே தன்மையாய்ப் பச்சைப்பசேலென்று காட்சி அளிக்கின்றது நாகலாபுரம். அங்குள்ள சாத்துக்குடி மரங்களே அக்காட்சியை அளிக்கின்றன. கதிரவனின் வெப்பமும் பனியின் தட்பமும் நிலமகளைத் தாக்காதபடி குடைபோலக் குவிந்து காக்கின்றன அம்மரங்கள். அவை கழுத்தொடியக் காய்த்துப் பழுத்துக் குலுங்குகின்றன. வறுமையிலும் வாழ்விலும் நிலை மாறுபடாத நல்லோர் போல அவை காயாக இருக்கும்போதும் பச்சை நிறம்; பழமாக இருக்கும் போதும் பச்சை நிறம். அப்பழங்கள் வடநாட்டார் வாய்களில் குடிபுகுந்து தென்னட்டை மறக்காமல் செய்கின்றன.

கி. பி. பதினைந்தாம் நூற்றண்டின் பிற்பகுதியில் நாகலாபுரத்தில் திருவேங்கடமுடையார் என்பவர் வாழ்ந்துவந்தார். அவர் வேளாளர்; களப்பாளக் குடியினர். அவர் மனைவியார் பெருமாள் முதலிச்சி

யார். செந்தமிழும் சுவையும்போல் இருவரும் பிரிக்க முடியாத அன்புடையவராய், இல்லறநெறி தவருத வராய், திருமால் பக்தராய் இன்புற்று வாழ்ந்தனர்.

வடமலையார், தெய்வங்கள் பெருமாள் முதலி யார், திருமலையப்பர், கிருஷ்ணன் என்னும் நால்வர் அவர்கட்குப் புத்திரர். கிருஷ்ணன் என்பார்தான் அரிக்கு அடிமை பூண்டு அரிதாசராஞர். அவர் குழந்தையாய் இருந்தபோது, ' பிற்காலத்தில் இவர் அரிதாசர் ஆவார்,' என்று யாராகிலும் நினைத்திருப் பார்களா ? ஒரு மரத்தில் முன்னே தோன்றுகின்ற மணமலரும் பின்னே தோன்றுகின்ற இன்கனியும் சிறப்புறுகின்றன. அதுபோல முன்னே தோன்றிய வடமலையாரும் பின்னே தோன்றிய அரிதாசரும் சரித்திரப் புகழ் பெற்றனர் ; அழியாப் பேறும் பெற்ற னர்.

கிருஷ்ணதேவராயரின் நல்லமைச்சருள் ஒருவ ராய், அருந்தமிழ்ப் புலவருள் ஒருவராய் வடமலை யார் விளங்கிஞர். அவ்வரசரின் அறத்திற்குத் தலை வராய், செந்தமிழ்ப் புலவருள் ஒருவராய்த் திகழ்ந் தார் அரிதாசர். வடமலையார் முதலிய நான்கு நற் புத்திரர்களைக் கண்டு, 'இவர்களின் தந்தை கலியு கத்தரசன்,' என்று திருவேங்கடமுடையாரை உலகம் போற்றிற்று.

**தானம்**

திருவேங்கடமுடையார் பெருஞ்செல்வர். அவர் பிள்ளைகள் நால்வரும் செல்வத்தில் தவழ்ந்து, அறத்தில் நடந்து, கல்வியில் இருந்து வளர்ந்தனர். அவர்கட்குக் கல்விவளர்ந்ததுபோல் ஒழுக்கமும்

வளர்ந்தது. அவர்கள் பல அறங்களைப் பல இடங்களிற் செய்தனர். எடுத்துக் காட்டாக ஒன்றினைக் கூறுகின்றேன்.

'திருவேங்கடமுடையார் என்பவரின் புத்திரர்களான வடமலையார், தெய்வங்கள் பெருமாள் முதலியார், திருமலையப்பர் என்ற மூவர், தம் தாயார் பெருமாள் முதலிச்சியார் புண்ணியமாகவும் அரசர் கிருஷ்ணதேவராயர் தன்மமாகவும் குறுமுரை என்ற ஊரைக் கோயிற்கு உதவினர்,' என்று திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டுக் கூறுகின்றது.

## திருப்பணி

இந்து சமயச் செங்கரும்பை வளர்த்த மன்னர் கிருஷ்ணதேவராயர். அவர் மகாமகத்திற்குக் கும்பகோணம் சென்றார். யானைகளும் குதிரைகளும் பரிவாரங்களும் அவரைச் சூழ்ந்து சென்றன. கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சிறந்த திருப்பதி ; கைத்தொழில் நகர். காவிரிக்கரையில் அது இருப்பதால் அதற்குக் குறைவேது ? கும்பகோணக் கோதையின் பச்சைப் பட்டுச்சேலை போலச் செந்நெற் பயிர் சூழ்ந்துள்ளது. அங்குக் கணக்கற்ற வாழைத் தோட்டங்கள் காட்சி அளிக்கின்றன ; கழுத்தொடியக் காய்த்துள்ள தென்னந் தோப்புகள் கணக்கில் அடங்கா ; அகத்தி மரங்களில் பின்னிக் கிடக்கும் வெற்றிலைக் கொடிகள், கணவனைப் பிரியாக் கற்பரசிகள் போலக் காட்சி அளிக்கின்றன.

இவை கும்பகோணத்தின் புறக்காட்சி ; அகக் காட்சி கோயில்களும் குளங்களும் ! எத்தனை

கோயில்கள் ! எத்தனை குளங்கள் ! புறக்காட்சிகளைக் கண்களாற் பருகிக்கொண்டே கிருஷ்ண தேவராயர் கும்பகோணத்துட் புகுந்தார். அவர்க்கு முதன்முதலில் காட்சி தந்தவை சிற்பக்கோபுரங் களும் விமானங்களுமே. வடநாடும் தென்னாடும் ஒன்றாகக் கலந்திருந்தன மகா மகத் திருவிழாவில். அன்று அந்நகரைக் கும்பகோணம் என்று கூறுவதைவிட மனிதக்கடல் என்று கூறலாம்.

கிருஷ்ணதேவராயர் அக்காட்சியைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்து தம் நாட்டுக்குத் திரும்பினார்; சிதம்பரத்தை அடைந்தார்; அங்கே நடமாடும் கூத்தப் பெருமானையும் கண்ணுறங்கும் கார் மேகவண்ணனையும் உடலுருக, உள்ளம் குழைய வணங்கினார். அவர் உள்ளத்தில் ஒரு பேராவல் பிறந்தது. 'அழியா இறைவற்கு அழியாக் கோபுரம் ஒன்று கட்டவேண்டும்,' என்று அவர் சிதம்பரக் கோவிலின் வடக்குக் கோபுரத்தைக் கட்டி முடித்தார். அவரது உள்ளம் பூரித்தது; கண்கள் குளிர்ந்தன.

அவர் கோபுரத்தின் அடியிலிருந்து அதனை அண்ணாந்துபார்த்தார். அவருடைய அருட் கண்கள் அதன் உச்சிக்கு ஓடவில்லை. அவ்வளவு உயரம் அக்கோபுரம்! கிருஷ்ணதேவர் அங்கிருந்து புறப்பட்டு நாகலாபுரத்தை அடைந்தார்; அங்குள்ள குடிகளை அழைத்து, "உங்களுக்கு ஏதேனும் குறை உண்டா?" என்று வினவினார். அவர்கள் அவரை வணங்கி,

"அறநெறி தவறா அரசே, முன்னே அயல் நாட்டரசர் பயிர்களை அழித்தனர்; ஊரைக் கொள்ளையடித்தனர்; ஏரிகளை உடைத்தனர். அக்கொடி

யவர்களை நாட்டைவிட்டு ஓட்டிவிட்டனர். இப்போது நிலம் நன்றாக விளைகின்றது. மக்களுக்குப் பசி எடுப்பதில்லை ; அதனால் அவர்கள் நன்கு உழைப்பதில்லை ; அவர்களைச் சோம்பேறிகளாக்கிவிட்டனர். விளைந்த விளைச்சலை அறுப்பதற்கு ஆள் கிடைக்காமையால் அது நிலத்திற்கு எருவாய் விடுகிறது.

" இவ்வூரில் ஒரு சான்றோர் இருக்கிறார் ; அவர் பெரும் புலவர் ; திருமாலின் சிறந்த பக்தர், அரிதாசர் என்னும் காரணப்பெயரை உடையவர் ; உங்கள் அமைச்சர் வடமலையப்பருக்குத் தம்பி; அவர், பத்தியின் பெருமையையும் கல்வியின் சிறப்பையும் மக்கள் உள்ளத்தில் நட்டுவிட்டார். அதனால் பத்தியிலும் கல்வியிலும் நாட்டத்தைச் செலுத்திப் பயிர்த் தொழிலை மக்கள் மறந்துவிட்டனர். இரவெல்லாம் சிலர் கூத்தாடி மகிழ்கின்றனர் ; பலர் கண்டு களிக்கின்றனர் ; பொழுது புலர்ந்ததும் உண்டு உறங்குகின்றனர். உங்கள் ஆட்சியில் கஞ்சிக்குப் பஞ்சமில்லை ; அதனால் கவலை இன்றிக் களியாட்டத்தில் மூழ்கி உள்ளனர் " என்றனர்.

அதனைக் கேட்டதும் கிருஷ்ணதேவராயரின் முகம் மலர்ந்து அதில் புன்னகை தவழ்ந்தது. அப்போது அம் முகத்தின் பேரெழிலை யாரால் எழுத முடியும் ! சொல்ல முடியும் ! அரிதாசரோடு பேச அவர் வாய் விரும்பிற்று ; அவரைக் காண அவர் கண்கள் அவாவின. அவர் அவர்களைக் குளிர நோக்கி, " அரிதாசரை நாளைக்கு அழைத்து வாருங்கள் " என்றார். அவர்கள் அதற்கு உடன்பட்டு வணங்கிச் சென்றனர். கதிரவன் மேல் கடலுள் மூழ்கும் நேரம் அது.

மாலைக்காலத்துக்குப் பின் இருள் சூழ்ந்தது. கூத்துக் கற்றுக்குட்டிகள் ஒத்திகையில் இறங்கி விட்டனர். கூத்து ஒரு புறம் நடந்தது. கூத்தாடிகள், தேவர்களாகவும் அரசர்களாகவும் ஆண்டிகளாகவும் மாறிவிட்டார்கள். ஆடம்பரமும் அலைமனமும் உறங்கிவிட்டன. கூத்துப் பார்ப்போரும் ஞானிகளும் மாணவரும் உறங்கவில்லை. திருடர் பயம் இல்லாமையால் வீட்டின் கதவுகளும் மூடவில்லை. தொழுவத்தில் கட்டிக் கிடந்த பசுக்களுள் சில கன்று போடுவதற்குத் துன்புற்றுக்கொண்டிருந்தன. கோழிகள் கூவப் பொழுது புலர்ந்தது.

" முடவன் ஓவியம் தீட்ட எண்ணுவது போலத் திருக்கோவில் கட்ட வேண்டும் என்று எண்ணுள்ளம் துடிக்கின்றது. இவ்வூரில் சிறந்த கோவில் ஒன்றும் இல்லை, என் செய்வேன்! நாராயண மூர்த்தியே, அடியேன் எண்ணத்தை ஈடேற்றுக" என்று அரிதாசர் தியானத்திலிருந்து எழுந்தார். அவரது எண்ணத்தை ஈடேற்ற இறைவர், கிருஷ்ணதேவராயரின் கனவில் எழுந்தருளினர். அடியார்க்கு எளியவன் ஆண்டவன்.

" என்னே! திருமால் என்மீது கொண்ட கருணை! அவர், அடியேன் கனவில் எழுந்தருளினர்! 'எனக்கொரு கோவில் கட்டி ஓரடியவனின் எண்ணத்தை ஈடேற்றுக' என்றார். அந்நல்லடியார் யாரோ? திருமால் தந்த காட்சி என்னுள்ளத்தை விட்டு அகலவில்லை; அவர் திருவாய் மலர்ந்தது அடியேன் காதுகளைவிட்டு நீங்கவில்லை" என்று கிருஷ்ணதேவர் துயிலெழுந்தார். சான்றோர் சென்று அரிதாசரை வணங்கி,

“ புலவர் திலகமே, பாகவதர் மணியே, உங்கள் பெருமையைக் கிருஷ்ணதேவராயர்க்கு எடுத்துரைத்தோம். அவர் மிக மகிழ்ந்து தங்களை அழைத்து வரக் கூறினர் ; நாங்கள் வந்தோம் தாங்கள் எழுந்தருள்க ” என்றனர்.

அரிதாசர் புறப்பட்டார். அவர் இடையில் பஞ்சகச்சமும் தோளில் பட்டங்கி வேட்டியும் அணிந்திருந்தார். அவரது பொன்மேனியில் பன்னிரு திருநாமங்கள் திகழ்ந்தன. அவை மல்லிகை மாலையின் இடையில் செவ்வலரி ஆரம் தொங்குவது போல் இருந்தன. அத்தெருவில் ஒருவர் இருவர் நடமாடிக்கொண்டிருந்தனர். மற்றவர்கள் கழனிகளுக்குத் தொழில்மேற் சென்றிருந்தனர். பசுக்கள் மேயச் சென்றிருந்தன. தாய்ப் பசுக்களைக் கூப்பிடும் கன்றுகளின் கூப்பாடும் தாய்மாரை நினைத்து அழும் குழந்தைகளின் அழுகுரலும் அரிதாசர் காதுகளில் நுழைந்தன. அவர் மிகவும் வருந்தினர். கோவணம் அன்றி வேறுடை இல்லாக் கிராமச் சிறுவர்கள் தெருவில் கோலியாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டு மகிழ்ந்து சென்றார் அரிதாசர்.

கிருஷ்ணதேவராயர் அவரைக் கண்டு மகிழ்ந்து, இன்சொற் கூறி, இருக்கை ஈந்து, “ உங்களால் இந்நாடு அறப்பாதையிற் செல்கிறது ; கலைக்கடலுள் மூழ்குகிறது; இன்பத்தேன் உண்கிறது; பாவேந்தரால்தான் கோவேந்தர்க்குப் பெருமை. கோவேந்தர் குடிகளிடம் வரிப்பொருள் பெற்று இன்பக்கடலுள் மூழ்குகின்றனர் ; குடிகளுக்கும் நன்மை செய்கின்றனர். புலவர்களோ உலகத்தாரிடம் வரிப் பொருள் பெருமல் உலகை நன்னெறியிற் செலுத்துகின்றனர். அதனால் கோவேந்தரினும் பாவேந்தர் சிறந்தவர்.

"பரமபதநாதன், பச்சைமேனியன், பவளச் செவ்வாயன், தாமரைக்கண்ணன் கனவில் தோன்றி ஒரு கோவில் கட்டக் கட்டளை இட்டுள்ளான். அத் திருப்பணியைத் தங்கள் பெயராலேயே நடத்த முடிவு செய்துள்ளேன். கோவில் கட்டியபின் அந் நிருவாகம் அனைத்தையும் தங்களிடம் கொடுப்பேன். தாங்கள் அதனை ஏற்று ஆள வேண்டுகின்றேன்" என்றார்.

"வெற்றிவேலரசே, உங்களது கனிந்த அன் பிற்கும் கோயிற் பணிக்கும் என் நன்றியும் வணக் கமும். 'கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?' நான் நாராயணமூர்த்தியை வேண்டியது அவர்க்கொரு கோயில்; அது தங்கள் மூலம் கிடைத்தது. அதனால் நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேது?" என்று அரிதாசர் கூறினார்.

"அரிதாசரே, நீங்கள் மனிதராகப் பிறந்த மாணிக்கம்! புலவராக வாழும் பெருந்தவசி! எனக் கொரு கோவில் கட்டி ஓரடியவனின் எண்ணத்தை ஈடேற்றுக' என்று கார்மேக வண்ணன் எனக்குக் கூறிய நல்லடியார் நீங்கள்தான். ஆயின் உங்களது பத்தி எவ்வளவு ஆழமோ? புலமை, எவ்வளவு உயரமோ!" என்று பாராட்டினார் கிருஷ்ணதேவ ராயர்.

அன்றே அவர் நாகலாபுரத்தில் ஒரு பெருமாள் கோவில் கட்டத் தொடங்கிச் சில நாட்களுக்குள் முடித்தார். அது பெரிய கோவிலும் அன்று; சிறிய கோவிலும் அன்று; நடுத்தரமான நல்ல கோவில். அதில் எழுந்தருளிய திருமால் பெயர் நீலமாணிக்கத் தேவர்.

கிருஷ்ண தேவராயர் அக்கோவிலுக்குக் கும்பா பிஷேகம் செய்து அதன் நிருவாகப் பொறுப்பை

அரிதாசரிடம் ஒப்படைத்து மகிழ்ந்தார். அரிதாசரும் மகிழ்ந்து,

"விசயநகர மன்னர்களுள் மாணிக்கமே, தாங்கள் மறந்துவிட்ட ஒன்றினை நினைவூட்ட விரும்புகின்றேன். பெருமாளின் திருவமுதுக்கும் இன்னிசை பாடுதற்கும் நாட்டியம் ஆடுதற்கும் மகாவாத்தியாதிகளுக்கும் நீங்கள் உதவிபுரியக் கோருகிறேன். பாமரமக்கள் பரமனை மறந்திருக்கின்றனர். அவர்களைக் கோயிலுக்கு வரவழைக்கவே சான்றோர் ஆடல்பாடல் முதலானவற்றைக் கோயிலில் ஏற்படுத்தினர்" என்றார் அரிதாசர்.

"எத்தனையோ அரசியல் வேலைகள் என்னைத் தாக்குகின்றன. அதனால் இப்போது நீங்கள் கூறியதை மறந்தேன். நீங்கள் நினைவூட்டியதற்கு நன்றி. பெருமாளின் திருவமுது, நந்தாவிளக்கு முதலானவற்றிற்கு இந் நாகலாபுரத்தைச் சர்வமானியமாகக் கொடுத்துவிட்டேன்' என்று கிருஷ்ணதேவராயர் அவ்வறத்தைக் கல்லில் செதுக்கினார். சாலிவாகன் சகாப்தம் 1445(கி.பி.1521)சுபானு ஸு, கார்த்திகை மாதம், திங்கட்கிழமை, சுக்கில பட்சம், உத்தான துவாதசியில் அவ்வறம் செய்யப்பட்டது. அரிதாசர் மகிழ்ந்தார்.

### இருசமய விளக்கம்

அவர் நாகலாபுரத்தில் இருந்து அக்கோவில் நிருவாகத்தை ஏற்றுச் சிறப்புறச் செய்தார்; அவர் பொன்னாலும் மணியாலும் பூவாலும் திருமாலை அலங்கரித்தார். சொல்லாலும் சொல்லின் பொருளாலும் தமிழ்த்தெய்வத்தை அலங்கரிக்கவும் அவரது உள்ளம் அவாவிற்று. அவர் இருசமய விளக்கம்

என்னும் சிறந்த நூலை இயற்றிப் பேரின்பக்கடலுள் மூழ்கினார். திருமாலே பரம்பொருள் என்பதை அந் நூல் நிலை நாட்டுகின்றது. சைவ வைணவக் கொள் கைகளை ஆகமவல்லி, ஆரணவல்லி என்னும் பெண் கள் கூற்றில் வைத்து, 'திருமாலே பரம் பொருள்' என்று கூறுகின்றார் அரிதாசர்.

நாகலாபுரத்துக் கோவிலுக்கு, 'கோபுர மண் டப விமான ஆவரண (மதில்) ராதித் திருப்பணிகள் எல்லாம் செய்தவர்' அரிதாசர் என்று கன்னடக் கல்வெட்டுக் கூறுகின்றது. ஆனால் அக்கோபுரம் இன்று அரைகுறையாகத் துன்பக் காட்சி அளிக் கின்றது. இயற்கை அழிவுக்கு அது பலியாயிற்றோ! அன்றி அயல் நாட்டார் மதவெறிக்கு அது இரை யாயிற்றோ! ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

**சிறப்பு**

திருமாலின் திருவடிகளில் வண்டுபோன்றவரும் நீலமாணிக்கத் தேவர்க்குத் தொண்டு செய்வ தையே உறுதிப் பொருளாகக் கொண்டவரும் திருமால் பத்தருட் சிறந்தவருமான அரிதாசர்' என்று கன்னடக் கல்வெட்டு கூறுகின்றது.

ஒரு வண்டு மலரைக் கண்டு மகிழ்கின்றது; அதில் உள்ள செந்தேனை உண்கின்றது; எழுந்து அம்மலரைச் சுற்றிச் சுற்றிப் பாடுகின்றது. மீண்டும் தேனைக் குடிக்கின்றது. அவ்வாறு பலமுறை நிகழ்ந்த பின் அம்மலரிலேயே அது மயங்கி விடுகின் றது. அதுபோலத் திருமாலின் திருவடிமலரிலுள்ள

அருள்தேனை உண்டார் அரிதாசர்; செந்தமிழ்ப் பாடல்களைப் பாடினர். பாடிப்பாடி அத்திருவடி மலர்களிலேயே மயங்கினர். அதனால், "திருமாலின் திருவடிகளில் வண்டுபோன்றவர்" என்று அரிதா சரைப் பாராட்டுகின்றது கல்வெட்டு.

பரதன் தன் அண்ணனைத் தெய்வமாகப் போற்றியதுபோல் அரிதாசர் தம் அண்ணனைத் தெய்வ மாகப் போற்றுகின்றார். அப்போற்றுதலை அவர் பாடிய இரு சமய விளக்கத்தில் காணலாம்.